# உதயன்

www.onlineuthayan.com

32: பக்கங்கள் சுடர் 27 கதிர் 270 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி06 புதன்கிழமை (22/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

# ஒபாமாவின் சிறப்பு ஆலோசகர் இந்தியாவுக்கு அவசர பயணம்

## பிராந்திய பாதுகாப்பு குறித்துப் பேச்சு
## கொழும்பு உயர் வட்டாரங்கள் அதிர்ச்சி

கொழும்பு, ஓக.22

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் வெளி நாட்டுக் கொள்கைகளுக்கான ஆலோசகரும், ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத்தூதுவருமாகிய சூசன் ரைஸ் அவசர பயண மொன்றை மேற்கொண்டு இன்று இந்தியா செல்கிறார்.

பிராந்தியப் பாதுகாப்பு தொடர்பிலான பல முக்கிய விடயங்கள் குறித்துப் பேசுவதற்காக இந்தியா வரும் சூசன் ரைஸ் புது டில்லியில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், இந்திய வெளியுறவுத் துறை செயலர் ரஞ்சன் மாத்தாய் உள்ளிட்ட உயர்மட்டப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

அமெரிக்கா ஜெனிவாவில் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது அதன் பின்னணியில் இருந்து காய்களை நகர்த்தியவர் இவரே

முக்கியமானதாகக் கடந்த வருடம் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை அமெரிக்கா ஜெனிவாவில் கொண்டு வந்தபோது அதன்பின்னணியில் இருந்து காய்களை நகர்த்திய சூசன் ரைஸ், இப்போது பிராந்திய பாதுகாப்பு என்ற ரீதியில் அவசரமாக டில்லி வருவது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் வலுத்துவருவதாக இந்தியா தொடர்ச்சியாகக் கவலைகளை வெளியிட்டு வரும் நிலையில் சூசன் ரைஸின் இந்த பயணம் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

ஜெனிவாமனிதஉரிமைகள் சபையின் அடுத்த அமர்வு செப்ரெம்பரில் நடைபெறவுள்ள நிலையில் சூசன் ரைஸ் திடீரெனஇந்தியாவுக்குவருகை தருவது இலங்கைக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மனித உரிமைகள் சபையில் கடந்த கூட்டத் தொடரில் இலங்கைக்கு வழங்கப்பட்ட அவகாசத்தை அது சரியான வகையில் பயன்படுத்தியுள்ளதா என்பதை இந்த இந்திய வருகையின் போது சூசன் ரைஸ் கேட்டறிந்து கொள்வார் எனவும் ஊகிக்கப்படுகிறது. [ங-சி]


புத்தர் சிலையை முத்தமிட்டு புகைப்படம் எடுத்த பிரெஞ்சுப் பிரஜைகள் கைது 2

மாகாணசபை தேர்தல்களில் வாக்குகளை எண்ணுவதற்கு விசேட செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த எள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார் 5

நெடுந்தீவுக் கரையில் இறந்த நிலையில் 51 அடி நீளமான திமிங்கலம் கரையொதுங்கியள்ளது. 7

இந்தியாவில் வன்முறையைத் தூண்டும் வகையில் செய்திகளை வெளியிடும் இணையத் தளங்களை முடக்குவதற்கு அமெரிக்க உதவியை நாடுகிறது இந்தியா 8


## ஜெனிவா மீளாய்வுத் தொடருக்கு அனுப்பிய கடிதத்தைச் சபையில் பகிரங்கப்படுத்துங்கள்

### வலியுறுத்துகிறார் ரணில்

கொழும்பு, ஓக.22

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பதில் அறிக்கையை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்விநேரம் முடிவடைந்த பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிர

பார்க்க பக்கம் 4

## கடற்படைப் படகு மோதி மீனவர் படகு கடும் சேதம்

### சேந்தாங்குளத்தில் நேற்றுக் காலை சம்பவம்; புதிய படகு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக 22

கீரிமலை சேந்தாங்குளத்தில் கரைதிரும்பிக் கொண்டிருந்த மீனவர் படகு ஒன்று மற்றொரு படகுடன் மோதியதில் சேதமடைந்துள்ளது.

கடற்படையினரின் டோறா படகே தமது படகுடன் மோதியது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 7.30 மணி

பார்க்க பக்கம் 4

## 900 கோடியை அரசு ஏப்பம் விடத் தயார்

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.22

'திவி நெகும' என்ற சட்ட மூலத்தினூடாக சமுர்த்தி அதிகாரசபை சட்டமூலத்தை இல்லாது செய்து, 20 இலட்சம் குடும்பங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 900 கோடி ரூபா பணத்தையும் ஏப்பம் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. இதன்மூலம் அதிகாரங்கள் அனைத்தையும் ஒரே அமைச்சின் கீழ்க் கொண்டுவர அரசு நினைக்கிறது. அரசின் இந்த நடவடிக்கைகளை ஐ.தே.க. கடுமையாக எதிர்க்கின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.தே.க. பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டு மக்களிடையே கருத்து வேற்றுமையை ஏற்படுத்தக்கூடிய 'திவி நெகும' என்ற புதியதொரு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில்

பார்க்க பக்கம் 4

## பல்கலைக்கழகங்களுக்கு இன்றுமுதல் 'மூடுவிழா'

### மருத்துவபீடங்களைத் தவிர்த்து

கொழும்பு, ஓக.22

நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் மருத்துவ பீடங்கள் தவிர்ந்த ஏனைய பீடங்கள் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டிருக்கும் என்று உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்தும் இரண்டுமாத காலமாகத் தொடர்வதால் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு முயற்சியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு, பேராதனை, ஸ்ரீ ஜயவர்தனபுர, களனி, மொறட்டுவ, யாழ்ப்பாணம், றுகுணு, கிழக்கு, ரஜரட்ட,

பார்க்க பக்கம் 4

## கடல்மார்க்கமாக ஆஸி.செல்வோர் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பு

### நேற்றும் 69 பேர் கைது; இரு நாள்களில் இரண்டாவது சம்பவம்

கொழும்பு, ஓக 22

இலங்கையில் இருந்து படகு மூலம் ஆஸ்திரேலியாவிற்குச் செல்பவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்த போதும் இந்த ஆபத்தான பயணத்தை மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கின்றது.

ஆஸ்திரேலியா நோக்கிச்

பார்க்க பக்கம் 4

## இலங்கை மீது மென்போக்கை தவிர்த்து உறுதியான நடவடிக்கையில் இறங்குக

### இந்திய அரசிடம் ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஓக.22

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தொடர்ச்சியாகத் தாக்குதலுக்கு உள்ளாகும் விடயத்தில் இந்திய மத்திய அரசு மென்போக்கோடு செயற்படுகிறது. இந்த மென்போக்கின் காரணமாகவே தொடர்ந்தும் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. எனவே இலங்கை மீது உறுதியான நடவடிக்கையை இந்தியா எடுக்க வேண்டும்- இவ்வாறு இந்திய மத்திய அரசுக்கு அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

இலங்கைக் கடற்பரப்பில் நெடுந்தீவுக்கு அண்மையாக மீன்பிடியில் ஈடுபட்ட

பார்க்க பக்கம் 4

## தாளையடியில் இருந்து ஆஸிக்கு செல்ல முயன்ற 4 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக.22

வடமராட்சிகிழக்குதாளையடியில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகப் பயணித்த 4 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி 12.04 மணியவில் தாளையடி கடற்கரையில் இருந்து 4 கடல்மைல்தொலைவில், ஆழ்கடல் வள்ளமொன்றில் பயணித்துக் கொண்டிருந்த போதே குறித்த நால்வரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நால்வரும் பருத்தித்துறை மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த

பார்க்க பக்கம் 4

# அகதிமுகாமை மூடுமாறு கோரி சென்னையில் முற்றுகைப் போராட்டம்

## வைகோ. கைதுசெய்யப்பட்டதால் பெரும் பரபரப்பு

சென்னை பூந்தமல்லி சிறப்பு அகதிகள் முகாமை மூட வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்தியும், முகாமில் உண்ணாவிரதம் இருந்து வரும் செந்தூரனை விடுவிக்கக் கோரியும் அகதிகள் முகாம் முன்பு மதிமுக சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது முகாமை முற்றுகையிட முயன்ற மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டார். இதைக் கண்டித்து மதிமுக தொண்டர் தீக்குளிக்க முயன்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பூந்தமல்லி கரையான் சாவடியில் அகதிகள் சிறப்பு முகாம் உள்ளது. இந்த முகாமில் உள்ள செந்தூரன் என்பவர் கடந்த 6ம் தேதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

செங்கல்பட்டு மற்றும் பூந்தமல்லி உள்பட அனைத்து முகாம்களிலும்உள்ள இலங்கை தமிழர்களை விடுதலை செய்யக் கோரி அவர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

அவரது உயிரை காப்பாற்றக் கோரியும், முகாம்களில் இருக்கும் இலங்கை தமிழர்களை விடுதலை செய்யக் கோரியும் மதிமுக சார்பில் நேற்று காலை முற்றுகை போராட்டம் நடந்தது.

அங்கு உரையாற்றிய வைகோ, பூந்தமல்லி அகதி முகாமில் செந்தூரன் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அவரது உயிரைக் காப்பாற்ற வேண்டும். அவரை கடந்த வருடம் ஜூன் மாதம் 18ம் தேதி உரிய ஆவணம் இல்லாமல் வந்ததாக செங்கல்பட்டு முகாமில் அடைத்தனர். பின்னர் கேரள அரசிடம் ஒப்படைக்கப்பட்டார். அங்கு 2 மாதம் சிறையில் இருந்தார். அவர் மீது ஆஸ்திரேலியாவுக்கு தப்ப முயன்றதாக அங்கு வழக்கு போடப்பட்டது. ஆனால் அங்குள்ள நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

ஆனால் தமிழக பொலிஸார் செந்தூரனை கேரள போலீஸார் உதவியுடன் கைது செய்து செங்கல்பட்டு முகாமில் அடைத்தனர். அங்கு அவர் தன்னை விடுதலை செய்யக்கோரி சாகும் வரை உண்ணாவிரதம்தொடங்கினார். அதிகாரிகளும், கியூ பிரிவு பொலிஸாரும் உத்தரவாதம் அளித்ததால் உண்ணாவிரதத்தை வாபஸ் பெற்றார். ஆனால் சொன்னபடி அதிகாரிகள் நடந்து கொள்ளவில்லை.

அதனால் அவர் மீண்டும் உண்ணாவிரதத்தைத் தொடர்கிறார் என்றார் வைகோ.

ஆனால், அவர் மேடையில் இருந்து இறங்கியதும் வைகோவை கைது செய்த போலிஸார் உடனடியாகவேனில் ஏற்றிச் சென்றனர்.வைகோ கைது செய்யப்பட்டதை கண்டித்து தொண்டர்கள் பூந்தமல்லி-ஸ்ரீபெரும்புதூர் நெடுஞ்சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

அப்போது பூந்தமல்லி புதுச்சத்திரத்தைச் சேர்ந்த மதிமுக கிளைச் செயலாளர் செல்லக்கனி உடலில் பெட்ரோல் ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயன்றார். அவரை போலிஸார் உடனடியாகத் தடுத்து கைது செய்துள்ளனர். (3)

# போரின் வடுக்களால் இன்னலுறும் மக்களுக்கு சர்வதேசம் உதவ வேண்டும்

## இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி

போரின் வடுக்களால் இன்னலுறும் மக்களுக்கு நிலைத்திருக்கக் கூடிய தீர்வை வழங்குவதில், சர்வதேச சமூகம் தொடர்ந்து உதவ வேண்டும் என்று இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி சுபனய் நன்டி வலியுறுத்தியுள்ளார்.

உலக மனிதாபிமான தினம் கடந்த 19ஆம் திகதி ஐ.நா. சபையால் அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கையில் கடந்த ஞாயிற்றக்கிழமை காலை கொழும்பிலுள்ள ஐ.நா. வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் சிரேஷ்ட அரசின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் உரையாற்றிய ஐ.நாவின் வதிவிடப்பிரதிநிதி மேலும் தெரிவித்ததாவது:

உலகளாவிய ரீதியில் மனிதாபிமானப் பணியாளர்கள் நாளாந்தம் பல்வேறு பட்ட அச்சுறுத்தலான சூழ் நிலைகளை எதிர்கொள்கின்றனர். மற்றவர்களுக்கு உதவும் அதேவேளை அபாயம் மற்றும் ஆபத்தை எதிர்நோக்கும் பணியாளர்களை நினைவு கூரும் நாளாக இது உள்ளது.

வடமாகாணத்திலுள்ள இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கும் முயற்சிகளைப் பாராட்டவேண்டும்.

அதேவேளை நாட்டில் நிலைத்திருக்கக்கூடிய சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் எஞ்சியுள்ள மனிதாபிமானத் தேவைகளை அடையாளம் காண்பதற்கு ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

போரின் வடுக்களால் இன்னலுறும் மக்களுக்கு நிலைத்திருக்கக் கூடிய தீர்வுகளை வழங்குவதில் நிதியுதவி வழங்கும் சமுதாயம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தீர்க்கப்படாத மனித நேயத் தேவைகளையும் சவால்களையும் தீர்ப்பதற்கும் எதிர்கொள்வதற்கும் ஐ.நா. அமைப்புகள் வழங்கி வரும் ஆதரவை இலங்கை அரசு மெச்சியுள்ளது.

மனிதநேய செயற்பாடுகளுக்கான இலங்கை அரசின் ஆதரவு குறையாதென சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை அரசு உறுதியளித்துள்ளது.

அனர்த்தத்தின் பின்னர் தமது வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கு, எதிர்கால சிக்கல்களில் மேலும் நெகிழ்வுத்தன்மையுடன் இருப்பதற்கும் தமது குரல்கள் செவிமடுக்கப்படுவதற்காக பரிந்து பேசுவதற்கு மற்றும் முரண்பாட்டிற்கு நீடித்திருக்கக் கூடிய மற்றும் நிலைத்திருக்கும் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிப்பது மனிதாபிமானப் பணியாளர்களின் கைகளில் உள்ளது - என்றார். (ம-5)

# எதியோப்பியப் பிரதமர் காலமானார்

எதியோப்பியாவின் பிரதமர் மெலஸ் ஸெனவி தனது 57ஆவது வயதில் காலமாகியுள்ளதாக அந்த நாட்டு அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் கடந்த ஒருவார காலமாக கடும் சுகவீனமடைந்திருந்த நிலையிலேயே காலமானார்.

கடந்த ஜூலை மாதம் இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவரது தேக ஆரோக்கியம் தொடர்பில் தமக்கு அறியத் தரவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் அடிஸ் அபாபாவில் நடைபெற்ற ஆபிரிக்க ஒன்றியத்தின் உச்சி மாநாட்டிற்கு சமுகமளிக்கத் தவறியபோது இவரது தேக ஆரோக்கியம் குறித்து பல ஊகங்கள் எழுந்திருந்தன.

1991ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் தலைவர் மெங்ஸ்ட்டு ஹெய்லி மரியம் என்பவரை பதவி விலக்கிய பின்னர் மெலஸ் ஸெனவி பதவிக்கு வந்தார். (16)

# அருந்தவபாலன் விடுதலை

யாழ்ப்பாணம், ஓக 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினரான வி.அருந்தவபாலனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப் பட்டுள்ளார்.

அரசுக்கு எதிராகச் செயற்பட்டார் என்று குற்றஞ்சாட்டி இவரைக் கைது செய்த பொலிஸார் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். எனினும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்குப் போதிய சாட்சியங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்ததை அடுத்து சாவகச்சேரி நீதிமன்றத்தால் அவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அரசுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார் என்று இவர் மீது பொலிஸார் குற்றஞ்சாட்டினர். கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர் கொழும்பு குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டார். இரண்டு நாள்களின் பின்னர் நீதிமன்றத்தின் ஊடாக விடுவிக்கப் பட்டார்.

அவர் மீதான வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று சட்ட மா அதிபர் திணைக்களம் அறிவித்ததாக அருந்தவபாலன் தெரிவித்தார்.

இதனை அடுத்து அவர் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து நீதிமன்றம் அவரை விடுவித்தது. (உ-5)

# வலி.வடக்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம்

வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளை படையினராலும் சிறைக்காவலர்களினாலும் அடித்துக் கொலை செய்யப்பட்ட டெல்றொக்ஷனின் படுகொலையை கண்டித்து வலி. வடக்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி. வடக்குப் பிரதேச சபையின் இரண்டாம் ஆண்டுக்கான முதலாவது கூட்டம் நேற்று அதன் தலைவர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் போதே அரசியல் கைதியான டெல்றொக்ஷன் சாவு தொடர்பில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை அரசியல் கைதி ஒருவர் அநாகரிகமான முறையில் சிறைச்சாலையில் கொல்லப்பட்டமைக்கு ஜனாதிபதி மன்னிப்புக்கோரத் தேவையில்லையென பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் அண்மையில் கூறிய கருத்துக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது சபையில் இருந்த எதிர் கட்சி உறுப்பினர்கள், அமைச்சர் அவ்வாறான வார்த்தையைப் பயன்படுத்தவில்லையென மறுத்த போதிலும் ஊடகங்களில் வெளி வந்த தகவலைக் கூறியதைத் தொடர்ந்து சபையில் எதிர் கட்சி உறுப்பினர்கள் அமைதியான சம்பவமும் இடம் பெற்றது. (86)

# வெள்ளவத்தை சடலங்கள் மீட்புச் சம்பவம்

# சந்தேக நபருடன் நெருங்கிய தொடர்புடைய பட்டதாரிப் பெண்ணிடம் தீவிர விசாரணை

வெள்ளவத்தை மரணத்தின் பின்னணியில் பொலிஸாரின் நேரடியான சந்தேகத்திற்குட்பட்டு காணாமல் போயுள்ள குமாரசாமி பிரசானுடன் நெருங்கிய தொடர்புடையவராகக் கருதப்படும் வயம்ப பல்கலைக்கழகப் பட்டதாரிப் பெண்ணொருவரிடம் இவர் குறித்தும் இந்தச் சம்பவம் குறித்தும் வெள்ளவத்தைப் பொலிஸார் நேற்று பல கோணங்களிலும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன், இச்சம்பவத்தில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் பிரசானால் நேற்றுமுன்தினம் அனுப்பியதாகக் கருதப்படும் மின்னஞ்சல் தொடர்பாகவும் தாம் தீவிர விசாரணைகள் நடைபெறுகிறது.

பிரசானுடன் நெருங்கிய தொடர்புடையவர் எனக் கருதப்படும் பெண்ணுக்கும் பிரசானுக்கும் இடையிலான தொடர்பு குறித்தும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவை வருமாறு:-

சடலங்கள் மீட்கப்பட்ட வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின்படி வெள்ளவத்தையிலுள்ள பிரபல வியாபார நிலையத்தின் விலைப்பட்டியலினூடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவர் ஒருதொகை கற்பூர வில்லைகளை வாங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மூவரினதும் சடலங்களிலிருந்து துர்நாற்றம் வீசாமல் இருப்பதற்காகவே இந்தக் கற்பூர வில்லைகளை பிரசான் குறித்த வியாபார நிலையத்தில் வாங்கியிருக்கலாம் எனப் பொலிஸார் உறுதிசெய்கின்றனர்.

நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது தூக்கமாத்திரை வெற்றுப்பக்கெட் ஒன்றும் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் சடலங்களை ஈமொய்க்காமல் இருப்பதற்காக கிருமிநாசினிகளைப் பயன்படுத்தியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

பிரசான் பயன்படுத்திய கைத்தொலைபேசியின் அழைப்புகள் தொடர்பான முழுமையான தகவல்களைத் திரட்டி அவரைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் தாம் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். மரணத்திற்கான உண்மையான காரணத்தைக் கண்டுபிடிப்பதற்காக மூவரினதும் உடற்கூற்றுகள் நேற்றுமுன்தினம் அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் இரசாயன அறிக்கை இதுவரையில் சமர்ப்பிக்கப்படாமையால் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லையென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.(ங)

# புத்தருக்கு முத்தமிட்டவர் கைது

கொழும்பு, ஓக. 22

கண்டி எம்பேக்கே தேவாலயத்தில் புத்தர் சிலைகளுக்கு முன்னால் ஒழுங்கீனமான முறையில் போஸ் கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் பிரெஞ்சுப் பிரஜைகள் கைது செய்யப் பட்டனர்.

இவர்கள் மூவருக்கு காலி நீதிவான் நீதிமன்றம் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழிய சிறைத்தண்டனையும் தலா 1500 ரூபா அபராதமும் விதித்தது.

கண்டியிலுள்ள எம்பேக்கே தேவாலயத்தில் புத்தர் சிலையை கட்டித்தழுவியவாறும் முத்தமிட்டவாறும் புகைப்படம் எடுத்துக் கொண்ட இச்சுற்றுலா பயணிகள் மூவரும் பன்னர் காலிக்கு சென்று அங்குள்ள புகைப்படப்படிப்பு நிலையமொன்றில் படங்களை அச்சிட முயன்றனர்.

(16)

# வடக்கின் கல்வி நிலை குறித்து கேட்டறிந்தது உலக வங்கி

வடக்கின் கல்வி அபிவிருத்திக்கு உலக வங்கியின் அடுத்த கட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு முன்னோடியாக வடக்கில் தற்போதைய கல்விநிலை, அடைவு மட்டம், முன்னேற்றம் தொடர்பாக உலக வங்கியின் நிபுணத்துவ ஆலோசகர்கள் வட மாகாணக் கல்வி அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் கேட்டறிந்து சென்றுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல் யாழ்.பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து. ராதாகிருஷ்ணன்இந்த விடயம் குறித்து தெரிவிக்கையில்:-

உலக வங்கி கல்வி அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடு செய்துவருகிறது. இதற்கான அடுத்த கட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பில் தீர்மானமெடுப்பதற்கு ஏதுவாக உலக வங்கியின் நிபுணத்துவ ஆலோசகர்கள் இருவர் வந்திருந்தனர்.

வடக்கில் கல்வி அபிவிருத்திக்கு தேவைப்படுபவை, தற்போதைய கல்விநிலை அதன் அடைவுமட்டம் என்பவை பற்றியும், ஆயிரம் பாடசாலைத் திட்டம், 5 ஆயிரம் பாடசாலைத்திட்டத்தின் கீழ் வடக்கில் எத்தனை பாடசாலைகள் உள்ளன என்பது உட்பட தற்போதைய கல்வி நிலையை விளங்கிக் கொள்ளும் பொருட்டு இது ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள், அதன் முன்னேற்ற நிலைகள் தொடர்பிலும் ஆராய்ந்தனர் என்று கூறினார்.

கலந்துரையாடலில் வட மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், உதவி மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ம-4)

# நெல்சிப் திட்ட பெயர்ப் பலகையில் டக்ளஸ், ஆளுநர் படங்கள் அவசியம்

## மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் அறிவுறுத்து

*யாழ்ப்பாணம், ஓக.22*

*நெல்சிப் திட்ட வீதி பெயர்ப் பலகைகள் அமைக்க டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் சந்திர சிறி ஆகியோரது படங்களைப் பொறிக்குமாறு பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கு யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா. ஜெயகரன் அறிவுறுத்தியுள்ளார்.*

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் அண்மையில் பிரதேச, நகர சபைகளின் செயலாளர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் வைத்தே படங்களைப் பொறிக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இருப்பினும் நெல்சிப் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வீதிகளுக்கு பெயர்ப்பலகை ஏற்கனவே நடப்பட்டுள்ளது. அந்த வீதிக்கான நிதி ஒதுக்கீட்டிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பசில் ராஜபக்ஷ ஆகியோரது படங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மக்கள் தொடர்புகொள்வதற்கு வசதியாக பிரதேசசபைத் தலைவர்களது இலக்கங்களும் பெயர்ப்பலகையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது நடப்பட்டுள்ள பெயர்ப் பலகையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவினதும், ஆளுநர் சந்திரசிறியினதும் படங்களை ஒட்டுமாறு அறிவுறுத்தி படங்களை அச்சடித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செயலாளர்களிடம் வழங்கியுள்ளார்.

அத்துடன் பெயர்ப் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள சபைத் தவிசாளர்களது கைத்தொலைபேசி இலக்கங்களை நீக்கிவிட்டு பொது தொலைபேசி இலக்கத்தை போடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் ஏன் மேற்கொள்ளப்பட்டன என உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கேட்ட போது:-

நெல்சிப் வேலைத்திட்டத்தின் முதல் தொகுதி வேலைத்திட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் சந்திரசிறி ஆகியோரது படங்கள்பொறிக்கப்பட்டேபெயர்ப் பலகைகள் நடப்பட்டன.

ஆனால் இரண்டாம் கட்ட வேலைத்திட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் ஏதோ தவறு நடந்துள்ளது. அதனால் அமைச்சர் மற்றும் ஆளுநரின் படங்கள் தவறவிடப்பட்டுள்ளன. எனவே தான் அவற்றையும் சேர்க்குமாறும் அறிவுறுத்தியுள்ளேன்.

சபைத் தலைவர்களது தனிப்பட்ட கைத்தொலைபேசி இலக்கங்களை போட முடியாது பொதுவான தொலைபேசி இலக்கத்தையே போட முடியும் என்றார்.

(ம-5)

# குடாநாட்டு கடற்றொழிலாளருக்கு ஓகஸ்ட் மாத எரிபொருள் மானியம்

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ். குடாநாட்டில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு ஓகஸ்ட் மாதத்திற்கு உரிய எரிபொருள் மானிய முத்திரைகள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த எரிபொருளுக்கான இந்த மாதத்திற்குரிய மானிய முத்திரைகள் அனைத்தும் கடந்த வாரத்தில் எடுத்து வரப்பட்டன.

இதனை அடுத்து மீனவர்களுக்கு இந்த மானிய முத்திரைகள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் நிதிவளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 3 ஆயிரம் வரையிலான வெளியிணைப்பு இயந்திரப் படகுகளுக்கு மானிய முத்திரைகள் விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்றும் வருகின்றன.

(ம-17)

### சங்கிலி அபகரிப்பு

வீதியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணின் சுழுத்தில் இருந்த சங்கிலியை அபகரித்த சம்பவம் ஒன்று நேற்று மாலை 4 மணியளவில் நாயன்மார்க்கட்டு வெய்யில் விழுந்த பிள்ளையார் கோயிலுக்கும் யாழ்.வலயக் கல்விப் பணிமனைக்கும் இடையில் இடம்பெற்றது.

நல்லூர் மூத்தநார் விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த திருமதி மயூரன் வேணுப்பிரியா என்பவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்த வேளையே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

(ம-13-288)

*சாவகச்சேரி பிரதேச சபைக்கு கொடிகாமம் ஏ-9 வீதியில் 33 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தலைமை அலுவலகக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.* (ம-9)




# மருதங்கேணி கால்நடை வைத்திய அலுவலகம் இயங்க ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஓக. 22

மருதங்கேணி கால்நடை வைத்திய அலுவலகம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்கு அண்மையில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மருதங்கேணி பிரதேச மக்கள் கால்நடை வைத்திய சேவையை இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இங்கு ஆடு, மாடுகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தல் சேவை, கோழிகளுக்குத் தடுப்பு மருந்து ஏற்றல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

அலுவலகம் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை பொதுவிடுமுறை தவிர்ந்த நாள்களில் காலை 8.15 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை திறந்திருக்கும். சனிக்கிழமைகளில் பிற்பகல் ஒரு மணி வரை திறந்திருக்கும்.

தற்காலிக ஏற்பாடாக பருத்தித்துறை கால்நடை வைத்தியர் இந்த அலுவலகத்தைக் கவனித்துக் கொள்வார்.

விரைவில் நிரந்தர கால்நடை வைத்தியர் இந்த அலுவலகத்துக்கு நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.- என்று யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ம-8)

# இலாபத்தை அதிகரிக்கும் திட்டத்தால் பணியாளர் மத்தியில் விசனம்

வலி.தென்மேற்கு, ஓக.22

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வியாபாரத்தை அதிகரிக்கும் நோக்குடனும் கிளைகளில் ஏற்படும் சோர்வைக் கட்டுப்படுத்துவதற்காகவும் சில வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. இது முகாமையாளர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல வருடங்களாக நஷ்டத்தில் இயங்கி வந்த மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம், யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எடுத்துக்கொண்ட முயற்சியினால் தற்பொழுது மெல்ல மெல்ல வளர்ந்து வருகின்றது. பல மாதங்கள் பணியாளர்களுக்கு வேதனத்தை வழங்க முடியாமலிருந்த மேற்படி சங்கம் தற்பொழுது மாதா மாதம் வேதனத்தை வழங்கும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளது.

இந்தநிலை ஊழியர்கள் மத்தியில் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் உருவாக்கியுள்ளது.

இதேவேளை பல சங்கங்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு கிளையைத் திறந்து மூடாமையால் வியாபாரத்தில் மந்த நிலை ஏற்பட்டுள்ளதுடன் வருமானத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைப்பாடு குறித்து பொதுமக்கள் சங்கநிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து, சகல கிளைகளும் குறிப்பிட்ட நேரத்துக்குத் திறக்கப்பட்டு குறிப்பிட்ட நேரத்துக்கு மூடப்பட வேண்டும் என்று முகாமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ம-115)

# தவறணைகளில் 'ரோக்கன்' நெருக்கடியால் நடவடிக்கை

**ரோக்கனைப் பெறுவ தற்காக மதுப்பிரி யர்கள் தவறணை திறக்கும் நேரத்துக்கு முன்னரே வந்து காத் திருக்கின்றனர்.**

வலி.தென்மேற்கு, ஓக.22

யாழ்.மாவட்டத்தில் பனங்கள்ளுக்குத் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து மதுப்பிரியர் களின் நெருக்கடியைச் சமாளிப்பதற்காகக் கள்ளுத் தவறணைகளில் 'ரோக்கன்' வழங்கும்முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இத னால் ரோக்கனைப் பெறுவ தற்காக மதுப்பிரியர்கள் தவ றணை திறக்கும் நேரத்துக்கு முன்னரே வந்து காத்திருக் கின்றனர்.

தை மாதத்திலிருந்து ஆரம்பமாகும் பனங்கள்ளு சீசன் படிப்படியாக அதிக ரித்து ஆடி, ஆவணி மாதங்க ளில் படிப்படியாகக் குறைவ டையும், புரட்டாதி, ஐப்பசி மாதங்களில்சீண்முடிவடைந்து விடும். கள் குறைவடைந்த காலப்பகுதிகளில் தவற ணைக்கு வரும் மதுப்பிரியர் களைச் சமாளிப்பதில் கிளை முகாமையாளர்கள் பெரும் சிர மங்களுக்கு ஆளாகின்றனர்.

பனங்கள்ளு சீசன் முற் றாக முடிவடைந்த காலப் பகுதிகளில் மதுப்பிரியர் களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் போத் தல்களில் அடைத்து வைக் கப்படும் பனங்கள்ளே தவ றணைகளில் விற்பனைக்கு வைக்கப்படும்.

தற்பொழுது பனங்கள் ளுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்ட தனால் மதுப்பிரியர்களின் நெருக்கடியைத் தவிர்க்கும் நோக்குடன் சில தவறணை களில் மாலை நேரங்களில் ரோக்கன் முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

ரோக்கனைப் பெறுவ தற்காக இவர்கள் தவற னைகளில் தவம் கிடக்கி றார்கள். (ம-115)

# கள்ளு வேண்டித்தராத அப்பா காதைக் கடித்தான் மகன்

மிருசுவில், தவசிக்குளம் பகுதியில் தந்தையாரின் காதைக் கடித்துக் குதறினான் மகன். வலது காதை இழந்த தந்தையார் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கதிரன் வேலாயுதம் (வயது - 58) என்பவரே காயமடைந்தார். தந்தை யும் மகனும் தவறணைக்குச் சென்று கள் அருந்தியபோது தந்தையார் தனக்கு கள் வேண்டித்தரவில்லை என தகராறு செய்த மகன் வீட்டில் வைத்து அவரது வலது காதைக் கடித்துக் குதறினான் என்று தெரிவிக்கப்பட்டது. (10-9)

# 900 கோடியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிப்பதற்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது. இதனூடாக நாட்டிலுள்ள அனைத்து அமைச்சுகளின் அதிகாரங்களையும் ஒரே அமைச்சின் வசம் கொண்டுவருவதற்கும் அது நடவடிக்கை எடுத்துவருகிறது.

மாகாணசபைக்குள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களையும் மத்திய அரசின் ஓர் அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதுமட்டுமல்லாது, சமூர்த்தி அதிகாரசபைச் சட்டமூலத்தை இல்லாது செய்வதுடன், மலையக, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைகளையும் இல் லாது செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இதனூடாக நாட்டிலுள்ள 20 இலட்சம் குடும்பங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற 900 கோடி ரூபா பணத்தையும் அரசு கைப்பற்ற நினைக்கின்றது. - என்றார்.

# புத்தளத்தில் சொகுசு பஸ் விபத்து வரதராஜப்பெருமாளுக்குக் காயம்

வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவருமான வரதராஜப்பெருமாள் பய ணித்த பஸ் விபத்துக்குள்ள னாதில் அவர் சிறு காயங் களுடன் தப்பித்துக்கொண் டார்.

இந்த விபத்துக் குறித்து வரதராஜப்பெருமாள் உதய னுக்குத் தெரிவித்ததாவது:-

நேற்று 45 பயணிகளு டன் தனியார் சொகுசு பஸ் ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண் டிருந்தது. அதில் நானும் (வரதராஜப் பெருமாளும்) பயணித்துக் கொண்டிருந்தேன். குறித்த பஸ் அதிகாலை 2.20 மணி யளவில் புத்தளம் மதுரங் குளிப் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி யோரமாக நின்றுகொண் டிருந்த லொறி ஒன்றின் மீது மோதி பின்னர் அருகே இருந்த மின் கம்பத்துடனும் மோதி யது. இதனால் பஸ்ஸின் கதவு கள் திறக்கப்படமுடியாத நிலை ஏற்பட்டது. உள்ளி ருந்த பயணிகள் வெளியே வர முடியாது தவித்தபோது, அப்பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் பஸ்ஸின் கண்ணாடி களை உடைத்து பயணிகளை வெளியேற்றினர். இதன் போது பயணிகள் அனை வரும் கண்ணாடிகளால் வெட்டுண்டு காயங்களுக்கு உள்ளாகினர்.

சம்பவஇடத்துக்குவிரைந்த பொலிஸார் காயமடைந் தோரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இதன் போது எனக்கு கைகளிலும் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அவரது காலிலும் அடிபட் டுள்ளது. எனினும் தெய்வா தீனமாக உயிர் தப்பியுள் ளேன்.'' என்றார். (ங)

# கடல்மார்க்கமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுகொண்டிருந்த படகு ஒன்று நேற்று அதிகாலையில் கடற்படையினரால் பிடிக்கப்பட்டது. இதில் 69 பேர் இருந்தனர். அவர்களில் 48 பேர் தமிழர்கள், 19 பேர் சிங்க ளவர்கள், 2 பேர் முஸ்லிம்கள்.

கடந்த இரண்டு நாள்களில் கடற்படையினரிடம் மாட் டுப்படும் இரண்டாவது அகதிகள் படகு இது. நேற்றுமுன் தினம் திருகோணமலை கடற்பரப்பில் பயணித்துக் கொண் டிருந்த இரண்டு படகுகளைக் கடற்படையினர் வழிமறித்துக் கைப்பற்றினர். அவற்றில் ஆஸ்திரேலியா செல்வதற்காக 83 பேர் இருந்தனர்.

நேற்றுக் கைப்பற்றப்பட்ட படகு நீர்கொழும்பு கடலில் பயணித்துக் கொண்டிருந்தபோது கடற்படை ரோந்துப் படகிடம் மாட்டிக்கொண்டது. 'ஆஷா துவா' என்று பெயரிடப்பட்ட இழுவை மீன்பிடிப்படகிலேயே 69 பேரும் ஆஸ்திரேலியா பயணமாகிக் கொண்டிருந்தனர்.

நீர்கொழும்பு, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், விசுவமடு, மட்டக்களப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த தமி ழர்களும் சிங்களவர்களும் முஸ்லிம்களுமே படகில் இருந்து கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினரின் பாதுகாப்புடன் மோதர துறைக்குக் கொண்டு செல்லப்பட்டது படகு. அதிலிருந்தவர்கள் விசார ணைகளுக்காக குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஆஸ்திரேலியாவுக்கு அகதிகளாக வருபவர்களை அயல் நாடுகளில் தங்க வைப்பதற்கான சட்டத் திருத்தத்தை அந்த நாட்டு நாடாளுமன்றம் நிறைவேற்றி உள்ள நிலையிலும் இங்கிருந்து அகதிகளாகச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்கள் மற்றும் முஸ் லிம்களும் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயற் சிப்பது அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது என்றும் அவர்கள் கூறினர். கடந்த 21 நாள்களில் மட்டும் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்ட 663 பேர் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர் களில் பெருமளவானோர் தமிழர்கள்.

அதேவேளை, மேலும் பல நூற்றுக்கணக்கானோர் படகு கள் மூலமாக இதேகாலப் பகுதியில் ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்திருக்கிறார்கள். (உ-01)

# இலங்கை மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழக மீனவர்கள் 13 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர். இன்னும் பல மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய இலங்கைக் கடற்படை அவர்களை விரட்டியடித்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் மீனவர்களுக்கு காயங்களும் ஏற்பட்டன. குறிப்பாக ஞானசேகரன் என்ற மீனவர் தலையில் படுகாய மடைந்தார். பதின்மூன்று மணித்தியாலங்கள் தடுத்து வைக் கப்பட்ட பின்னர் பிடிப்பட்ட தமிழக 13 மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீனவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து ஜெயலலிதா மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவந் துள்ளார். இதுகுறித்து அவர் மத்திய அரசுக்கு முன்வைத் துள்ள விடயங்கள் வருமாறு:

இராஜதந்திர அறிக்கைகளை வெளியிடும் போது இரு தரப்பு மீனவர்கள் மீதும் பலப்பிரயோகம் மேற்கொள்ளப் படாது என்று உறுதியாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அந்த உறுதிமொழி வெறும் காகிதத்தில் மட்டும் தான் இருக்கிறதே தவிர நடைமுறையில் பின்பற்றப்படுவ தில்லை. இராஜதந்திர நடவடிக்கை என்ற விடயத்தையே கேவலப்படுத்துவது போல இலங்கை அரசு நடந்துகொள் கிறது. தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களை அது மேற்கொண்டு வருகிறது எனவே இனி யும் மென்போக்கோடு செயற்படாது இலங்கை அரசு மீது உறுதியான நடவடிக்கை எடுத்து தமிழக மீனவர்களைப் பாது காக்க இந்திய மத்திய அரசு முன்வர வேண்டும். - என்று தெரி வித்துள்ளார். (ங)

# பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சப்ரகமுவா, வடமேல்மாகாண பல்கலைக்கழகங்களும், நுண்கலைப்பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், உள்நாட்டு மருத்துவ கற்கை நிலையம், கொழும்பு பல்கலைக்கழகக் கணினி கற்கை நிலையம், சுவாமி விபுலானந்தா இசை நடனக்கல்லூரி, மனிதவள மேம்பாட்டு நிலையம், கொழும்பு பல்கலைக்கழக தொழில்நுட்ப பயிற்சி நிலையம், மொரட்டுவ பல்கலைக்கழக ஸ்ரீபாலி வளாகம், திருகோணமலை மற்றும் வவுனியா வளாகங்களே இவ்வாறு மூடப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

''வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கேட்கின்ற வேதனத்தை வழங்கினால் அது தேசிய சம்பள அளவுத் திட்டத்தில் பாதிப்பை உண்டுபண்ணும். எனவேதான் அதனை நிறைவேற்ற முடி யாமல் உள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முன் வைத்துள்ள ஆறு கோரிக்கைகளில் ஐந்து கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனவே இழுபறியாக நீளும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஒரு முடிவைக் காணும் வகையிலேயே பல்கலைக்கழகங்களை கால வரையறை யின்றி - வேலை நிறுத்தப் போராட்டத்துக்குத் தீர்வு காணும்வரை - இழுத்து மூட முடிவு செய்யப்பட்டுள்ளது'' என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயர்கல்வி அமைச்சரின் கருத்தை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் மறுத்துள்ளார்.

''நாம்முன்வைத்த கோரிக்கைகளில் ஐந்து கோரிக்கை களை ஏற்றுக்கொண்டதாக உயர்கல்வி அமைச்சு ஒரு போதும் எம்முடன் நடைபெற்ற பேச்சுக்களின் போது உடன் பாட்டுக்கு வரவில்லை. அத்தோடு 20 சதவீத வேதன அதி கரிப்பு, நாட்டின் தேசிய உற்பத்தியில் 6 சதவீதத்தை இல வசக் கல்விக்கு ஒதுக்கீடு செய்தல் ஆகிய மிக முக்கியமான கோரிக்கைகள் தொடர்பாக இதுவரை சாதகமான பதில் எதுவும் வழங்கப்படவில்லை. எனவே தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவுசெய்துள்ளது. அரசு பல்கலைக் கழகங்களை இழுத்து மூடினாலும் கூட இலவசக் கல்வியை பாதுகாக்கும் எமது போராட்டம் தொடரும்'' என்று பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாக நாளை மறுதினம் 23ஆம் திகதி கொழும்பு ஹை-பார்க்கில் பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ங-சி)

# தலையடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்கா கப் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (ங-9)

# கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் சம்பவம் இடம்பெற்றது. மீனவர்களில் ஒரு படகு சேதமடைந்தது. வேறு சில படகுகள் நூலிழையில் மோத லைத் தவிர்த்ததால் தப்பிக்கொண்டன.

சம்பவம் குறித்து மீனவர்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து சேதமடைந்த படகுக்குப் பதிலாக புதிய படகு ஒன்று பாதிக்கப்பட்ட மீனவருக்கு வழங்கப்பட்டதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு கடல் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் நேற்றுக் காலை கரை திரும்பிக் கொண்டிருந்த சமயமே மோதல் இடம்பெற்றது என்று மீனவர்கள் கூறினர்.

''படகுகள் கரைதிரும்பிக் கொண்டிருந்த போது வேக மாக வந்த டோறாப் படகு மீனவர்களின் படகை மோதித் தள்ளி விட்டுச் சென்றது. இந்த மோதலில் மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத போதும் படகு மோசமாகச் சேதமடைந்தது'' என்று உதயனிடம் தெரிவித்தார் மீனவர் சங்கப் பிரதிநிதி ஒருவர்.

''சில நாள்களுக்கு முன்னர் மாதகல் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைக் கடற்படையினர் விரட்டி யடித்தனர். இதனால், கடலில் போட்ட வலைகளை அப்படியே விட்டுவிட்டு அவர்கள் கரை திரும்பினர்'' என்றும் அவர் விவரித் தார்.

கீரிமலை, சேந்தாங்குளம் மற்றும் மாதகல் கடலில் தொழிலில் ஈடுபடுவதற்கு 20 வருடங்களுக்கும் மேலாக அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அண்மையிலேயே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் தம்மால் அந்தப் பகுதிகளில் நிம்மதியாகத் தொழில்செய்ய முடியாத நிலை இருப்பதாக மீனவர்கள் சலித்துக் கொள்கின்றனர். (உ-86)

# ஜெனிவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மசிங்க, ''ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேர வையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடருக்கு அரசு, பதில் அறிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளது. அதை இந்தச் சபைக்கு ஆற்றல்படுத்த முடியுமா'' என்று கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்தக் கேள்விக்குப் பதி லளித்த ஆளுந்தரப்பு பிரதம கொரடாவும், அமைச்சருமான தினேஷ் குணவர்தன, ''நாளை (இன்று) புதன்கிழமை எதி ரணியினரால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின்போது இந்தக் கேள்வி உட்பட அது சம்பந்தமான அனைத்து விடயங்களுக்கும் வெளிவிவகார அமைச்சர் பதிலளிப்பார்'' என்றார்.

தினேஷ் குணவர்தனவின் பதிலையடுத்து எழுந்த ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல, ''கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் விதப்புரைகளின் அமுலாக்கம் தொடர்பிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை (இன்று) சபை ஒத்தி வைப்புவேளை பிரேரணையொன்றை கொண்டுவருகின் றது. அது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் கேட்கவில்லை. ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் மீளாய்வுத் தொடருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பதில் குறித்தே கேள்வி எழுப் புகின்றார்'' என்று சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக லக்ஷ்மன் எம்.பி. மேலும் தெரிவித் தவை வருமாறு:

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 2008 ஆம் ஆண்டு மீளாய்வுக் கூட்டத்தொடரின்போது இலங்கைக்கு 72 பரிந் துரைகள் முன்வைக்கப்பட்டன. அந்த விதப்புரைகளின் அமு லாக்கம் தொடர்பாக இந்த வருடம் பதிலளிக்கவேண்டும். பதிலை அரசு அனுப்பிவைத்துள்ளது. இதை சபையில் ஆற்றல்படுத்துமாறே எதிர்க்கட்சித் தலைவர் கோருகின்றார் - என்று தெரிவித்தார்.

இதனையடுத்து, இது விடயம் தொடர்பில் வெளிவிவ கார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றார் என்றும் இது சம்பந்தமான அனைத்துக் கேள்விகளுக்கும் வெளி விவகார அமைச்சு இன்று புதன்கிழமை பதிலளிக்கும் என் றும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# எவர் சொல்லி என்ன, காதில் ஏறுமா அரசுக்கு?

இப்போது அனைத்துலக அரசுகளின் பிரதானிகளும் பிரமுகர்களும் அடுத்துத் தொடுத்து இலங்கைக்கு வந்து செல்கிறார்கள். ஒப்பீட்டளவில், கடந்த மார்ச் மாதம், ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு மாநாட்டில் இலங்கை குறித்து அமெரிக்கா பிரேரித்து 23 நாடுகளின் ஆதரவுடன் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் உலக மட்டத்தில் பேசுபொருளாக மாறிய பின்னர், இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் வெளிநாடுகளின் அரச தலைவர்களும், சமூகவியலாளர்களும், சமாதான நாட்டம் கொண்ட பிரமுகர்களும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் அதிகரித்து வருகிறார்கள்.

அந்த வரிசையில் தென்னாபிரிக்காவின் அரசியல் தலைவர்களின் வருகை குறித்தும், அவர்கள் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, உதவத் தயாராக இருப்பதற்கான சாத்தியம் குறித்த ஆரம்ப அறிகுறிகள் தொடர்பிலும் இந்தப் பத்தியில் நேற்றுத் தொட்டுக்காட்டியிருந்தோம்.

அந்த வகையில், கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற் கொண்ட அமைதிக்கான நொபல் பரிசு பெற்றவரும், நைஜீரியா மற்றும் சைபீரியாவைச் சேர்ந்த பெண்கள் உரிமைகள் செயற் பாட்டாளருமான லேமா போவி அம்மையார் கொழும்பில் நடைபெற்ற தேசிய சமாதானம் குறித்த நிகழ்வொன்றில் தெரிவித்த கருத்துகள் கவனத்தில் கொள்ளவேண்டியவை.

போரில் ஈட்டிய வெற்றியைப் பிரலாபித்து வெளிப்படுத்துவதில் அதீத கவனம் செலுத்தாதீர்கள். நாட்டில் நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கான அக்கறை காட்டிச் செயற்பட வேண்டியதே தற்போதைய தேவை. குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயர்நீதி வழங்குவதே முக்கிய கடமை - என்று இங்கேயே வைத்து, இந்த நாட்டு அரசுக்கு புத்திமதி கூறியுள்ளார். அவை மட்டுமன்றி பின்வரும் முக்கிய அம்சங்களையும் அரசாங்கத்திடம் வலியுறுத்தி உள்ளார்; சுட்டிக்காட்டி உள்ளார்.

*இராணுவத்தைச் சகல நடவடிக்கைகளுக்கும், குறிப்பாக பொதுமக்கள் சார்ந்த சிவில் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவது நாட்டில் வன்செயல்கள் மீண்டும் தலைதூக்க வழிவகுக்கும்.

*தானே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசு மனமார்ந்த விருப்பு வைத்துச் செயற்பட வேண்டும்.

*போரினால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி, நியாயம் வழங்காமல், நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை

-அதாவது போர் முடிவுற்று மூன்றேகால் வருடங்கள் கடந்து விட்டன. இன்னமும் வெற்றிக்களிப்பில் மிதந்துகொண்டிருக்காதீர்கள். அதில் மூழ்கிவிடாதீர்கள். பதிலாக, முதலில் நல்லிணக்கத்தை நாடிச் செயற்படுங்கள். அதுவே முதற் தேவை என்றவாறு கொழும்பில் வைத்தே அரசுக்கு அறிவுரை கூறியிருக்கிறார்.

எமது நாட்டில் அரசாங்கம் மட்டுமன்றி, ஒவ்வொரு அரசியல் கட்சியும் நல்லிணக்கத்துறையில் மேற்கொள்ளவேண்டிய பங்களிப்புகளைச் சுட்டிக்காட்டித் திட்டங்களை உருவாக்கி உள்ளோம். அவற்றைச் சிவில் சமூகத்திடம் கையளித்து, அவர்களின் ஒப்புதலின் பின்னரே நடைமுறைப்படுத்துகிறோம்- என்றும் லேமா போவி தொட்டுக்காட்டியிருக்கிறார்.

இலங்கையில் நீடித்த போரின் காரணமாக, பதிலளிக்கப்படாத பல கேள்விகளுடனும், தீர்க்கமுடியாத பிரச்சினைகளுடனும் மக்கள் வாழ்கிறார்கள். முதலில் அவற்றுக்குரிய தீர்வுகள் காணப்பட வேண்டும்- என்றும் காத்திரமான கருத்துக்களை, முக்கியமான தள நிலைமைகளை இலங்கை அரசுக்கு தொட்டுக் காட்டியிருக்கிறார்.

அவரது கருத்துகளுக்கும், வெளிப்படுத்தல்களுக்கும் முற்றிலும் நேர்மாறாகவும் முரண்பட நிலையிலும், செயற்பட்டு வரும் இந்த நாட்டு அரச பிரதானிகளும், வெற்றிக்களிப்பில் மனித நீதிகளையும், சகவாழ்வையும், உதறித்தள்ளும் போக்கினரான இனவாதத்தில் மூழ்கியுள்ள அதன் சகபாடிகளும், லேமா போவி அம்மையாரின் கருத்தைக் காதில் போட்டுக்கொள்வரா என்பது பெரும் கேள்விக்குரியதே.

மேலும், தமது சொந்த நாடான லைபீரியாவின் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு, அந்த நாட்டின் அரசியல் கட்சிகள் தடங்கல்களை ஏற்படுத்துகின்றன. இலங்கையிலும் அது போன்று நடைபெறக்கூடாது என்பதே தமது விருப்பம் என்றும் லேமா கூறிச்சென்றுள்ளார்.

இலங்கையில், தமது நாட்டு நிலைமையை விட மோசமான நிலைமை காணப்படுவதைப் புரிந்துகொண்டே, இனவாத சக்திகளின் உள்ளூர்ந்த தன்மைகளைத் தெரிந்து கொண்டே, லேமா போவி அம்மையார் இத்தகைய கருத்தை வெளிப்படுத்தியிருப்பார் என்று கொள்ளலாம்.

பாதிக்கப்பட்ட மக்களை மேலுயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியது அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதே அன்றி வெறும் புனுகு பூசப்பட்ட , மேனி மினுக்கப்பட்ட சலுகைகளை வழங்குவது அல்ல. இந்த யதார்த்தம் அல்லது உண்மை இலங்கை அரசுக்கும் அதன் இனவாத மற்றும் மிதவாத சகபாடிகளுக்கும் தெரியாதது அல்ல; புரியாததுமல்ல.

தாங்களே தமக்கென உருவாக்கிக்கொண்ட மேலாண்மைத் தனத்தையும், மேலோங்கிப் போக்கையும் களைந்துவிட இடமளித்தால்,தமதுகுடிமூழ்கிவிடும்என்றவக்கிரமும்,அதுசார்ந்த உணர்வும் அவர்களிடம் பெரும் கனத்துடன் உறைந்துள்ளன. அவர்களின் நிலைப்பாட்டை அனுசரித்துப் போவதற்குப் பின்னடித்தால், எதிர்காலத்தில் தமது அரசியல் வாழ்வில் சூனியம் சூழ்ந்துவிடும் என்று அரச தலைவர்கள் அஞ்சும் நிலையில் உள்ளனர் என்பதும்-

நல்லிணக்கம் நாடிச்செயற்படும் பாதையை, மார்க்கத்தை ஆட்சியாளர் எட்டிப்பார்ப்பதற்கும் அஞ்சுகிறார்கள் என்பதும் - லேமா போவி அம்மையார் போன்ற மக்கள் நலன் நாடிய புலமையாளர்களுக்கு புரியாதது அல்ல.

எதுவானாலும், போர் வெற்றியை மேன் மேலும் பலப்படுத்துவதை (Reinforce) நிறுத்திக்கொள்ளாதவரை, நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புவது வெறும் சொற்களில் மட்டுமே அமையும்.

இது பிறர் சொல்லி, தன்னுக்கமாக தளைக்காது. சம்பந்தப்பட்டவர்களின், அதாவது ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்துள்ளோரின் இயல்பூக்கத்தினால் தளிர்விட வேண்டியதாகும். இந்த நாட்டை ஆளும் தலைவர்கள் அந்த நிலை குறித்து மனங் கொள்ளக்கூடாதா?

# வாக்குகளை எண்ணும் செயற்பாட்டில் விசேட செயற்றிட்டம் நடைமுறைக்கு

## தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானம்

கொழும்பு, ஒக.22

நடைபெறவுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலில் வாக்குகளை எண்ணும் செயற்பாட்டில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவது தொடர்பாக விசேட செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய வாக்குகளை எண்ணும் பிரதான நிலையங்களில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அனைத்து பெறுபேறுகள் அடங்கும் ஆவணம் ஒன்றின் பிரதிகளை வழங்குவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வாக்குகளை எண்ணும் பிரதான நிலையம் ஒன்றில் பத்தாயிரம் வாக்குகளுக்கு ஒன்று என்றவாறான வீதத்தில் வாக்குகளை எண்ணும் சிறு நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது. அந்த நிலையத்திலிருந்து எண்ணப்படும் வாக்குகள் வெவ்வேறாக ஆவணப்படுத்தப்படும். அந்த ஒவ்வொரு ஆவணத்தையும் பிரதானமான அரசியல் கட்சிகளுக்கும் வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவொன்று தேர்தல்கள் ஆணையாளருடன் நிகழ்த்திய கலந்துரையாடல் ஒன்றின்போது இந்த விடயம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய வாக்குகளை எண்ணும் பிரதான நிலையத்தில் நிறுவப்படும் வாக்குகளை எண்ணும் ஒவ்வொரு சிறிய நிலையத்தினதும் பெறுபேறுகள் அடங்கிய ஆவணங்களின் பிரதி அங்குள்ள பிரதான அரசியல் கட்சிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் கூறியிருந்தார்.

வாக்குகளை எண்ணும் அனைத்து நிலையங்களிலும் அரசியல் கட்சிகள் அக்கருமங்களை மேற்கொள்வது தொடர்பாக புறம்பான இடம் ஒன்றை ஒதுக்கிக் கொள்வதற்கு இந்த முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் வாக்குகளை எண்ணும் மற்றும் இறுதிப் பெறபேறுகளை கட்டமைக்கும் செயற்பாட்டின் வெளிப்படைத் தன்மையைக் காட்டுவது தொடர்பாக அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(ம-22)

# இராணுவ முகாம்களிலும் தேர்தல் கண்காணிப்பாளர் குழு

## 10 இற்கு மேற்பட்ட படையினர் இருக்கும் இடங்களில்

யாழ்ப்பாணம், ஒக.22

பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உள்ள முகாம்களில் மாத்திரமே தேர்தல் கண்காணிப்பாளர்கள் முழு நேரமும் வாக்களிப்பின் போது கடமையிலிருப்பர். அதற்கு குறைவான எண்ணிக்கையிலான இராணுவத்தினர் கொண்ட முகாமுக்கு நகரும் தேர்தல் கண்காணிப்பாளர்களே கடமையில் ஈடுபடுவர் என்று யாழ்.மாவட்ட செயலக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கலைக்கப்பட்ட 3 மாகாண சபைகளுக்குமான தேர்தல் அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கு முன்னதாக இந்த மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில், சப்ரகமுவா, வடமத்திய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் பணிபுரிகின்றனர். பெரும்பாலானவர்கள் இராணுவத்தினராக யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றுகின்றனர். இவர்களில் தபால் மூலமான வாக்களிப்புக்கு விண்ணப்பித்த 9 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய 27ஆம், 28 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்டத்தில் 9 ஆயிரம் பேர் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளனர். இவர்களுக்கான வாக்களிப்பு நிலையங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஒரு படைமுகாமில் 10 இற்கும் அதிகமான படையினர் வாக்களிக்க தகுதி பெற்றிருப்பின் மாத்திரமே வாக்களிப்பு நிறைவடையும் வரையில் தேர்தல் அலுவலர்கள் கடமையாற்றுவர். அதற்கு குறைவான எண்ணிக்கையிலான படையினர் உள்ள முகாம்களில் நகரும் தேர்தல் அலுவலர்களே பணிக்கு அமர்த்தப்படுவர்.

தேர்தல் கடமைகளுக்காக கொழும்பிலிருந்தே அலுவலர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-5)

# பாடத்திட்டத்தில் கொரிய மொழி கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஒக.22

பாடசாலை பாடத்திட்டத்தில் கொரிய மொழியையும் அறிமுகப்படுத்த கல்வியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதன் முதற்கட்ட நடவடிக்கையாக தெரிவு செய்யப்பட்ட 100 ஆசிரியர்கள் கொரிய மொழியில் நிபுணத்துவத்தைப் பெறுவதற்கு டிப்ளோமா திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரிய நாட்டு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த கொரிய மொழி விற்பன்னர்கள் ஐவர் இங்கு வந்து கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-22)

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு ஜப்பானிய அரசு நன்கொடை

கொழும்பு, ஒக.22

வவுனியா மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கென ஜப்பானிய அரசு ஒரு கோடியே பத்து லட்சத்து 70 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கியுள்ளது.

வவுனியாவில் விரிவான ஒரு செயல் திட்டத்தின் கீழ் உணவு பாதுகாப்புக்கென இந்தச் செயல் பாடுகளை மக்கள் வாழ்வாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ளும். இந்தப் பிரதேசங்களின் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 626 மீள்குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் அபிவிருத்திக்கு உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வவுனியா தெற்கு மாவட்ட செயலகப் பிரிவிலுள்ள இரண்டு நீர்ப்பாசனக் குளங்களும் அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றன.

இப்பகுதி வீட்டுதோட்டங்கள் மற்றும் நெற்சாகுபடிக்கு இது உதவியாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. விவசாயக் கருவிகள், நாற்றுகள், விதைகள் போன்றனவற்றை வழங்குவதுடன் ரெங்கத்காமம், தட்டான்குளம், பள்ளேவா மற்றும் ஆவாரங்குளம் போன்ற பகுதி மக்களின் உணவுத் தேவைகளுக்கு உதவுவதும் நோக்கமாகும். இப்பகுதியில் முக்கிய குளங்கள் இரண்டு மேம்படுத்தப்படவிருக்கின்றன. இந்த நடவடிக்கைகளால் இப்பகுதிகளில் தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கவும் வசதி யேற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# மீளக்குடியமர்த்தப்படும் மக்களின் மீள்கட்டமைப்புக்கு 377 கோடி ரூபா

## உலக உணவு நிறுவனம் வழங்க முன்வந்தது

கொழும்பு, ஒக.22

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீளக்குடியமர்த்தப்படும் மக்களின் மனிதாபிமான மற்றும் அவசர மீள்கட்டமைப்பு செயற்பாடுகள் தொடர்பாக 377 கோடி ரூபா வரையிலான நிதி உதவியை வழங்குவதற்கு உலக உணவு நிறுவனம் முன்வந்துள்ளது.

இலங்கை அரசால் உலக உணவு அமைப்புக்கு விடுக்கப்பட்டிருந்த கோரிக்கை ஒன்றுக்கு அமைவாகவே இந்த நிதியுதவி கிட்டவுள்ளது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மற்றும் கிழக்கு மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களின் வாழும் ஒரு லட்சத்து 76 ஆயிரம் பேர் வரையிலானோருக்கு இதன் மூலம் நலன் கிட்டவுள்ளதாகவும் நிதியமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் சுகாதார அமைச்சு, கல்வியமைச்சு மற்றும் சம்பந்தப்படும் மாவட்டச் செயலகங்களின் ஒத்துழைப்புடன் இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப் பிரஜைகள் தமது நாட்டில் கௌரவமாக வாழ உரித்துடையவர்கள்

## மன்னார் சட்டத்தரணி த.வினோதன் கருத்து

**முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் மாதாந்த கூட்டம் தலைவர் ம.சறோரூபன் தலைமையில் சவேரியார்புரம் மீள்எழுச்சிக் கட்டடத்தில் அண்மையில் நடைபெற்றது.**

மன்னார், ஒக.22

இலங்கைப் பிரஜைகள் தமது நாட்டில் கௌரவமாகவும் சுதந்திரமாகவும் வாழ எந்த நிலையிலும் தமது அடிப்படை உரிமை மீறப்படாதிருக்கவும் உரித்துடையவர்கள்.

அதுபோல அரசு தனது பிரஜைகளுக்கான உரிமைகளை பாதுகாக்க கடப்பாடுடையது என அரசியலமைப்பு விதந்துரைக்கின்றது. ஆனால் அவ்வாறானதொரு சூழலை இங்கு அவதானிக்க முடியாதுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் மாவட்ட சட்டத்தரணி த.வினோதன்.

முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் மாதாந்த கூட்டம் தலைவர் ம.சறோரூபன் தலைமையில் சவேரியார்புரம் மீள்எழுச்சிக் கட்டடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ''பிரஜைகளும் அபிவிருத்தியும்'' என்ற கருப்பொருளில் கருத்துரை வழங்கும் போதே வினோதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மீயுயர் சட்டமான அரசியலமைப்பில் பிரஜைகள் எனும் வாசகமும் அதற்கான கருத்தேற்பும் பல்வேறு உறுப்புரிமைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதே தவிர, அவை எவ்வளவுக்கு நடைமுறையில் உள்ளன என்பது கேள்விக்குரிய விடயமாகவுள்ளது

பிரஜை எனப்படுபவர் ஓர் நாட்டின் எல்லைக்குள் பிறந்ததோடு மட்டுமல்லாமல் அதே நாட்டை பூர்வீகமாகக் கொண்டவராகவும் இருப்பார். அவருக்கான உரிமைகள் அந்த நாட்டின் சட்டத்துக்கு உட்பட்டதாய் அமையும்.

அந்தவகையில் இலங்கை அரசியல் அமைப்பின் அத்தியாயம் 3 இலங்கைப் பிரஜைக்கான அடிப்படை உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் அவை மீறப்படும் போது நிவாரணம் பெற்றுக்கொள்ளக்கூடிய வழி முறைகள் தொடர்பில் எடுத்துரைக்கப்படுகின்றது.

உறுப்புரை 10 தொடக்கம் 14 வரை பிரஜைகளுக்கான உரிமைகள் பற்றி பேசுகின்றன. விரும்பிய மதத்தை நம்பிக்கையை மனச்சாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் சட்டத்தின் முன் எல்லோரும் சமமானவர்கள் என்பதுடன் சட்டத்தினால் சமமாக பாதுகாக்கப்படவும் உரித்துடையவர்கள்.

சித்திரவதை, கொடூரமான நடத்துகை என்பவற்றிலிருந்து விடுபடும் சுதந்திரம், கருத்து தெரிவிக்கும் சுதந்திரம், தகவல்களை பெற்றுக்கொள்ளும் சுதந்திரம், தகவல்களை தெரிந்து கொள்ளும் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் பற்றி தெளிவாகவுரைக்கின்றன.

இனிவரும் காலங்களில் மனித உரிமை மீறல்கள் பற்றி கீழ் மட்டத்தில் இருந்த எழுச்சியே முக்கியமானது. இதன் மூலமே எமது உரிமைகளை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும்.- என்றார். (எ-12)

# சந்தைக்கு ஏற்ற இடத்தை வழங்குமாறு கோரிக்கை

**விற்பனை செய்யும் இடங்களிலேயே மீன்களை வெட்டி விற்பனை செய்வதால் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது.**

யாழ்ப்பாணம், ஒக.22

முல்லைத்தீவு மாவட்ட பிரதான மீன் சந்தை மீன் வியாபாரிகளின் விற்பனைக்கு பொருந்தாத சூழலில் அமைக்கப்பட்டிருப்பதால் நுகர்வோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக மீன் வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த மீன்சந்தை தற்போது குறைந்த வசதியுடன் சிறியதொரு தொகுதியில் இயங்கிவருகின்றது. இதனால் மீன் வியாபாரிகள் நுகர்வோர் கேட்பதற்கு ஏற்றவாறு மீன்களை வெட்டித்துப்புரவு செய்து கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதன் காரணமாக விற்பனை செய்யும் இடங்களிலேயே மீன்களை வெட்டி விற்பனை செய்வதால் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது. இவற்றைக் காரணம் காட்டி நுகர்வோர் மீன்களை வாங்குவதற்கு மறுக்கின்றனர்.

இந்த மீன் சந்தையில் இடநெருக்கடி இருப்பதன் காரணமாகவே மீன்விற்பனை செய்யும் இடத்திலேயே மீன்களை வெட்டிக் கொடுக்க வேண்டியநிலையில் உள்ளனர். எனவே நுகர்வோரின் விருப்பம் மற்றும் சுகாதாரமான முறையில் மீன்களை விற்பனை செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு அப்பகுதி மீன்வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-435)

## கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கும் இரு கல்வி அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை

### ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

துணுக்காய்,முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கு கடமைபுரியும் அதிபர்கள், ஆசிரியர்கள் மீது கடுமையான போக்கைக் கடைப்பிடிப்பதாக ஆசிரியர்கள் தமக்கு கூறியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் திருநெல்வேலி இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜோசப் ஸ்ராலின் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் கல்வி வலயங்கள் இடமாற்ற சபைகளைக் கூடாமல் இடமாற்றங்களைச் செய்கின்றன. இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. அதேபோல் சம்பள மாற்றி அமைப்பு சுற்றறிக்கைக்கு முரணாகத் தெளிவான விளக்கமின்றி சம்பளங்களைக் கணிக்கின்றார்கள்.பௌதீக வளங்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களை வெளிப்படையாக கோரப்படாமல் மறைமுகமாக செயற்படுத்துகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் ஒருபோதும் துணைபோகாது எனவும் இவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-422)

குழந்தை வளர்ப்பு சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல் தொடர்பான பெற்றோர் திறன் விருத்திச் செயலமர்வு வவுனியாவில் நடைபெற்றது. அதில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வக்குமார் கருத்துரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (எ-4)

# வீடுகள் கையளிப்பு

மன்னார் , ஒக .22

மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட இந்திய அரசின் வீடமைப்புத் திட்ட வீடுகள் நேற்று முன்தினம் வைபவரீதியாக கையளிக்கப்பட்டன.

இதுவரை காலமும் நிரந்தர வீடு இல்லாமல் தற்காலிக குடிசைகளில் வசித்த மக்கள் நிரந்தர வீடு கிடைத்தமையால் பெரும் நன்மை அடைந்துள்ளனர். இந்த நிகழ்வில் இந்திய அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்படப் பலர் கலந்து கொண்டு பயனாளிகளிடம் வீடுகளைக் கையளித்தனர்.

(எ-9)

# துணுக்காய் கல்வி வலய

## விரைவு கணிதப் போட்டி முடிவுகள்

துணுக்காய் கல்வி வலயத்தின் வலயமட்ட விரைவு கணிதப் போட்டியில் முதல் 3 இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**தரம்-2**

1ஆம் இடம்-பெ.தனு சியா (முத்து ஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை), 2ஆம் இடம்- பா.மதுசாளினி (வவுனிக்குளம் மத்திய அ.த.க.பாடசாலை), 3ஆம் இடம்- வி.தமிழ்நிலவன் (ஆறுமுகம் வித்தியாலயம்)

**தரம்-3**

1ஆம் இடம்-வி.விதுர்சா (ஆறுமுகம் வித்தியாலயம்), 2ஆம் இடம்-ச.தேனுஜா (மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்), 3ஆம் இடம்- வி.கிருபரங்கன் (ஒலுமடு தமிழ் வித்தியாலயம்)

**தரம்-4**

1ஆம் இடம்-நா.தனுராஜ் (ஆறுமுகம் வித்தியாலயம்), 2ஆம் இடம்-ம.அனோஜன் (அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயம்), 3ஆம் இடம்-சி.திலிபனா (முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை)

**தரம்-5**

1ஆம் இடம்-கெ.பவித்திரன் (ஆரோக்கியபுரம் அ.த.க.பாடசாலை ), 2ஆம் இடம்-கி.நர்மதா(பாலிநகர் மகா வித்தியாலயம்), 3ஆம் இடம்-ஜெ.டினோஜா (மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை)

இதில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற இருக்கும் மாகாணமட்ட போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

(எ-422)

# முல்லைத்தீவில் மிதிவெடி அபாயம் விழிப்புணர்வூட்ட நடவடிக்கை

முல்லைத்தீவு, ஒக.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களை மிதிவெடி ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு கிராம அபிவிருத்தி நிறுவனம் யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் மிதிவெடி அபாய தவிர்ப்பு கல்வி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

நேரடியாக மக்களுக்கு மிதிவெடி அபாயம் தொடர்பில் வீடுகளுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகள் இப்போது கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது குப்பைகளுக்கு நெருப்பு வைக்கும் போது கவனமாக இருத்தல், நெருப்பு வைத்து தொலைவிற்கு நகருதல், சுத்தப்படுத்திய இடத்தில் குப்பைகளை ஒன்று சேர்த்து நெருப்பு வைத்தல், நெருப்பு வைப்பதற்கு முன் அயலவர்களுக்கும் தெரியப்படுத்தி அவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல், சந்தேகத்திற்கு இடமான பொருள்களை கண்டால் உரியவர்களுக்கு அறிவித்தல் மற்றும் அவ்வாறான பொருள்களை கையாள்வதையோ, தொடுவதையோ தவிர்த்தல் போன்ற பாதுகாப்பான வழிமுறைகள் தொடர்பிலும் கிராம அபிவிருத்தி நிறுவனத்தினால் விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகின்றது. (10)

# மரங்களை அப்புறப்படுத்தக் கோரிக்கை

நெடுங்கேணி, ஒலுமடு மருதோடை பிரதான வீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மின்சார இணைப்புப் பணிகள் காரணமாக தறிக்கப்படும் மரங்கள் வீதியோரங்களில் அப்படியே போடப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தறிக்கப்பட்ட மரங்களில் பயனுள்ளவற்றை சிலர் எடுத்துக் கொண்டு பயனற்ற மீதிக் கழிவுகளை அந்த இடங்களிலேயே கைவிட்டுச்செல்கின்றனர். அவற்றை துப்புரவு வீதியை போக்குவரத்துக்கு இடையூறு இன்றி ஒழுங்கு செய்து தருமாறு அந்த மக்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஒலுமடு கிராம அபிவிருத்திச் சங்கம், நெடுங்கேணி பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு தெரியப்படுத்திய போதும் எந்த விதநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# வறட்சி காரணமாக நீர்த்தட்டுப்பாடு கால்நடைகள் இறக்கும் அபாயம்

மன்னார், ஒக.22

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக கால்நடைகளுக்கான குடி தண்ணீர் இன்மையால் கால்நடைகள் இறக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.

நானாட்டான், முருங்கன், உயிலங்குளம், தம்பளைக்குளம், பறையநாளன்குளம், உள்ளிட்ட பல இடங்களில் ஆடு, மாடுகள் அதிகளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

கால்நடைகளுக்கு போதியளவு குடிதண்ணீர் இல்லாமையினால் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர். (எ-12)

# சித்திவிநாயகர் திருவிழா

வவுனியா, ஒக.22

வவுனியா கணேசபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை கொடியேற்ற வைபத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இத்திருவிழா தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெற்று எதிர்வரும் 02 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். (எ-400)

A/L இன் பின்னர்...

உங்கள் பொறியியலாளர் ஆகும் கனவை நனவாக்கும்!

City & Guilds
Graduate Diploma
in
Engineering

(Approved by EC^UK)

UK Engineering council னால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் கற்கை நெறிகள்.

Civil Engineering
Electronics Engineering
Quantity Surveying
Motor Vehicle Engineering
Electrical Engineering
Mechanical Engineering
Refrigeration & A/C

2011 ஆம் ஆண்டு கணிதப் பிரிவில் கல்வி கற்கும் போது City & Guilds பற்றி தெரிந்து கொண்டேன். A/L பரீட்சை எடுத்த பின்னர் Result வரும் மட்டும் காத்திருக்காமல் City & Guilds Civil Engineering Diploma கற்கைநெறிக்கு சேர்ந்து, கடந்த June மாதம் Diploma பட்டம் பெற்று இன்று இலங்கையில் புகழ் பெற்ற நிறுவனத்தில் தொழில் புரிந்து கொண்டு Advanced Diploma பாடநெறியை தொடர்கின்றேன்.

அன்று நான் எடுத்த முடிவு சரியானது என்பதை இப்போது உணர்கின்றேன் ஏனெனில் என்னுடன் உயர் கல்வி கற்ற பலர் இன்றும் தமது எதிர்காலத்தை நினைத்து காலத்தை வீணாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். எனது எதிர்கால இலட்சியம் City & Guilds Graduate Diploma முடித்து பிரித்தானிய Engineering Council னால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியலாளராக வருவதுதான்.

விஜுஜன்
வெள்ளவத்தை.

நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?

Post Graduate Diploma (IVQ Level 7)
EC^UK Registration
Incorporated Engineer
NDT/ HND/NDES/NDET/ Degree with Mathematics or Physical/ OUSL Diploma → Graduate Diploma Equal to BEng (Hons), UK (IVQ Level 6)
Asst. Engineer
NCT/ NCIT/ NCQS/ equal Technical qualifications → Advanced Diploma (IVQ Level 5)
Supervisor
A/L Maths, Science, Certificate courses in related field → Diploma (IVQ Level 3)
O/L, A/L commerce,Art → Certificate (IVQ Level 2)

(f/2294) (2-7-6)

மேலதிக விபரங்களைப் பெறவும், பதிவுகளை மேற்கொள்ளவும்.

இன்றே அழையுங்கள்.
0771 067 394 or 0214 66 66 99

அல்லது SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை
Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.

City & Guilds Approved Centre

SCOT

SKILLS COLLEGE OF TECHNOLOGY

Nugegoda Campus
No. 102, Stanley Thilakarathna Mw, Nugegoda.
011 4 696 696
scot@skillsinternational.lk

Kurunegala Campus
No. 252, Puttalam Rd, Kurunegala.
037 3 616 868
kurunegala@skillsinternational.lk

Kandy Campus
No. 511, Peradeniya Road, Kandy.
081 4 951 522
kandy@skillsinternational.lk

Jaffna Campus
No. 207, Navalar Road, Jaffna.
021 4 666 699
jaffna@skillsinternational.lk

# தேர்தல் சட்டங்களை மீறியோர் கைது

மட்டக்களப்பு,ஓக.22

நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல் நட வடிக்கைகளின் போது தேர்தல் சட்டங்களை மீறிய 16 பேர் கைது செய்யப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைக் கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதாக தேர்தல் கடமைகளுக்குப் பொறுப் பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபை, சப்ரகமுவ மாகாணசபை மற்றும் வடமத்திய மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கை களின் போது சட்டத்தை மீறியமை தொடர்பாக 33 முறைப்பாடு கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சட்டத்தை மீறியமை தொடர்பாக 33 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப் பிட்டார். இவற்றில் 20 முறைப்பாடுகள் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட் டங்களில் இடம்பெற்றுள் ளன என்று அவர் குறிப் பிட்டுள்ளார்.

இந்த முறை தேர்தல் நடவடிக்கைகளின் போது சட்டத்தை நிலைநாட்டுவ தற்காக விசேட நடைமுறை கள் முன்னெடுக் கப்படுவ தாக அவர் கூறினார். (ச)

அறிவித்தல்

205H, ராஜா தியேட்டர் பில்டிங், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அக்ஷயா கவறிங் வியாபார நிலையம் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு தற்காலிகமாக மூடப்பட்டதனால் எமது வாடிக்கை யாளருக்கு ஏற்ப்பட்ட தடங்கலுக்கு மனம் வருந்துவதோடு வாடிக் கையாளர் நலன்கருதி எதிர்வரும் (24.08.2012) வெள்ளிக்கிழமை தொடக்கம் மீண்டும் வழமைபோல் திறக்கப்படும் என்பதுடன் எமது நல்லூர்க் கிளையும் வழமைபோல் திறக்கப்படும் என்பதனையும் எமது வாடிக்கை யாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்த ருகின்றோம். நல்லூர் கிளையில் கவறிங்நகைகளை கொள்வனவு செய்து தங்க நாணயங்கள் பெற்ற வாடிக்கையாளர்கள்

1 ஆம் பரிசு - ராவிட் (சிறுப்பிட்டி)
2 ஆம் பரிசு - மதன்குமார் (கல்வியங்காடு)
3 ஆம் பரிசு - அகஸ்திகா (நெல்லியடி)

மேலும் 10 ஆறுதல் பரிசில்கள் பெற்றவர்களின் விவரம்

தமிழரசி, அபிஷா, பாலசுப்பிரமணியம், அபிவர் ணா, தேவா, வித்தகன், சறோஜினி, மதிவதனி, கோபுசங்கர், சண்முகம்

அக்ஷயா கவறிங்
205H,ராஜா தியேட்டர் பில்டிங்
கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
0777073472

(22020) (15-14)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்
## தம்பையா நடராசா

தோற்றம்:- 02.04.1927

மறைவு:- 04.09.2008

திதி:- 22.08.2012

அப்பா என்றழைத்த எம் இதய தெய்வமே!
ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் அப்பா
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடர்கின்றோம் அப்பா

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

(சி/2521)(2-6-7)

மகன், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சிறி நதியா நகை மாளிகை

## கண்ணீர் அஞ்சலி

எமது உப அலுவலக ஆயுள்வேத மருந்தகத்தின் மருந்தாளராகக் கடமையாற்றும் திருமதி அம்பிகைதேவி பிறேமகுமாரின் அன்பு மகன் *பிறேமகுமார் ஜிலக்சன்* அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொறுப்பதிகாரி, உத்தியோகத்தர், ஊழியர் வலி.கிழக்கு பிரதேச சபை, உப அலுவலகம், உரும்பிராய். (22019)(3.14)

## Vacancy

IDM Nation Campus Chavakachcheri is an recognized organization providing quality educational solutions in Thenmaradchchi region.

We are looking for efficient and dynamic individuals to join with our team for the following positions.

- Student Administration Division Officer - Trainee
  Recognized Qualification in the relevant field and experience in Similar field will be an added advantage
- ICT lecturer
  HND or equivalent qualification,Driving Licenense, adopt to visit multiple training centres will be added advantage.
- Lecturer for computer languages - Part Time
  (Java, C# ,C++)

IDM Nations Campus
Chavakachcheri Branch
No,267, Kandy Road, Chavakachcheri
Tel: 021 7 200 600, FB/IDMCHAVACAMPUS
E- mail: info.idmchava@gmail.com (சி/2564)


## மரண அறிவித்தல்கள்

### மயில் வாகனம் குமாரராஜன்

யாழ்ப்பாணம் மூளாய் செம்மக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் லிட்கம், சிட்னி ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் குமாரராஜன் கடந்த (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் J.P மயில்வாகனம் மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வரும், மகேந்திரராணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்- பொன்னுப் பிள்ளை தம்பதியரின் மருமகனும், கருகம்பானையைச் சேர்ந்த ஆசிரியர், காலஞ்சென்ற முருகசோதிராசர் மற்றும் திருமதி சிவராஜரா-ஜேஸ்வரி தேவி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான சிவராஜ லட்சுமிதேவி மற்றும் திரு சின்னப்புராஜர் (ஆஸ்திரேலியா), காலஞ் சென்றவர்களான சிவபாக்கியலட்சுமிதேவி, சிவானந்தலட்சுமிதேவி மற்றும் திருமதி சிவசோதிலட்சுமிதேவி (ஆஸ்திரேலியா), திருமதி சிவயோக லட்சுமி தேவி (கொட்டாஞ்சேனை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி சீதாலட்சுமி, திரு தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற சிவதாசன், திருமதி ஜெயந்தி, காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் திரு பிரபாகரன், காலஞ்சென்ற யோகநாதன் கீதாஞ்சலி வைத்திலிங்கம், நவரத்தினம் பக்தவட்சலன் ஆகியோரின் மைத்துனரும், மலேசியா சங்கரப் பிள்ளை, வைத்திலிங்கத்தின் சகலனும் பத்மலோஜினியின் உடன் பிறவாச் சகோதரனும், சிவநாராயணி- சந்திரநாத் (லண்டன்), சிவரஞ்சினி-நவதீபன் (கொழும்பு), முரளிதரன்- முருகசோதிராசர் (கொழும்பு), பிறைசூடி சின்னப்புராஜர் (ஆஸ்திரேலியா), மதுரா- சின்னப்புராஜர் (ஆஸ்திரோலியா) ஆகியோரின் பெரியப்பாவும், அணுரதி- சசிதரன் (யாழ்ப்பாணம்), ரதிக்கா- அரவிந்தன் (யாழ்ப்பாணம்), பிரணவன்-வன்னியசிங்கம் (ஆஸ்திரேலியா), கஜமேனன்- பிரபாகரன் (ஆஸ்திரேலியா), நிரோதரன்- யோகநாதன் (கொழும்பு), துவாரகன்-யோகநாதன் (கொழும்பு) ஆகியோரின் மாமனும் ஆவார்.

ஈமைக்கிரியை விபரங்கள்:

Viewing- Tuesday 21st August 2012 between 6pm till 8pm at Liberty Funerle Parlour, 101 South Street, Granville.
Cremation- Wednesday 22nd August 2012 at 12.30pm at Rookwood Cometery, South Chapel.
For Information Contact: Mrs. Cumararajan 0061296438362 or Mr.Sinnappurajar- 006120412171340 Australia. (சி/2569)(3.14)

### கந்தையா பத்மநாதன்

திருநெல்வேலியைப் பிறப்பிட மாகவும், கல்வியங்காட்டைவசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநாதன் நேற்று (21.08.2012) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (தில்லையர்) -பூரணம் தம்பதி யரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சேனாதிராசா- விசாலாட்சி தம்பதியரின் மருமகனும், சரஸ்வ தியின் அன்புக் கணவரும், சுதர்சினி(பிரதேச சபை, நல்லூர்), தாரணி, சுதாகரன் (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், சிதம்பரநாதன், தில்லைநாயகி, உமாதேவி, கைலைநாதன், ஆகியோரின் அன்புச்சகோதரரும், உதயபாலா (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உடுவில்), கஜானி (கனடா), ஆகி யோரின் அன்பு மாமனாரும்,திஷாரகன்,அஜிஷன் ஆகி யோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30,டச்சு வீதி(G.P.Sவீதி),
கல்வியங்காடு.

தகவல்
குடும்பத்தினர்.

(22021)(3.14)

# கல்முனை அபிவிருத்திக்கு சு.கட்சியை பலப்படுத்தவும்

கல்முனை,ஓக.22

கல்முனைப் பிரதே சத்தை துரித கதியில் அபி விருத்தி செய்வதாயின் இங்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்று நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசாரக் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை கல்முனையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சிக்கு மிகவும் திறமையான, ஆளுமை மிக்க, இளம் தலை மைத்துவம் ஒன்றை வழங்கி யுள்ளோம். ஆகையினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் கல்முனைத் தொகுதி அமைப்பாளரும் வேட்பாள ருமான பெஸ்டர் றியாஸை ஆதரித்து வெற்றியீட்ட செய்வதன் மூலம் அரசின் நேரடிப் பிரதிநிதி ஒருவ ரைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் மூலம்இந்தப் பிர தேசத்தினதும் மக்களினதும் எதிர்காலம் சிறப்பாக அமை யும்- என்றார். (ச)

# கிழக்கு வாழ் மக்களின் தீர்ப்பே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும்

திருகோணமலை,ஓக.22

நாட்டின் ஆட்சி மாற்றத் துக்கு அடித்தளமாக அமை யப்போவது கிழக்கு வாழ் மக்களின் தீர்ப்பாகும் என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து போட் டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் எம்.ஏ. எம்.மஹ்ரூப் தெரிவித்தார்.

திருகோணமலையில் நடத்தப்பட்ட தேர்தல் பிர சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஜனநாயகம் செத்துவிட்டது. அராஜகம் தலை விரித்தாடுகிறது. தமிழ் மக்களையும் ஆட்சியாளர் கள் எதிரிகளாகவே பார்க் கின்றனர். இவற்றுக்கு முடிவு கட்டுவது மக்களின் கைக ளில்தான் தங்கியுள்ளது.

நாட்டில் பௌத்த சிலை களை அங்கும் இங்குமாக வைப்பதும் ஏனைய மதத் தினரின் வணக்கஸ்தலங் களை சேதப்படுத்துவதும் பேரினவாதி களின் விளை யாட்டாகிவிட்டது. பொருள் களுக்கு நினைத் தவுடன் விலையேற்றுவதும் நாட் டின் பொருளாதாரத்தை சுரண்டுவதும் சர்வ சாதார ணமாகிவிட்டது. அனைத்து சம யங்கள், அவற்றைச் சார்ந்தோர் அனைவரும் சமமாக இலங்கையர் என்ற கண்ணோட்டத்துடன் நடத் தப்படுவர் என்று கூறிக் கொண்டு குரோதத்தை வளர்க்கும் செயல்களே நாட்டில் கட்டவிழ்த்து விடப் பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபை யின் ஆட்சிக்கு வருவது யார் என்பதைத் தீர்மானிக்கும் கட்சியாக எதிர்வரும் தேர்த லில் ஐக்கிய தேசியக் கட் சியே இருக்கப்போகின்றது.

ஆட்சியாளர்களின் சர் வாதி காரப் போக்குக்கு கிழக்கு மாகாணத் தேர்தலில் மக்கள் சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும் - என்றார். (ச-40)

## கிராமிய வைத்தியசாலையை பஸில் திறந்து வைத்தார்

மட்டக்களப்பு, ஓக.22

மட்டக்களப்புக்கு நேற்றுமுன்தினம் பயணம் செய்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பன்சே னையில் மீள் எழுச்சித் திட்டத்தினுடாக புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கிராமிய வைத்தியசாலையை திறந்துவைத்தார்.

இந்நிகழ்வு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்ட கிழக்கு மாகாணத் திட்டப் பணிப்பாளர் எஸ்.கே. லியனகே தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான பன்சேனையானது, நகரில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நிலையில் இப்பகுதி மக்கள் பல்வேறு விதத்திலும் பொதுச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (16)


Diploma in Microsoft office
Diploma in Desktop Publishing
Diploma in Graphic Designing
Diploma in Web page Designing
Diploma in Multimedia
Diploma in Video Editing
Course Fee 1000/=
கணக்கியல்துறையில் வல்லுனராக....
Dip in Computerized Accounting
Quick Book , ACCPAC , MYOB ஆகிய முன்னணி மென்பொருட்களுடாக கம்பனி கணக்குகளுடன் VAT இனையும் உள்ளடக்கி
உங்கள் கனவுகளை நீங்களே அமைத்திட
Dip in Hardware Engineering
Assembling, Upgrading, Repairing, Installation, Networking ஆகியவற்றின் ஊடாக நவீன பாகங்களுடன் (Dual Core, i3, i5, i7)
Duration: 3Month
Course Fee: 2000/=
சனி/ஞாயிறு 09AM & புதன்/வெள்ளி 03PM
Tally Class - Sat/Sun - 10.00AM
COMPUTER EXPRESS
No 15, Sirambiyadi Lane, (off stanly Road)
Jaffna. Phone : 021-222-8250



## அலுவலக சுத்திகரிப்பாளர் தேவை

எமது நிறுவனத்திற்கு அலுவலக சுத்திகரிப்பாளர் தேவை (ஆண்)
வயது எல்லை 21-30
உடனடியாக கீழ்க் காணும்.
முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்:
CSC- Asian Computer Education
2G, Stanley Road,
Jaffna.
0212225677 (சி/2563)(3.14)



## கண்ணீர் அஞ்சலி

எமது வலி. கிழக்கு பிரதேச சபையில் ஆயுள்வேத மருந்தாளராக கடமையாற்றும் திருமதி அம்பிகை தேவி பிறேமகுமாரின் அன்பு மகன் *பிறேமகுமார் ஜிலக்சன்* அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
புத்தூர். (22018)(3.14) ஊழியர் நலன்புரிச்சங்கம்.



## பதவி வெற்றிடம்

பிரபலசந்தைப்படுத்தல் நிறுவனத்திற்கு கீழ்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1)விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)(ஆண்)
- வயது (30 - 50)
- உணவுப் பொருட்கள் விற்பனைத்துறையில் இரண்டு, (2 வருடத்திற்கு குறையாத விற்பனை அனுபவச்சான்றிதழ் உடையவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்
- சிங்களம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்
- கிளிநொச்சிப் பிரதேசத்தில் தங்கியிருந்து வேலை செய்தல் வேண்டும்.

02) நிதி வசூலிப்பவர் (CASH COLLECTOR) (ஆண்)
- வயது (25 -50)
- இரண்டு வருடத்திற்கு குறையாத இத்துறை சார்ந்த அனுபவம்
- மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம்
- சிங்களம் மேலதிக தகைமை

03) கணக்கு உதவியாளர் (Account Assistand)(பெண்)
- வயது (25 -50)
- ஏதாவது நிறுவனத்தில் கணக்கீடு சார்ந்த துறையில் இரண்டு (2) வருடத்திற்கு குறையாத அனுபவம்
- கணினி அனுபவம் மேலதிக தகைமையாக எதிர் பார்க்கப்படும்

தொடர்பு:-0774125422 (c/2569)(3.14)


## மரண அறிவித்தல்

திருமதி *இராஜதேவி நடராஜா*

கொக்குவிலைப்பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜதேவி நடராஜா நேற்று (21.08.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் திரு திருமதி விநாசித்தம்பி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற நடராஜாவின் (மண்டலாய் மாஸ்டர்-புலோலி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோதிமதி, வச்சிரவேல், புவ னேஸ்வரி, வச்சிரலிங்கம், மங்கையற்கரசி, திலகவதி ஆகியோ ரின் அன்புச் சகேதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்துமயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேப்பர் கடை,
இருபாலைச்சந்தி,
கோப்பாய் தெற்கு,கோப்பாய்.

தகவல்
இ.விஜயநாயகம்
(மணி)

## வெள்ள வாய்க்காலில் குப்பை அகற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.22

கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையிலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் மழைவெள்ளம் வழிந்தோடும் வெள்ளவாய்க்காலினுள் குப்பை கூழங்கள் கொட்டப்பட்டு நீண்டகாலமாக அகற்றப்படாமல் உள்ளது. மழை காலம்ஆரம்பித்தால்வெள்ளம் தடைப்பட்டு பல்வேறு இடையூறுகள் ஏற்படும் என்பதால் அதனை அகற்றுமாறு மக்கள் கோருகின்றனர்.

பல மாதங்களாக அந்த வெள்ள வாய்க்கால் குப்பை கூழங்களால் நிறைந்து காணப்படுகிறது. அவ்வழியே சென்று வருபவர்களாலேயே அவை கொட்டப்படுகின்றன. தற்பொழுதும்அதனுள்குப்பை கூழங்கள் கொட்டப்படுகின்றன. அதனால் சுகாதாரச் சீர்கேடும் நிலவுகிறது.

இதற்குப் பொறுப்பாக உள்ள நல்லூர் பிரதேசசபை குப்பை கூழங்களை அகற்றி உதவுமாறு மக்கள் கோருகின்றனர். (ம-4)

## மானிய உரம் வழங்கப் பதிவு

தென்மராட்சி, ஓக. 22

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ கமக்கார அமைப்புக்கு உட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு மானிய உரவகைகள் வழங்குவதற்கான பதிவுகள் இன்று காலை 9 மணி தொடக்கம் மறவன்புலோ சாகலகலாவல்லி வித்தியாலயத்தில் இடம்பெறும்.

அமைப்புக்கு உட்பட்ட அனைத்து நெற்செய்கையாளர்களையும் பதிவு செய்யுமாறு அமைப்பின் செயலாளர் சி.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். (ம-9)

## கட்டடத் தொழிலாளி மாரடைப்பால் உயிரிழப்பு

தென்மராட்சி, ஓக. 22

தென்னிலங்கையில் இருந்து தொழிலுக்கு வந்த கட்டடத் தொழிலாளி மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மிருசுவிலில் இடம்பெற்றது.

மிருசுவில் தவசிக்குளம் பகுதியில் கட்டடவேலையில் ஈடுபட்டிருந்த வேளையில் மாரடைப்பு ஏற்பட்டதால் வாகனம் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கிய போது சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த பீ.ஏ.சந்திரரத்ன (வயது 42) என்பரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

# குடிதண்ணீர், சுகாதாரத் திட்ட எண்ணக்கருவை சமர்ப்பிக்குக

### யுனிசெப் திட்ட அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.22

மீளக்குடியமர்ந்துவரும் பிரதேச மக்களுக்கான குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்டங்கள் தொடர்பான எண்ணக்கருக்களை விரைந்து வழங்குங்கள். 11 மில்லியன் ரூபா சகல பிரதேச சபைகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் பகிர்ந்து வழங்கப்படும்.

இவ்வாறு யுனிசெப் திட்ட அதிகாரி ஆர்.தயாபரன் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா.ஜெயகரன் தலைமையில் உள்ளூராட்சி சபை செயலாளர்களுக்கான கூட்டம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது எழுதுமட்டுவாள், மருதங்கேணி, சாவகச்சேரி, தெல்லிப்பழை உள்ளிட்ட பிரதேசங்களில் மீள்குடியமர்வு இடம்பெறுகின்றது.

இந்த மக்களை மையமாக வைத்து உள்ளூராட்சி சபை செயலாளர்கள் குடிதண்ணீர் திட்டம், சுகாதாரத்திட்டம், மற்றும் அவசர திட்டங்களை மட்டும் முன்வையுங்கள்.

அத்துடன் 16 உள்ளூராட்சி சபைகளின் குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்டங்களின் விவரங்களையும் கேட்டறிந்ததுடன் வெள்ளப் பெருக்கு, இயற்கை அழிவுகளுக்கு முன்னுரிமை கொடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

''யுனிசெப்பின் உதவியுடன் வலி. வடக்கு பிரதேச சபைக்கு 25 தண்ணீர் தாங்கிகளும், வலி.மேற்கு பிரதேச சபைக்கு 15 தண்ணீர் தாங்கிகளும் முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளன.''- என்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா.ஜெயகரன் தெரிவித்தார். (ம-41)

## நல்லூர் நகைத் திருட்டு: சந்தேகநபர்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் கந்தசுவாமி கோயில் கொடியேற்றத் திருவிழாவின் போது பக்தர்களிடம் நகைகள் திருடி வாகனத்தில் தப்பிச் சென்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் 7பேரும் பிணையில் செல்ல யாழ்.நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதித்தது.

பிறமாவட்டத்தைச்சேர்ந்த இந்த 7 பேரும் இதுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். 4பெண்களும் 3ஆண்களும் இந்தக்குழுவில் அடங்குவர்.

ஹையஸ் வாகனம் ஒன்றில் யாழ்ப்பாணத்தை விட்டுப் பயணித்துக் கொண்டிருந்த இவர்கள் பளையில் தரித்து நின்றபோது கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களிடமிருந்து, நல்லூரில் திருட்டுப் போன ஒரு தொகுதி நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறியிருந்தனர்.

அந்த நகைகள் பின்னர் யாழ். நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன.

சந்தேகநபர்கள் ஒவ்வொருவர் மீதும் நான்கு வழக்குகள் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு வழக்குகளில் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணை அடிப்படையிலும் மற்றொரு வழக்கில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் நான்காவது வழக்கில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு ஆள் பிணையிலும் சந்தேகநபர்கள் 7 பேரும்விடுவிக்கப்பட்டனர்.

அதன்படி ஒவ்வொருவருக்கும் நான்கு வழக்குகளிலும் 7 பிணைகள் வீதம் 7பேரும் 49 பிணைகளில் விடுவிக்கப்பட்டனர். (உ-4)

கோப்பாய் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் ரக வாகனம் ஒன்று வீட்டு மதில் ஒன்றை உடைத்து காணிக்குள் புகுந்துள்ளது. (ம-253)

## வீதி திருத்தம்

அளவெட்டி, ஓக.22

பல வருடங்களாக கவனிப்பாரற்று திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்பட்ட அளவெட்டி டச்சு வீதி தற்போது வலி.வடக்கு பிரதேச சபையால் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

கற்கள் பரவி, வேலைகள் ஆரம்பமாகியுள்ளதால் மிக விரைவாக வேலைகள் முடிந்து மக்கள் சிரமமின்றி பயணிக்க முடியும் என மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்த வீதியால், பாடசாலை மாணவர்கள் விவசாயிகள் அதிகம் பயணிப்பதும் குறிப்பிடத்தக்கது. நீண்ட காலமாக மழை காலங்களில் சேறும் சகதியுமாகக் காணப்பட்ட வீதிக்கு விடிவுகாலம் வந்து விட்டதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-36)

## நெடுந்தீவு கடற்கரையில் இறந்த திமிங்கலம்

### 51 அடி நீளமானது

யாழ்ப்பாணம், ஓக.22

நெடுந்தீவு வெல்லை புனித யூதாததேயு தேவாலயத்திற்குச் சமீபமாக கடற்கரையில் கடந்த வெள்ளிக்கிழமை இறந்த நிலையில் 51 அடி நீளமான திமிங்கிலம் ஒன்று ஒதுங்கியுள்ளது.

இந்தத் திமிங்கிலம் மூன்று தினங்களுக்குமுந்தப்பகுதியில் துர்நாற்றம் வீசியவாறு கவனிப்பாரின்றிக் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இதை அவதானித்த நெடுந்தீவு கடற்படை அதிகாரி உடனடியாக கடற்படை உத்தியோகத்தர்களுடன் பைக்கோ வாகனத்துடன் சென்று திமிங்கிலத்தைக் கரைக்கு இழுத்து குழியைத் தோண்டி புதைத்துள்ளார். (ம-7)

## வீதி திருத்தத்துக்கு பறிக்கப்பட்ட கற்கள் கீப்கட்டப்பட்டு ஓரத்தில்

அளவெட்டி, ஓக.22

கந்தரோடை வீதியில் இருந்து இக்கிராணை மக்கள் குடியிருப்பு ஊடாகச் செல்லும் வீதி திருத்துவதற்காக கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு கங்கற்கள் பறிக்கப்பட்டும் இது வரை பணிகள் ஆரம்பிக்கப் படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பறிக்கப்பட்ட கற்கள் அடுக்கி கீப் கட்டப்பட்டுள்ள நிலையில் வீதியின் இரு பக்க ஓரங்களிலும், பக்கத்துக் காணிகளிலும் காணப்படுகிறன.

இந்த வீதி நீண்ட காலமாக மணல் வீதியாகவே உள்ளது டன் மழைகாலத்தில் பயணிப்பதும் சிரமம் என்றும் இந்தப் பகுதி மக்கள்தெரிவிக்கின்றனர்.

ஒப்பந்தக்காரரின் அசமந்தப் போக்கால் ஒரு வருடமாக வீதி திருத்தப்படாமல் உள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து மழை காலத்துக்கு முன் வீதி அமைத்துத் தர வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-36)

## மூன்று மாதங்களுக்கான கொடுப்பனவை வழங்குமாறு இ.போ.ச. ஊழியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.22

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை ஊழியர்கள், தமக்குரிய மூன்று மாதங்களுக்கான கொடுப்பனவை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தவறின் மறுநாள் 13ஆம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது தொடர்பில் தீர்மானம் எடுக்குமாறு தமது தொழிற்சங்கத் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.ஏ.அஸ்ஹருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அதன் பின்னர் முடிவெடுக்கவுள்ளதாகவும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான கூட்டம் ஒன்று யாழ். பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றது. அதன் போதே ஊழியர்களான பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் இதனைக் கோரியுள்ளனர். கடந்த மார்ச் மற்றும், ஜூலை மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் ஒரு பகுதியினருக்கு இன்னும் வழங்கப் படவில்லை.

அதனுடன் இந்த மாதக் கொடுப்பனவையும் சேர்த்து எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டும். தவறின் மறுநாள் 13 ஆம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று ஊழியர்கள் தொழிற் சங்கத்திடம் கேட்டுக் கொண்டனர்.

அது பற்றியே பிராந்திய முகாமையாளருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தொழிற்சங்கத் தரப்பினர் தெரிவித்தனர். (ம-4)

## அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலணையில் 4 பாடசாலைகள்

வலி வடக்கு, ஓக.22

மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்குக்கு அமைய அறிவை மையமாகக் கொண்ட அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளையும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்யும் செயல் திட்டத்தின் கீழ் வேலணை கோட்டத்தில் நான்கு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு பணிகள் அரம்பிக்கப் பட்டுள்ளன.

புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை, புங்குடுதீவு துரைச்சாமி வித்தியாலயம், புங்குடுதீவு இராஜஇராஜேஸ்வரி வித்தியாலயம், புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

உடனடியாக அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் முகமாக தலா ஐந்து லட்சம் ரூபா நிதி ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒதுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-86)

## மீண்டும் முடங்கிய வடக்கு மின்தொகுப்பு

லக்னோ, ஓக.22

வடக்கு மின் தொகுப்பு நேற்றுமுன்தினம் மீண்டும் முடங்கும் நிலை ஏற்பட்ட போதும் உத்தரப் பிரதேச அரசின் துரித நடவடிக்கை யால் தவிர்க்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு, வட கிழக்கு மின் தொகுப்புகள் கடந்த மாதம் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் முடங் கின. இதனால் 20 மாநி லங்கள், 2 யூனியன் பிரதே சங்களில் மின் தடை ஏற்பட் டது. இந்த பிரச்சினையை தவிர்க்க தீவிர நடவடிக்கை எடுப்பது குறித்து மத்திய அரசு ஆலோசித்துக் கொண் டிருக்கிறது.

மின்தொகுப்பிலிருந்து அதிகளவு மின்சாரத்தை எடுக்கும் மாநிலங்களுக்கு மிக அதிக அளவிலான அப ராதம் மற்றும் சம்பந்தப் பட்ட அதிகாரிகள், தலை மைச் செயலருக்கு சிறை தண்டனை விதிப்பது பற்றி ஆலோசித்துக் கொண்டி ருப்பதாக மத்திய மின்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி கடந்த ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் கூறி யிருந்தார்.

இந்தநிலையில் வடக்கு மின் தொகுப்பில் மின் விநி யோக அலைவரிசை நேற்று முன்தினம் காலை 10. மணிக்கு 48.8 புள்ளியாக குறைந்தது. இது இயல்பாக 49.7 - 50.2 அலைவரி சையாக இருக்க வேண்டும். இதை உடனடியாகக் கண்டு பிடித்த உத்தரப் பிரதேச மின் கார்பரேஷன் நிறுவனம், பல மாவட்டங்களுக்கு செல் லும் மின் விநியோகத்தைதுண் டித்தது. இதனால் வடக்கு மின் தொகுப்பு முடக்கம் நேற்றுமுன்தினம் தவிர்க்கப் பட்டது. (வ)

## பிரணாப்புக்கு எதிராக சங்மா வழக்கு

முன்னாள் மக்களவை தலைவரும், எதிர்க்கட்சி களின் ஜனாதிபதி வேட்பா ளருமான பி.ஏ.சங்மா, பிரணாப் முகர்ஜியின் ஜனாதிபதித் தேர் தல் வெற்றியை எதிர்த்து நேற்று செவ்வாய்க்கிழமை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

முன்னதாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் பி.ஏ. சங்மாவின் சட்டத்தரணி சத்யா பால் ஜெய்ன் மற்றும் பாஜக எம்.பியும் சட்டத்த ரணியுமான ராம் ஜெத்மலானி ஆகியோர் இது குறித்து விளக்கமளித்திருந்தனர்.

சட்டவரைபியின் படி தோல்வி அடைந்த ஜனா திபதி வேட்பாளர், தேர்தல் முடிவுகளை எதிர்த்து மனுத் தாக்கல் செய்யலாம். நேரடியா கத் தோல்வி அடைந்த வேட் பாளர் அல்லது 20 வாக்காளர் கள் இவ்வாறு மனுத்தாக்கல் செய்யலாம் என்று கூறியி ருந்தனர். பி.ஏ.சங்மா மனுத் தாக்கல் செய்வது அவரது தனிப்பட்ட விருப்பம் என பாஜக பேச்சாளர் ராஜீவ் பிரதாப் ரூடி தெரிவித்திருந் தார். (வ)

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 68 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு டில்லி வீர்பூமியில் உள்ள அவரது நினைவிடத்தில் கணவர் ராபர்ட் வதேராவுடன் சென்று பிரியங்கா வதேரா அஞ்சலி செலுத்தினார்.

## அடுத்த பிரதமர் போட்டி ராகுல் - மோடி இடையே

### அமைச்சர் பேனி பிரசாத் வர்மா கருத்து

அடுத்த பிரதமர் பதவிக்கு ராகுல் காந்தி - நரேந்திர மோடி ஆகிய இருவருக்கும் இடையி லேயே போட்டி நிலவும் என்று காங் கிரஸைச் சேர்ந்த மத்திய அமைச்சர் பேனி பிரசாத் வர்மா தெரிவித்துள் ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாஜ்வாத கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ் தான் பிரதமராவது பற்றி கனவு கண்டு கொண் டிருக் கிறார். எனினும் அவரால் மத்தி யில் ஆட்சி அமைக்க முடியாது.

மத்தியில் ராகுல் காந்தி அல்லது நரேந்திர மோடியி னால் மாத்திரமே ஆட்சி அமைக்க முடியும். ராகுல் காந்தி காங்கிரஸின் போட்டி யாளராக அறிவிக்கப்படுவார் ஆயின் அவரே நிச்சயம் பிரத மர் ஆவார். மன்மோகன் சிங் கின் ஆசியும் அவருக்கு இருக் கும்-என்றார். (வ)

# மன்மோகன் பதவி விலகட்டும்

## எதிர்க்கட்சிகள் அமளியில் இறங்கியதால் நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைப்பு

டில்லி, ஓக.22

நிலக்கரி சுரங்க ஊழ லுக்குப் பொறுப்பேற்று பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலக வலியுறுத்தி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பாரதீய ஜனதாக்கட்சி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் அமளியில் இறங்கின. இதனால் 2 அவை களும் ஒத்திவைக்கப்பட்டன.

2005 -2009 ஆம் ஆண்டு வரை நிலக்கரி சுரங்க உரி மைகளைப் பகிரங்கமாக ஏலம் விடாமல் தனியார் நிறுவனங் களுக்கு தாராளமாக வாரி வழங்கியதில் மத்திய அரசுக்கு ரூ. ஒரு லட்சத்து 86 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டிருப்ப தாக தலைமை கணக்கு அதி காரி அறிக்கையில் குற்றம் சாட் டப்பட்டுள்ளது. இந்த கால கட்டங்களில் 142 நிலக்கரி சுரங்கங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என் றும் கூறப்பட்டது. இந்த அறிக்கை தவறானது என்று



நிலக்கரித் துறை அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் திட்டவட்டமாக மறுத்து வரு கிறார்.

இந்த அறிக்கை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. வார விடுமுறை மற்றும் ரம்ஜானுக்கு பின்னர் நாடா ளுமன்றம் நேற்று முற்பகல் 11 மணிக்கு கூடியது. மக்க ளவை தொடங்கியதும் பா.ஜ. உறுப்பினர்கள் பிரத மர் மன்மோகன் சிங் ராஜி னாமாச் செய்ய வேண்டும் என்று கோரி கோஷங்கள் எழுப்பினர். அவர்களுக்கு ஆதரவாக இடதுசாரிகள், தெலுங்கு தேசம், அ.தி.மு.க. மற்றும் பா.ஜ. கூட்டணிகட்சி உறுப்பினர்களும் கோஷ மிட்டனர்.

சபாநாயகர் மீராகுமாரின் இருக்கைக்கு முன்பு கோஷ மிட்டனர். அவர்களுக்கு பதில் அளித்து ஆளும் காங் கிரஸ் கூட்டணி உறுப்பினர்க ளும் கோஷமிட்டனர். இத னால் அவையில் கடும் அமளி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பகல் 12 மணி வரை அவை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் மீரா குமார் அறி வித்தார். மீண்டும் அவை கூடிய போதும் எதிர்க்கட்சி கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதனால் நாள் முழுவதும் அவை ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்னையை எழுப்பி பா.ஜ. உள்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர். பா.ஜ. துணைத் தலை வர் ரவிசங்கர் பிரசாத், வெங்கையா நாயுடு ஆகி யோர் அரசை எதிர்த்து கார சாரமாக பேசினர். இதனால் கூச் சல் குழப்பம் நிலவியது.(வ)

## வதந்தி பரப்பியது பாகிஸ்தானே

அஸாம் மக்கள் தங்கள் சொந்த ஊருக்குச் செல்லும் படியான வதந்திகளை பாகிஸ் தான்தான் பரப்பியது என்ப தற்கான ஆதாரங்களை சமர்ப் பிக்க இந்தியா தயார் என்று, மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே தெரி வித்தார்.

வதந்திகளை பாகிஸ் தான்விஷமிகள்இணையதளங் கள் மூலம் பரப்பி வருவதாக இந்தியா கூறியதற்கு, ஆதாரங் கள் இருக்கிறதா என்று பாகிஸ் தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் கேட்டுள் ளார். தற்போது பாகிஸ் தான் தான் இணையத்தளம் மூலம் அசாம் மக்கள் அயல்மா நிலங் களை விட்டு வெளியேறக் கார ணமான வதந்திகளைப் பரப் பியது என்பதற்கான ஆதாரங் கள் கிடைத்து விட்டன. அதை பாகிஸ்தானிடம் ஒப்படைக்க இந்தியாதயாராக உள்ளதுஎன்று அவர் மேலும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொண்டு, பாகிஸ் தான் இணையத்தளங்கள் அஸாம் மாநிலத்தவர்கள் தாக் கப்படுவதுபோன்ற காட்சிகளை பரப்பியமையைம் சுட்டிக் காண் பித்துப் பேசியிருந்தார்.(வ)

## அமெ. உதவியை நாடும் இந்தியா

### வன்முறையைத் தூண்டும் இணையங்களை முடக்க

டில்லி, ஓக.22

இந்தியாவில் வன் முறை யைத் தூண்டும் வகையில் ஆட்சேபனைக்குரிய படங் கள், காணொலிகளை அமெரிக்க சேமிப் பகங்கள் மூலம் அப் லோடு செய்திருக்கும் இணை யத்தளங்கள் பற்றிய விவரங் களை அந்தநாட்டிடம் இருந்து பெற இந்தியா நடவடிக்கை களை மேற்கொண்டிருக்கிறது.

சுமார் 250 இணையத் தளங்கள் வன்முறையைத் தூண்டும்வகையிலானபுகைப் படங்களையும் காணொலி களையும் பதிவேற்றம் செய் திருக்கின்றன. இந்த இணை யத் தளங்கள் மற்றும் மின் னஞ்சல்கள் தொடர்பாக கூகுள் மற்றும்ஃபேஸ்புக் நிறு வனங்கள் அளித்த தகவ லில் பெரும்பாலானாவை பாகிஸ்தானிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தானில் பதிவு செய் யப்பட்டிருந்தாலும் அவை அமெரிக்காவில் இயங்கும் சேமிப்பகங்கள் மூலம் பதி வேற்றம் செய்யப் பட்டிருப் பதும் தெரியவந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா விடம் இந்த இணையத்தளங் கள் பற்றிய கூடுதல் விவரங் களைக் கோர இந்தியா முடிவு செய் துள்ளது. (வ)

## லோக்பால் விவகாரத்தில் பிரதமர் ஒருமித்த கருத்தை பெறாதது ஏன்?

### ஹசாரே கேள்வி

டில்லி, ஓக.22

அணுசக்தி ஒப்பந்தம், ஜனாதிபதித் தேர் தல் ஆகியவற்றுக்கெல்லாம், தமது கூட்ட ணியில் இல்லாத சில எதிர்க்கட்சியினரின் ஆதரவைப் பெற்ற பிரதமர் மன்மோகன்சிங், லோக்பால் பிரேரணையைக் கொண்டுவரும் விடயத்தில் மட்டும் எதிர்க்கட்சிகளின் ஒருமித்த கருத்தைப் பெறமுடியாதது ஏன் என அன்னா ஹசாரே கேள்வி எழுப்பினார்.

ஹசாரே தனது வலைப் பூவில் (பிளாக்) தற் போதைய தனது கருத்தைப் பதிவு செய்துள் ளார். அதில் அவர் தெரிவித்ததாவது:-

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மனது வைத்தால் நிச்சயம் லோக் பால் பிரேரணையைக் கொண்டுவர முடியும். இதற்காகக் கூட்டணிக் கட்சிகள், எதிர்க் கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை ஏற் படுத்த பிரதமர் மன்மோகன் சிங்கால் முடியும். கடந்த 15 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று பிரத மர் உரையாற்றும்போது, லோக்பால் பிரே ரணை கொண்டு வருவதில் பிற கட்சிகளின் ஒருமித்த கருத்தைப் பெறுவதில் சிரமமாக உள்ளது என்றும், பிரேரணை நிச்சயம் நிறை வேறும் எனவும் கூறியுள்ளார்-என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## தொ.தொ. கோபுரத்தில் போராட்டம் நடத்திய சிப்பாய் மருத்துவமனையில்



டில்லி ரயில்நிலையம் அருகில் உள்ள தொலைத் தொடர்பு கோபுரத்தின்மேல் நின்று கொண்டு கடந்த மூன்று நாள்களாக போராட்டம் நடத்திய படைச் சிப்பாய் முத்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நான்காவது நாளாக தமிழகத்தைச் சேர்ந்த படை சிப்பாய் முத்து தொலைத் தொடர்பு கோபு ரத்தின் உச்சி யில் இருந்து கொண்டு தனது போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார். ஆனால், நேற்றுக் காலைமுதல் முத்து விடமிருந்து எந்த சலனமும் இல்லாமல் போகவே, இராணு வத்தினர் மேலே ஏறிப்பார்க்கும் போது, முத்து மயக்க நிலை யில் இருந்திருக்கிறார். பின்னர் அவரை இறக்கிவந்து மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். தற்போது முத்து நலமாக உள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராஜஸ்தான் இராணுவத்தில் பணிபுரியும் முத்துவுக்கு கடந்த 8 மாதங்களாக சம்பளம் வழங்கவில்லையாம். அடிக்கடி பணியிடை மாற்றம் செய்து இவரை மன உளைச்சலுக்கு ஆளாக்கி வருவதாகவும் கூறி, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணியை சந்தித்துப் பேசவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து தொலைத்தொடர்பு கோபுரத்தின்மேல் ஏறினார் முத்து. (வ)

# ஐ.நா. கண்காணிப்பாளர்கள் சிரியாவில் வெளியேற்றம்

சிரியாவில் இருந்து 29 ஐ.நா. கண் காணிப்பாளர்கள் அயல் நாடான லெபனானின் தலை நகர் பெய்ரூட்டை நோக்கி வெளியேறியுள்ள னர்.

சிரிய மக்கள் புரட்சிப் போரை நிறுத்துவது தொடர் பாக அரசு மீது ஐ.நா. முன் வைத்த போர் நிறுத்த கண் காணிப்புச் செயல் திட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் காலாதியா னதை அடுத்தே இந்த நட வடிக்கை மேற் கொள்ளப் பட்டுள்ளது. முதற் கட்டமாக ஞாயிற்றுக் கிழமை 6 ஐ,நா. கண் காணிப் பாளர்கள் வெளி யே றி யிருந்தனர். நேற்று மேலும் 23 பேர் வெளியேறினர்.

சிரியாவில் இன்னமும் எஞ்சியிருக்கும் ஐ.நாவின் ஒரு சில கண்காணிப்பாளர் களும் இன்னும் ஓரிரு தினங் களில் அந்த நாட்டை விட்டு

நீங்கவுள்ளனர்.

இந்த நிலையில் ஹோம்ஸ் மாகாணத்தில் தற்போது ஐ.நா. கண்காணிப்பாளர்கள் யாருமே இல்லாத சூழ்நிலை நிலவுகின்றது.

சிரியாவில் கடந்த ஏப்ரல் தொடக்கத்தில் ஐ.நாவின் 6 அம்ச அமைதித் திட்டம் அரபு சம்மேளத்தின் ஒப்பு தலுடன் பிரேரிக்கப்பட்டிருந்த தது. எனினும் வன்முறை களைத் தடுக்க இயலாது இந்தத் திட்டம் தோல்விய டைந்ததை அடுத்து ஐ.நா வின் விசேட தூதரான கொபி அனான் தனது பதவி யில் இருந்து விலக்கினார்.

## குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோருக்கு அபராதம்

**ஜேர்மன் அதிரடி**

ஜேர்மனியில் குழந்தை களை பாடசாலைக்கு அனுப் பாத பெற்றோருக்கு அப ராதம் விதிக்கப்படும் என்று அந்த நாட்டு தொழில்துறை அமைச்சர் ஊர்சுலா வான் டெர் லெயென் நேற்றுமுன் தினம் தெரிவித்தார்.

அந்த நாட்டு நாளிதழுக்கு அளித்த பேட்டியின்போது அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். பேட்டியின்போது அவர்மேலும்தெரிவித்ததாவது:-

நீண்டகாலமாக வேலை யில்லாமல் தவிக்கும் ஆள் களில் பாதிப்பேருக்கு நல்ல கல்வியும், தொழில் கல்வித் துறையில் பட்டமும் கிடை யாது. இவர்களில் பலர் வேலையில்லாப் பிரச்சினை யில் இருப்பதற்குக் காரணம் முறையான பாடசாலைக் கல்வியைப் பெறாததுதான்.

எனவே பெற்றோர் அதற் குப் பொறுப்பெடுத்துத் தம் பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பிப் படிக்கச் செய்ய வேண்டும். அவ்வாறு படிக்கவில்லை என்றால் பெற்றோர் அபரா தம் கட்ட நேரிடும்.

பெற்றோரும் வேலை இல்லாதவராக இருந்து அரசு உதவித்தொகை பெற்று வந்தால் அந்த உதவித் தொகை நிறுத்தப்படும். நல்ல பெற் றோராக இருந்து தம் கடமை களை நிறை வேற்றாதவ ருக்கு உதவித் தொகை அளிப் பது பயனில்லை - என்றார்.

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம் 6 பேர் சாவு; 43 பேர் காயம்

வடக்கு இந்தோனேசியா வின் சுலவேசி தீவிலுள்ள பாலு நகரத்தை 6.6 ரிக்டர் ஸ்கே லில் நில நடுக்கம் தாக்கிய தில் இது வரை 6 பேர் உயி ரிழந்தனர். 43 பேர் காய மடைந்தும் இதில் 8 பேர் கவ லைக்கிடமாகவும் உள்ளதாக வும் தெரிவிக்கப் படுகிறது.

இந்தோனேசியாவின் பூகம்பம் தாக்கிய கிராமங் களின் மலைப் பகுதிகளில் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு அதிலும் பலர் சிக்கித் தவித்து வருகின்றனர். இத னால் உயிரிழப்பு அதிகரிக் கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் ஹெலி கொப்டர் மூலம் அனர்த்த நிவாரணப் படை உணவுப் பொதிகளையும் தண்ணீர்ப் போத்தல்களையும் போட்டு

வருகின்றனர். இந்தோனேசி யாவின் அனர்த்த நிவார ணப் பிரிவின் பேச்சாளர் இந்தப்பூகம்பம் தொடர்பா கக் கருத்துரைக்கையில்,

சுமார் 471 வீடுகள் முற் றாக சேதமடைந்துள்ளதாக வும் பாதைகள் மண்சரிவு காரணமாகத் தடைப்பட் டிருப்பதாகவும் இதனால் மீட்புப் பணி சிரமமடைந் துள்ளது என்றும் தெரிவித் தார். மேலும் வீடுகளை இழந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் சேதமடையாத அரச அலுவலகக் கட்டடங்களில் அல்லது பாதுகாப்பற்ற கூடா ரங்களில் தஞ்சமடைந் திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எதியோப்பிய பிரதமர் காலமானார்

எதியோப்பியாவின் பிரதமர் மெலஸ் ஸெனவி தனது 57ஆவது வயதில் காலமாகியுள்ளதாக அந்த நாட்டு அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் கடந்த ஒருவார கால மாக கடும் சுகவீனமடைந் திருந்த நிலையிலேயே காலமானார்.

கடந்த ஜூலை மாதம் இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவரது தேக ஆரோக்கியம் தொடர்பில் பொது மக்க ளுக்கு அறிவிக்கப்படவில்லை.

கடந்த மாதம் அடிஸ் அபாபாவில் நடைபெற்ற ஆபிரிக்க ஒன்றியத்தின் உச்சி மாநாட்டிற்கு சமுகம ளிக்கத் தவறியபோது இவ ரது தேக ஆரோக்கியம் குறித்து பல ஊகங்கள் எழுந்திருந்தன.

1991ஆம் ஆண்டு கம் யூனிஸ்ட் தலைவர் மெங்ஸ்ட்டு ஹெய்லி மரியம் என்பவரை பதவி விலக்கிய பின்னர் மெலஸ் ஸெனவி பதவிக்கு வந்தார்.

## 2 ஆம் உலகப் போரில் சண்டையிட்ட கனேடிய வீரர்களுக்கு பிரான்ஸில் மரியாதை

இரண்டாம் உலகப் போரில் பிரான்சின் கடற் கரைப்பட்டினமான டயப் என்ற ஊரில் வீர போர் புரிந்த கனடா நாட்டைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் ஏழு பேருக்கு பிரான்ஸில் நேற்றுமுன்தினம் வீர வர வேற்பு அளிக்கப்பட்டது.

போரிட்டு மீட்டுக் கொடுத்த டயப் ஊருக்கு வீரர்கள் ஊர்வலமாக அழைத் துச் செல்லப்பட்டனர். ஆயி ரக்கணக்கானோர் வீதியோ ரங்களில் கூடி நின்று முன் னாள் வீரர் ஏழு பேருக்கும் வாழ்த்தொலி தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் 90 வயதை உடையவர்கள். இந்த விழாவுக்காக வீரர்கள் அனைவரும் கனடாவிலி ருந்து வடமேற்கு பிரான் சுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பலர் சக்கர நாற் காலிகளிலும் கோல் ஊன்றி நடந்தும் வந்தனர்.

இந்த ஊர்வலத்தில் இந்த ஏழு முதுபெரும் வீரர்களும் சிவப்பு பாப்பி மலர் அணிந்து கம்பீர நடைபோட்டு வந் தனர். 1942 ஆம் ஆண்டில் ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திக தியன்று ஜேர்மனியரின் பிடி யில் இருந்த டயப் ஊரை 5,000 கனடா வீரர்கள் சில மணி நேரங்களில் போராடி மீட்டுத் தந்தனர்.

அப்போது நடந்த போரில் 900 பேர் உயிரிழந் தனர். 2,500 பேர் சிறை பிடிக்கப்பட்டனர். ஜேர்மனி வீரர்களுக்கும் கனடா வீரர்களுக்கும் இடையே நடந்த இந்தப்போரில் பங்கு பெற்றவர்களில் தற்போது மிஞ்சியிருக்கும் ஏழு வீரர் களுக்கும் ஃபிரான்ஸ் சிறப்பு மரியாதைகள் செய்து கௌர வித்தது.

## சீன கம்யூனிஸ்ட் தலைவரின் மனைவியின் தூக்கு ரத்து

பிரிட்டன் வர்த்தகரைக் கொலை செய்த வழக்கில், கம்யூனிஸ்ட் முன்னாள் தலை வரின் மனைவிக்கு விதிக் கப்பட்ட தூக்குத் தண்ட னையை சீன நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது.

நீண்டகாலம் சீனாவில் தங்கியிருந்த பிரிட்டனைச் சேர்ந்த வர்த்தகர் நீல் ஹேவுட் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொலை செய்யப்பட்டார்.

முதலில் மாரடைப்பால் இறந்ததாகத் தெரிவிக்கப் பட்டது. பின்னர் விசாரணை யில், கம்யூனிஸ்ட் தலைவர் களுள் செல்வாக்கு மிக்கவர் களுள் ஒருவரான போ ஜிலா யின் மனைவி கு கைலாய், நீல் ஹேவுட்டுக்கு நஞ்சு கொடுத்துக் கொலை செய்தது தெரியவந்தது.

இதையடுத்து, கட்சிப் பொறுப்பில் இருந்து போ ஜிலாய் நீக்கப்பட்டார். இவ் வழக்கில், கு கைலாய்க்கு தூக்குத் தண்டனை விதிக் கப்பட்டது. கொலை செய்ய உடந்தையாக இருந்த போ ஜிலாய் குடும்ப ஊழியரான ஜாங் ஜியான் என்பவருக்கு 9 ஆண்டுகள் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டது.

விசாரணையின் போது கு கைலாய், 'நீல் ஹேவுட் உடனான வர்த்தக உறவு தோல்வியில் முடிந்ததால், எனது மகனைக் காட்டி அவர் தொடர்ந்து மிரட்டி னார். லண்டனில் படித்து வந்த மகனின் பாதுகாப்புக் கருதிக் கொலை செய்தேன்' என ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து குகைலாய்க்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண் டனையை சீன நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது. இத்தண் டனை ஆயுள் காலம் முழுக்க சிறையில் கழிக்கும் வகை யில் மாற்றப்பட்டுள்ளது.

## வெனிசுலா சிறையில் கலவரம் 25 பேர் சாவு

வெனிசுலா நாட்டில் சிறையில் ஏற்பட்ட கலவ ரத்தில், 25 கைதிகள் கொல் லப்பட்டனர்.

தென்னமெரிக்க நாடான வெனிசுலாவின், சிறைகளில் குறுகிய இடத்தில், அதிக கைதிகள் அடைக்கப்பட் டுள்ளதால் அடிக்கடி கல வரம் வெடிப்பது வழக்கம்.

தலைநகர் காரகாசில் உள்ள சிறையில், 14 ஆயி ரம் கைதிகள்தான் தங்க முடியும். ஆனால், இங்கு 50 ஆயிரம் கைதிகள் அடைக் கப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, இந்தச் சிறையில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில், 25க்கும் அதிகமானவர்கள் கொல் லப்பட்டனர். தற்போது நிலைமை கட்டுப்படுத்தப் பட்டு விட்டதாக சிறை அதி காரி தெரிவித்துள்ளார். கல வரம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்த நாட்டின் ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா சிறுமிகளுடன் கலந்துரையாடு கிறார்.

## ஒசாமாவை சுட்டு கொல்வது போன்ற விளையாட்டு அறிமுகம்

ஒசாமாவை சுட்டுக் கொல்வது போன்ற விளையாட்டு ஒன்று அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கி இருந்த அல்குவைதா தீவிரவாத தலைவர் ஒசாமா பின்லேடனை, அமெரிக்க கப்பற் படையைச் சேர்ந்த வீரர்கள் சுட்டுக்கொன்றனர்.

இந்தப் படையில் இருந்து ஓய்வு பெற்ற லாரி யாட்ச் என்ற வீரர், அமெரிக்காவின் மின்ன சோட்டா நகரில் ஒசாமாவை சுட்டுக் கொல்வது போல் விளையாட்டு ஒன்றை ஏற் பாடு செய்துள்ளார்.

# துருக்கியில் குண்டுவெடிப்பு 8 பேர் சாவு; 60 பேர் காயம்

துருக்கியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 8 பேர் உயிரிழந்தனர். 60 பேர் காய மடைந்தனர்.

துருக்கி- சிரியா எல்லை யின் காஸியான்டாப் மாகா ணத்தில், கர்சியாக்கா பொலிஸ் நிலையம் அருகே நேற்று முன்தினம் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதில் 8 பேர் உயிரிழந்தனர். 60 பேர் படுகாயமடைந்தனர். மேலும் இந்தக் குண்டு வெடிப்பில் இருபஸ்கள், கார்கள் சேத மடைந்தன. குண்டுவெடிப் புக்கு எந்தப் பயங்கரவாத



அமைப்பு பொறுப்பேற்றுள் ளது என்பது குறித்து பொலி ஸார் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

அருகில் மாகாண கவர்னர் அலு வலகம் இருப்பதால், அதிஷ் டவசமாக ஆளுநர் குண்டு வெடிப்பில் உயிர்தப்பினார்.

## சிரியாவில் செய்தி சேகரித்த செய்தியாளர் கொலை

சிரியாவில் வன்முறையை ஏற்பட்டபோது அங்கு நடை பெறும் செய்திகளை சேகரிக் கச் சென்ற ஜப்பான் செய்தி யாளர் ஒருவர் பரிதாபமாக கொல்லப்பட்டார்.

இது குறித்து சிரியாவில் உள்ள மனித உரிமைகள் அமைப்பு தெரிவிக்கையில், சிரியாவின் கிழக்கு பகுதி யில் உள்ள சுலைமான் அல்-ஹலாபி மாவட்டத் தின் அலிப்போ நகரில் வன்முறை ஏற்பட்டுபோது செய்தி சேகரிக்கச் சென்ற ஜப்பான் செய்தியாளர் கொல்லப்பட்டுள்ளார்.

அவருடன் இருந்த மற்ற 3 செய்தியாளர்களைக் காண வில்லை என்றும் தெரிவித் துள்ளது. காணாமல் போன செய்தியாளர்களில் இருவர் அரபு நாட்டவர்கள் ஆவர். இதில் லெபனான் பெண் செய்தியாளர் ஒருவர், மற் றொருவர் துருக்கி நாட்டவர் என தகவல் வெளியிடப் பட்டுள்ளன.

## தீவிரவாதிகள் மிரட்டலால் பாகிஸ்தானில் தொலைபேசிச் சேவைக்குத் தடை

பாகிஸ்தானில் தீவிரவா திகள் மிரட்டல் விடுத்ததால் 4 நகரங்களில் தொலை பேசிச் சேவை தற்காலி கமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் லாகூர், கராச்சி, முல்தான், குவெட்டா ஆகிய முக்கிய நகரங்களில் தொலைபேசிச் சேவை மூலம் வெடிகுண்டுகள் வெடிக்கச் செய்து தீவிர வாதிகள் தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியுள்ள இரகசியத் தகவல் அரசுக்கு கிடைத்தது. இதையடுத்து 4 நகரங்களிலும் தொலை பேசிச் சேவையை தற்காலி கமாக நிறுத்தி வைக்க உள் துறை அமைச்சகம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இதுகுறித்து உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் கூறுகையில், தொலைபேசி மூலம் தீவிரவாதிகள் வெடி குண்டுத் தாக்குதல் நடத் துவதை தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது -என்றார்.

தேவைப்பட்டால் தலை நகர் இஸ்லாமாபாத்திலும் தொலைபேசிச் சேவை தடை செய்யப்படும். மக்கள் உயிர்களைக் காக்கவே அரசு இந்த முடிவு எடுத்துள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள அசௌகரியத்தை மக்கள் பொறுத்துக்கொள்ள வேண் டும்- என்றார்.

## பொருளாதார நெருக்கடியால் தீக்குளித்த இளைஞன் சாவு

பொருளாதார நெருக்கடி யால் இத்தாலி நாடாளுமன் றம் முன்பு தீக்குளித்து இளை ஞர் உயிரிழந்தார்.

இத்தாலியில் பொது மக் கள் பொருளாதார நெருக் கடி, வேலையில்லாத் திண் டாட்டம் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளனர். அத்துடன் அரசு வரிக ளும் உயர்த்தப்பட்டதால் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரி வித்து வருகின்றனர்.

இந்தநிலையில் ரோமில் உள்ள நாடாளுமன்றக் கட்ட டத்தின் முன்பு, ஏஞ்சலோ டிகார்லோ என்பவர் கடந்த 11 ஆம் திகதி தீக்குளித்தார். 85 சதவீத தீக்காயம் அடைந் திருந்த அவர் சிகிச்சை பல னின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

மனைவியை இழந்த நிலையில், தான் செய்து வந்த வேலையும் போய்விட் டதால் சாப்பாட்டுக்கு வழி யின்றித் தவித்து வந்துள் ளார், அந்த விரக்தியில் தற் கொலை முயற்சி செய்ததாக தகவல் வட்டாரங்கள் தெரி விக்கின்றன. இவரது தற் கொலை இத்தாலியில் பெரும் பரபரப்பை ஏற்ப டுத்தி உள்ளது.

## ஆஸி. பிரதமர் விரைவில் இந்தியா பயணம்

இந்த ஆண்டு இறுதிக் குள் தான் இந்திய செல்ல இருப்பதாக ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லர்ட் தெரிவித்தார்.

சிட்னியில்வருடந்தோறும் இந்திய ஆஸ்தி ரேலிய உறவை மேம்படுத் தும் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வரு கிறது. இந்த நிகழ்ச் சியில் கலந்து கொண்ட ஆஸ்தி ரேலியப் பிரதமர் ஜூலியா கில்லர்ட் பேசுகை யில்,

இந்த ஆண்டு இறுதிக் குள் தான் இந்திய செல்ல இருப்பதாகவும், இந்த சந் திப்பின் பொது இந்திய பிர தமரைச் சந்தித்து இரு நாட்டு உறவுகள் குறித்து விவாதிகப்படும் என்று தெரிவித்தார். அண்மைய

காலமாக இந்திய மாணவர் கள் மீது நடந்த இன வெறித் தாக்குதல் இரு நாட்டு உறவில் சிறு விரிசலை ஏற்படுத்தி இருந்தது. இந்த நிலையில் தான் இந்தியா வுக்கு யுரேநியம் தர ஆஸ் திரேலிய சம்மதித்தது என் பது குறிப்பிடதக்கது.


**கார் தேவை**

பாவித்த (M 800) மாருதி 800 கார் தேவை.
தொ.பே: 077 411 5601
(21998)(5-6-7)

**விற்பனைக்கு**

NPWI xxxx இலக்கமுடைய BAJAJ Discover-150உடன் விற்பனைக்கு.
தொ.பே: 077 807 7362, 077 019 3549
(21949)(5-6-7)

**தேவை**

நிறுவனம் ஒன்றுக்குக் கணக்கு எழுதுவதற்குப் பெண் ஒருவர் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. தொடர்பு: 0770367125
(21900) (2-7-6)

**மணமகன் தேவை**

81 ஆம் ஆண்டு, விசாக நட்சத்திரம் MA, பட்டதாரியான டென்மார்க் PR உள்ள பெண் ணுக்குப் பொருத்தமான பொறியியலாளர் போன்ற உயர் தொழில் மணமகனை ஐரோப் பிய நாடுகளில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு:0714814930
manamakal81@gmail.com
(21940) (2-7-6)

**சமையல் வேலையாள் (பெண்) தேவை**

கொக்குவில் கிழக்குப் பகுதியில் அமைந் துள்ள வீடொன்றுக்கு வந்து சமையல் வேலை செய்வதற்குப் பெண் சமை யலாள் தேவைப்படுகின்றார். சம் பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொ.பே.077 7600227
(21871) (2-7-6)

**பெயர் மாற்றம்**

இல.376, 7 ஆம் வட்டாரம், தருமபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியைச் சேர்ந்த ஆர்த்திகாயினி யோகராசா ஆகிய நான் இன்று 22.08.2012 முதல் எனது பெயரை ஆர்த்திகா யோகராசா எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என் பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

ஆர்த்திகா யோகராசா,
தருமபுரம், கிளிநொச்சி.
(F/25481) (2-7-6)

**உணவகங்களின் பாவனைக்கு**

சமைத்த உணவைச் சூடாக வைத்துக் காட்சிப்படுத்தும் உபகரணம் (Hot Table, Bainmari) Box Model (2 Rice & 4 Curry)
விற்பனைக்குண்டு.
உணவகங்களுக்கு ஏற்றது.
தொ.பே:- 077 7600227
(F/21872) (2-7-6)

**மணமக்கள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயது, 10 கிரகபாவம் கார்த்திகை 3 ஆம் பாதம் அவுஸ்ரேலியாவில் பொறியியலா ளராகவுள்ள ஆணுக்கும், 29, 23, 22 வயது முறையே சதயம், ரோகினி, அனுசம் நட் சத்திரத்தில் பிறந்த இலங்கையில் அரச தொழில் பார்க்கும் பெண்களுக்கும் பொருத் தமான வாழ்க்கைத்துணை தேவை. (சைவ போசனம் மட்டும்)
தொடர்பு:ganeshapathy@gmail.com
(21939) (2-7-6)

**அறிவித்தல்**
**அற்றோனி தத்துவம் ரத்து செய்தல்**

லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்தவர்களும் தற்போது 6/30 - 34, பிறின்ஸ் வீதி ஓட்லண்ட், நியூ சவுத் வேல்ஸ் 2117, அவுஸ்திரேலியாவில் வசிப்பவர்களுமாகிய துரையப்பா கந்தசாமி அவர் மகன் கந்தசாமி சிவரஞ்சன் ஆகிய நாங்கள் பொது மக்களுக்கு இத்தால் அறிவிப்பதாவது, எங்களது "கரம்பன் வளவு" லோட்டன் வீதி மானிப்பாய் தெற்கு, மானிப்பாய் காணியை விற்கும் பொருட்டு எங்களால் உசன், மிருசுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகரன் என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோனி தத்துவம் இத்தால் இன்று முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட காணி சம்மந்தமாக சின்னத்தம்பி சிவகரனால் எதுவும் செய்யப்படின் இன்று முதல் அவற்றிற்கு நாம் பொறுப்புடையவராக மாட்டோமென்பதையும் அறியத் தருகின்றோம்.

துரையப்பா கந்தசாமி - கந்தசாமி சிவரஞ்சன்
(F/2247) (2-7-6) 14.08.2012

**நான்காண்டு ஆனதுவோ உத்தமியே**

அன்னையின் மடியில்
12.08.1950

கயவர்களின் பிடியில்
19.09.2008

திருமதி
கோசலாராணி திரிலோகஈஸ்வரா

திதி: பூர்வபக்க பஞ்சமி (22.08.2012)

பாசத்தின் பிரமாண்டமே! ஆட்டுவித்த அற்புதமே!
பிரியத்தின் பிரகடனமே!சாதித்த சகாப்தமே!
உள்ளங்கை தண்ணீரே! உறையாத கண்ணீரே!
இருள் அழித்த ஒளியே! நிஜமாய் நீயில்லை இனியே!
துன்பம் துடைத்த தூயவளே! இன்பம் இழைத்த இனியவளே!
பாசம் பழக்கிய பனிமலரே! எங்களுக்கு உனைப்போல் யாருளரே!
ஓய்ந்துவிட்ட ஓவியமே! கரைந்துவிட்ட காவியமே!
வளரமுடியாத வளர்பிறையே! வரமுடியாதா மறுமுறையே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி!

இல.24, புறுடிலேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

நெஞ்சுருகி உங்கள் நினைவில் வாடும்
கணவர், மகன், மருமக்கள்,
குடும்பத்தினர்.
(21785)(5-6-7)

# உதயன்

## 03 தரம் 05 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

சுட்டெண் : .....

**வினாத்தாள் I**

நேரம் : 45 நிமிடங்கள்

★ 01 ஆம், 02 ஆம் வினாக்களில் உள்ள உருக்களில் இரண்டு உருக்கள் ஏதோ ஒரு முறையில் தொடர்புபட்டுள்ளன. அதைத் தெரிவு செய்க.

01.




1) A, B 2) C, B 3) A, D

02.




1) B, C 2) A, B 3) D, A

★ கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

03. புத்தகங்கள் அடக்கிவைக்கப்படும் இடம்,
1) பாடசாலை 2) சூழல் மூலை 3) நூலகம்

04. கல்லினால் செதுக்கப்பட்டுள்ளது.
1) தங்கமான் 2) காவற்கல் 3) ஏறுபடி

★ பின்வரும் எண் சட்டத்திற் காட்டப்பட்டுள்ள படி அடுத்த எண் சட்டத்தில் காட்டப்படும் எண்ணைத் தெரிவு செய்க.

05.




1) 254 2) 642 3) 425

06.




1) 3421 2) 2341 3) 1234

★ 07 - 11 வரையான வினாக்களிலுள்ள உருக்களுள் இரண்டு ஒரேதன்மையுடையன. இரண்டு ஒன்றுக்கொன்று எதிரானது. ஆனால் ஒன்று எந்தத் தொடர்பும் அற்றது. அந்த உருவத்தின் இலக்கத்தைத் தெரிவுசெய்க.

07.




1) 5 2) 1 3) 4

08.




1) 3 2) 5 3) 1

09.




1) 2 2) 5 3) 1

10.




1) 3 2) 5 3) 2

11.




1) 1 2) 3 3) 5

★ முதலில் உள்ள சொல்லோடு மிகவும் தொடர்புடைய சொல்லைத் தெரிவுசெய்க.

12. தொழிற்சாலை — 1) கம்மாலை 2) நகரம் 3) இயந்திரங்கள்

13. அலுவலகம் — 1) எழுதுவினைஞர் 2)ஊடகவியலாளர் 3) சாரதி

14. பாடசாலை — 1) பிள்ளைகள் 2) மனிதர் 3) வாகனங்கள்

15. நகரம் — 1) வியாபாரிகள் 2) நெரிசல் 3) பிச்சை எடுப்போர்

★ பின்வரும் அட்டவணை வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பயிர்கள் தொடர்பானவையாகும். அங்கு தென்னை மட்டும் 6 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. இத்தரவுகளைக் கொண்டு வினவப்படும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.




A - தென்னை
B - கறுவா
C - மரக்கறி
D - இறப்பர்

16. இறப்பர் எத்தனை ஏக்கர் செய்யப்பட்டுள்ளது?
1) 5 2) 12 3) 3

17. மரக்கறி செய்யப்பட்டுள்ள பகுதி எத்தனை ஏக்கர்?
1) 12 2) 10 3) 16

18. இத்தோட்டம் தொடர்பாக சரியான கூற்று எது?
1) இந்த இடம் 21 ஏக்கராகும்.
2) இங்கு மரக்கறி செய்யப்படும் நிலபகுதியை விட இரு மடங்கு தென்னை செய்யப்படுகின்றது.
3) மரக்கறி செய்யப்பட்ட நிலப்பகுதியானது தென்னை செய்யப்பட்ட நிலப் பகுதியின் இருமடங்காகும்.

★ 19 ஆம், 20 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் பிழையானவையாகும். அவை பிழையானவையாக இருப்பதற்குரிய காரணமாகக் கூறக்கூடியதைத் தெரிவுசெய்க.

19. அந்தியில் பூத்த தாமரை மலர்கள் தடாகத்தில் அழகாகக் காட்சி அளித்தன.
1) நீர் நிலைகளில் தாமரை மலர்களைக் காண முடியாது.
2) மாலை நேரத்தில் தாமரை பூக்காது.
3) நீர் நிலைகளை தாமரை மலர்கள் அழகு படுத்தாது.

20. ஆமைத் தோலில் இருந்து பெறப்பட்ட அலங்காரப் பொருட்களுக்கு விலை அதிகம்.
1) ஆமை தோலிலிருந்து அலங்காரப் பொருட்கள் செய்வதில்லை.
2) ஆமைக்கு ஓடு இல்லை.
3) அவ்வோட்டினால் செய்யப்படும் அலங்காரப் பொருட்களுக்கு விலை அதிகமில்லை.

21. "ஆனைக்கொரு காலம் பூனைக் கொரு காலம்" என்னும் பழமொழியை விளக்கும் கூற்றைத் தெரிவுசெய்க.
1) காலங்கள் மாறக் கூடிய தன்மை வாய்ந்தது.
2) இன்று ஆனை என்றால் நாளை பூனையாகும்.
3) ஒருவர் ஒன்றைக் கேட்கும் போது உடனே கொடுத்தல்.

22. "வேலையினின்றும் நீக்கல்" என்னும் கருத்திற்குப் பொருத்தமான மரபுத் தொடரை இனங் காண்க?
1) எடுத்தெறிதல் 2) அகலக்கால்வைத்தல் 3) சீட்டுக்கொடுத்தல்

23. அருகிலுள்ள உருவத்தை உடைய அட்டையை மடித்து உருவாக்கக்கூடிய வடிவம் யாது?



1) 2) 3)

24.




A காட்போட் துண்டில் இருந்து B போன்ற காட்போட் துண்டுகள் எத்தனை வெட்டி எடுக்க முடியும்.
1) 2
2) 3
3) 4

★ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.

25. பெரியதம்பிப் போடியாரின் வீட்டுத் தோட்டம் சதுர வடிவானது. அவரின் ஒரு பக்க வேலிக்கு 10 கொங்றிட் தூண்கள் நட்டப்பட்டிருந்தால் எல்லாமாக எத்தனை தூண்கள் நட்டப்பட்டிருக்கும்.
1) 40 2) 38 3) 36

26. விளையாடுவதற்கு மைதானம் இருப்பது போல படிப்பதற்கு,
1) பாடசாலை 2) புத்தகம் 3) ஆசிரியர்

27. வளவுக்கு வேலி என்பது போல வயலுக்கு,
1) எல்லை 2) தரை 3) வரப்பு

* பின்வரும் தகவல்களைக் கொண்டு 28 - 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | | |
|---|---|---|
| பேனா - 1<br>பென்சில் - 1 | கொப்பி - 1<br>பென்சில் - 3 | பேனா - 1<br>பென்சில் - 1<br>கொப்பி - 1 |
| ரூபா 20.00 | ரூபா 34.00 | ரூபா 30.00 |

28. பென்சில் ஒன்றின் விலை யாது?
1) ரூபா 5.00 2) ரூபா 10.00 3) ரூபா 8.00

29. கொப்பி இரண்டின் விலை யாது?
1) ரூபா 30.00 2) ரூபா 20.00 3) ரூபா 24.00

30. பேனை இரண்டின் விலை யாது?
1) 24.00 ரூபா 2) 30.00 ரூபா 3) 32.00 ரூபா

* இன்னும் மூன்று ஆண்டுகளில் ஆதவனின் வயது அவனுடைய மகள் கதீஜாவின் வயதைப் போல் 3 மடங்காக இருக்கும். தற்போது கதீஜாவின் வயது 12 வருடங்கள் எனின்,

31. தற்போது ஆதவனின் வயதென்ன?
1) 42 2) 45 3) 36

32. கதீஜா பிறக்கும் போது ஆதவனின் வயது என்ன?
1) 28 2) 24 3) 30

33. 6 X 2 = 4 X 3 இவ்விலக்க கோலத்திற்குப் பொருத்தமான உருக்கோலத்தைத் தெரிவு செய்க.
1) ✡ X △ = ○ X □ 2) □ X □ = ✡ X □
3) △ X ○ = □ X △

* தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

34. இருள் - வெளிச்சம், யுத்தம் -
1) ஆயுதம் 2) அழிவு 3) சமாதானம்

35. பாடசாலை - கல்வி, மதஸ்தலம் -
1) பிரார்தனை 2) சமயவழிபாடு 3) பாடுதல்

* கீழே தரப்பட்டுள்ள வசனத்திற்குப் பொருத்தமான பதத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

36. வழிகாட்டும் நபர்?
1) சாரதி 2) தேசாபிமானி 3) வழிகாட்டி

37. கடற்கரையில் இருப்பவன்.
1) பயணி 2) வேட்டைக்காரன் 3) மீனவன்

38. ஆறு கடலில் கலக்குமிடம்.
1) கழிமுகம் 2) மடை 3) தீவு

* கீழ்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான கருத்தையுடைய வாக்கியத்தின் கீழ்க் கீறிடுக.

39. 1) நெருப்பை நீருக்கடியால் மாதிரி கொண்டு செல்லல்.
2) நீருக்கடியில் நெருப்பு கொண்டு செல்லல்.
3) கொண்டு போவது போல் நீருக்கடியால் நெருப்பு.

40. 1) நரிக்கு கோழிக்கூட்டைப் பாரம் கொடுத்தது போல.
2) கோழிக் கூட்டைப் பாரம் கொடுக்கப்பட்ட நரி போல.
3) நரிக்கு பாரம் கொடுக்கப்பட்ட கோழிக்கூடு போல.

பெயர் : .....

## வினாத்தாள் II

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**01) பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அருமை மிக்க நண்பனுக்கு
கடிதம் எழுதவே
ஆசையாக வெள்ளைத்தாளை
எடுத்துக் கொள்கிறேன்

அன்புமிக்க சோமுவுக்கு
என்று தொடங்குவேன்
அச்சடித்த எழுத்துப்போல
அழகாய் எழுதுவேன்

01. இக்கடிதம் யாருக்கு எழுதப்பட்டது?
.....

02. தன்மை ஒருமை எதிர்கால முற்றுவினைச்சொல் ஒன்று தருக.
.....

03. குணப்பெயரைக் குறிக்கும் சொல் ஒன்று தருக.
.....

04. ஒத்தகருத்து எழுதுக.
1) கடிதம் - .....2) அழகு - .....

05. எதிர்க்கருத்து எழுதுக.
1) நண்பன் - .....2) அன்பு - .....

06. ''தொடங்குவேன்'' என்னும் சொல்லை இறந்தகாலத்தில் எழுதவும்.
.....

07. தன்மை ஒருமை நிகழ்கால வினைச்சொல் ஒன்று தருக.
.....

08. எப்படி கடிதம் எழுதத் தொடங்குவேன் என்று கூறப்படுகிறது?
.....

**02) பின்வரும் வாக்கியத்தை தனி வாக்கியங்களாக எழுதுக.**

மாலனும், வரதனும் பாடசாலைக்குச் சென்றனர்.

01. .....

02. .....

**03) கமல் தென்னை மரத்தை வெட்டினான். சுதன் பனை மரத்தை வெட்டினான். இவ்விரு வாக்கியங்களையும் தொடர் வாக்கியமாக எழுதுக.**
.....
.....

**04) இடைவெளிக்கு வரவேண்டிய சரியான சொல்லை எழுதுக.**

01. I have two ..... (Nose, Hands, Mouth)

02. Please sit down என்பதன் கருத்து யாது?
.....

03. ஆசிரியர் எனும் சொல்லுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.
.....

**05) பின்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்க்கருத்தை எழுதுக.**

01. மென்ன தே பொன்(ட)ன .....

02. சுப உபன் தினயக் வேவா .....

**06) சரியான விடையின்கீழ் கோடிடுக.**

01. நம் நாட்டில் தமிழ்மொழியில் செய்திகளைத் தருகின்ற தொலைக்காட்சி சேவைகளில் ஒன்று,
1. சுவர்ணவாஹினி 2. தேசிய தொலைக்காட்சி
3. தெரண 4. சிரச ரீ.வி.

02. ''அம்பாறை'' எனும் மாவட்டம் எந்த மாகாண எல்லையினுள் காணப்படுகிறது?
1. கிழக்கு மாகாணம் 2. மத்திய மாகணம்
3. மேல்மாகாணம் 4. வடமாகாணம்

03. விருச்சிகம் எனும் உடுத்தொகுதி எது?
1. 2.  3. 4.

04. ஒரு பூவில் இருந்து இன்னுமொரு பூவுக்கு வண்டுகளால் காவிச் செல்லப்படுவது எது?
1. அல்லி 2. புல்லி 3. மகரந்தமணி 4. இலை

05. சமையலுக்குப் பயன்படும் ஒரு பூ எது?
1. வாழைப்பூ 2. தாமரைப்பூ 3. மல்லிகைப்பூ 4. அந்தூரியம்பூ

06. நீரில் முட்டை போடாத பிராணி எது?
1. முதலை 2. தவளை 3. தேரை 4. நுளம்பு

07. கீழ்வருவனவற்றுள் எதற்கு கால்கள் காணப்படுவதில்லை?

1. தேள் 2. கொடுக்கன் 3. பாம்பு 4. மரவட்டை

08. தச்சுத் தொலில் ஈடுபடுவோர் பயன்படுத்தும் ஓர் உபகரணம்

1. 2.  3. 4.

09. பின்வருவனவற்றுள் எது விரைவில் பழுதடையக்கூடியது?
1. இறைச்சி 2. தேன்
3. உப்பு 4. தேங்காய் எண்ணெய்

10. தனக்குரிய உணவை தானே தயரிக்காத தாவரம்
1. மல்லிகை 2. குரோட்டன் 3. காளான் 4. அந்தூரியம்

11. பயிர்களுக்குத் தீங்கு செய்யும் பூச்சிகளை தன்வலையில் சிக்கவைத்து உறிஞ்சும் பிராணி எது?
1. கும்பிடு பூச்சி 2. சிலந்தி 3. குளவி 4. நுளம்பு

12. புவியிலிருந்து வேறு கோள்களுக்குச் செல்வதற்குப் பயன்படுத்தப்படுவது?
1. வானூர்தி 2. உலங்கு வானூர்தி
3. ரொக்கட் 4. நீர்மூழ்கிக் கப்பல்

13. பின்வருவனவற்றில் முன்னங்கால்களை கைகளாகப் பயன்படுத்தும் பிராணி?
1. அணில் 2. யானை 3. நாய் 4. கழுதை

14. களனி கங்கை கடலில் கலக்குமிடம்
1. திருகோணமலை 2. அம்பாந்தோட்டை
3. களுத்துறை 4. கொழும்பு

15. 


இப்பரிசோதனை எதற்காகச் செய்யப்பட்டது.
1. நீர் இடத்தைப் பிடிக்கும்
2. விதை முளைதிறனை அறிதல்
3. வளி இடத்தைப் பிடிக்கும்
4. எதுவும் சொல்லமுடியாது

16. பிளாஸ்ரிக் பொருட்களின் மிக முக்கிமான தன்மை
1. இலகுவில் உக்கும் 2. இலகுவில் உக்காது
3. மண்வளத்தைப் பேணும் 3. இலகுவில் பெறக்கூடியவை

17. 

அருகில் உள்ள பூச்சட்டி சுற்றாடலில் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது எனின் இது உருவாக்கப்பட்ட பொருள்,
1. வாழைமடல் 2. தேங்காய் மட்டை
3. பழைய ரயர் 4. தயிர்ச்சட்டி

18. உலகின் மிகச்சிறிய கண்டம்
1. ஆசியா 2. ஐரோப்பா
3. ஆபிரிக்கா 4. அவுஸ்திரேலியா

07) பின்வரும் ஒவ்வொன்றினதும் பெயர்களை எழுதுக.

1) .....

2)  .....

3)  .....

08) பின்வரும் உபகரணங்கள் ஒவ்வொன்றினதும் சரியான பெயரைத் தெரிவுசெய்து எழுதுங்கள்.

மூடி திறப்பான், சுரையாணி கழற்றி, திருகாணி செலுத்தி, உளி, சீவுளி, மணியாசு

1) .....

2) .....

3) .....

4) .....

5) .....

09) நான்கு மாணவர்கள் நான்குநாள் சேமிப்புச் செய்த பணம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து விடை எழுதுக.

| நாள் | கமல் | அமீன் | சங்கர் | சில்வா |
|---|---|---|---|---|
| திங்கள் | 75.00 | 80.00 | 69.00 | 71.00 |
| செவ்வாய் | 98.50 | 115.00 | 120.00 | 100.00 |
| புதன் | 135.00 | 90.00 | 105.00 | 115.00 |
| வியாழன் | 80.00 | 60.00 | 75.00 | 85.00 |

01. கமல் சேகரித்த மொத்தப் பணம் எவ்வளவு?

.....

02. புதன்கிழமை நான்குபேரும் சேகரித்த மொத்தப் பணம் எவ்வளவு?

.....

03. அமீன், சங்கர் ஆகியோர் சேகரித்த மொத்தப் பணம் எவ்வளவு?

.....

04. நான்குபேரும் ஒருநாள் 300.00 சேமித்தனர். அந்த நாள் எது?

.....

05. செவ்வாய்க்கிழமை கமலும் அமீனும் சேகரித்த பணம் எவ்வளவு?

.....

10) 

1) இவ்வுருவில் எத்தனை செங்கோணங்கள் உண்டு?

.....

2) நிழற்றப்பட்ட பகுதி உருவின் என்ன பின்னம்?

.....

11) ஒரு பெட்டியில் 56 மணிகள் உள்ளன. அவற்றுள் 4/7 பச்சை மணிகளாகும். ஏனையவை நீலம் எனின் நீலமணிகள் எத்தனை?

.....

12) பின்வரும் ஒவ்வொரு காட்போட் அட்டையையும் புள்ளிக்கோட்டின் வழியே மடித்து ஒட்டினால் ஏற்படும் திண்மத்தின் பெயரை அதன் அருகிலுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 

.....

2) 

.....

13) பின்வரும் சாதாரண கடிகார நேரத்தை 24 மணிநேரம் காட்டும் கடிகார (Digital Clock) நேரத்தில் எழுதுக.

1) பி.ப. 4.35- ..... 2)அதிகாலை 2.30 - .....

14) 3/4 என்னும் சாதாரண பின்னத்திற்குரிய சமவலுப் பின்னங்கள் இரண்டு எழுதுக.

1) ..... 2) .....

15) பின்வரும் படம் தொடர்பாக 6 வாக்கியங்கள் நிகழ்காலத்தில் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.



01) .....
.....

02) .....
.....

03) .....
.....

04) .....
.....

05) .....
.....

06) .....
.....

ரீ. பேரின்பராஜா,
அல் / முபாறக் தேசிய பாடசாலை, மல்வானை. தொ.பே.இல: 077 9354023.

# இல்லறத் துறவி

இல்லறவாழ்க்கையில் இருந்துகொண்டே கூட ஒருவர் துறவியாக இருக்கமுடியும்! அவ்விதம் இருக்க முடியும் என் பதை நிரூபித்துக்காட்ட அந்தக் காலத்திலேயே ஒருவர் இருந்தார் . அவர் தான் சீதையின் தந்தை ஜனகர் .

இதை அப்போது மிதிலை நகரில் இருந்த முனிவர்கள் பலர் நம்பவில்லை! ஜனகர் மீது அவர்களுக்கெல்லாம் ஒரு சந்தேகம்.

''அது எப்படி? இவர் ராஜபோகங்களுக்கு மத்தியில் சுகமாக இருக்கிறவர்! இவர் எப்படி துறவியாக இருக்கமுடியும்? '' என்று முனிவர்கள் பலர் 'கசமுசா' என்று பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். இந்தச் செய்தி ஜனகர் காதிலும் லேசாக விழுந்தது.

ஜனகர் பார்த்தார்.

'சரி... இந்த முனிவர்களுக்கு துறவு என்றால் என்ன என்பதைப் புரிய வைக்க வேண்டும்'' என்று தனக்குள் முடிவு செய்தார். அதன் காரணமாக அடுத்த நாளே அரண் மனையிலிருந்து ஓர் ஆள் ஒரு வேண்டுகோளுடன் இந்த முனிவர்களைத் தேடி வந்தார்.

''நாளைக்கு நண்பகல் நமது ஜனக மகராஜா உங்கள் எல்லோருக்கும் ஒரு விருந்து வைக்க விரும்புகிறார். நீங்கள் எல்லோரும் அவசியம் அதில் வந்து கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்'' என்று வேண்டிக்கொண்டார். அவரது வேண்டுகோளை ஏற்று 50 முனிவர்கள் அடுத்தநாள் குறிப்பிட்ட நேரத்திற்கு விருந்து மண்டபத்திற்குச் சென்றிருந்தார்கள்.

அவர்களுக்கு அங்கு 50 இலை போடப்பட்டு பலவிதமான உளவுப் பண்டங்களை பரிமாறியிருந்தார்கள். ஆனால் அதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் .... ஒவ்வொரு இலைக்கு மேலே ஒரு நீளமான தலைமுடி தொங்கிக்கொண்டிருந்தது. 'அது எப்போது சாப்பாட்டில் வந்து விழுமோ!' என அதைப் பார்த்துப் பயந்து கொண்டே முனிவர்கள் சாப்பிட்டார்கள். அரண்மனைப் பணியாளர்கள், மறுபடியும் மறுபடியும் உணவு வகைகளை நிறையக் கொண்டு வந்து முனிவர்களுக்கு பரிமாறினார்கள். முனிவர்களும் சாப்பிட்டு முடித்தனர்.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்தபிறகு ஜனகர் அங்கு வந்தார். முனிவர்களைக் கைகூப்பி வணங்கி அவர், ''சாப்பாடு நன்றாக இருந்ததா ?'' என்று விசாரித்தார்.

அது மட்டுமல்ல! ''சாம்பார் எப்படி இருந்தது...? காய்கறி எப்படி இருந்தது ? வறுவல் எப்படி இருந்தது ...? என்றெல்லாம் வரிசையாக ஒவ்வொன்றாய்க் கேட்க ஆரம் பித்தார். அவர் கேட்ட கேள்விகளுக்கு அங்கிருந்த முனி வர்களில் ஒருவர் கூட பதில் சொல்லவில்லை ! சொல்லி வைத்தது போல் முனிவர்கள் அனைவரும் மௌனமாக இருந்தார்கள்.

உடனே மகாராஜா ஜனகர் தமது பணியாளர்கள் இருந்த பக்கம் திரும்பி, ''என்ன? எல்லோருக்கும் சரியாகச் சாப்பாடு போட்டீர்களா? இல்லையா?'' என்று வேகமாகக் கேட்க ஆரம்பித்தார்.

உடனே முனிவர்கள். ''அவர்களை ஏன் கேட்கிறீர்கள்? நாங்களே பதில் சொல்கிறோம். அவர்கள் நன்றாகத்தான் பரிமாறினார்கள். நாங்களும் வயிறு நிறையச் சாப்பிட்டோம்!'' என்றார்கள். பின்னர் ஏன் எப்படியிருந்தது என்று நான் கேட்டதற்கு பதில் சொல்லவில்லை?'' என்று வினவினார் ஜனகர்.

''எப்படி பதில் சொல்லமுடியும்? எங்கள் கவனம் முழுவதும் சாப்பாட்டில் எங்கேயிருந்தது? அந்தத் தலைமுடி சாப்பாட்டில் வந்து விழுமோ? என்று அதையே தான் நினைத்துக்கொண்டிருந்தோம்! என்றார்கள் முனிவர்கள்.

அதற்குப் பிறகு ஜனகர் கூறினார். ''அது போலவேதான் நான் இருக்கிறேன். பிரம்மத்தையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கும் எனக்கு, 'இந்த ராஜபோகங்கள் சுகமாக இல்லையா? என்று கேட் டால் சொல்லத் தெரியுமா?'' என்றார் ஜனகர்.

முனிவர்களுக்கு அதன் பிறகு தான் ஜனகரைப் பற்றி ஒரு தெளிவு ஏற்பட்டது. ஒருவர் எங்கேயிருந்தால் என்ன? எதை நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது தானே முக்கியம்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# தென்புலோலி உபய கதிர்காமம் பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையம்

வடமராட்சிப் பகுதியில் பழமை வாய்ந்த பச்சிமப் புல வர் கானநகரம்'' என்ற சமஸ் கிருதப் பதங்களுக்கும் சரியான தமிழ்ப்பொருள் புலவர்கள் வசிக்கும் புலோலி என்னும் ஊர். நிலவளம், நீர்வளம், கல்வி, கலைவளமும் ஒருங்கே அமைந்த புலோலியூரில் தோட்ட, வயல், பனை, தென்னை போன்ற நிழல் மரங்களும், ஆலயங்களும், கல்வி நிலை யங்களும் அதிகமாக உள்ள சைவமும் தமிழும் தம் இரு கண்களாகக் கருதி அறவழி நின்றொழுகும் ஆன்றோர்கள் வாழும் இடமான தென் புலோ லியூரில் அமைந்தது பெரிய தேவனத்தாய் சனசமூக நிலை யம்.

புலவர்கள் மலிந்த ஊர் புலோலியூர் என்று கூறுவார் கள். காலத்துக்குக் காலம் இந்த ஊரிலே புலவர்கள் பலர் தோன்றி வாழ்ந்திருக் கின்றார்கள். தமிழ்மொழிக்கு அரிய தொண்டுகள் புரிந்திருக்கின்றார்கள். தமிழை வளர்த்து வந்தி ருக்கின்றார்கள். ஈழத்தில் மட்டுமன்றி தென்னிந் தியாவிலும் தமது புகழை நிறுவிக்கொண்ட பெரும் புலவர்களை நாம் அறிவோம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் காலத்தின் பின் அவர்கள் அனுக்க தொண்டர்களாய் இருந்தோர் கூட சிந்தாமணியிலும், கம்பராமாயணத்திலும் கலைகண்டு காட்டிக் கொண்டி ருந்த போது கந்த புராணத்தையும் அதன் பண்பாட் டினையும் ஒழுங்குறப் பேணி வளர்த்த நாவலர் அடிச்சுவட்டிலே இயங்கி வந்தது புலோலியூராகும்.

பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையம் புலோலி யூரின் ஒரு பகுதியான தென்புலோலியூரில் இருக்கிறது. மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் வடகரையோரமாக, வல்லிபுரம் ஆலயம் செல்லும் பிரதான பாதையில் முக்கால் மைல் தூரத்தில், ஆனைவிழுந்தான் சந்திக்கு இடையில் பாதையின் அருகே உபயகதிர்காமத்தில் அமைந் துள்ளது. உபயகதிர்காம ஆலயம் ஒரு பழம் பெருமை வாய்ந்த முருகன் தலம், இங்கு தான் தோன்றியான வெண்கல மலையில் ஒரு சக்கர இயந்திரமாக இருக்கிறது. இந்த ஆலயத்தி னைப் பற்றிப் பல பாடல்கள் உள் ளன. அதிலே அருணகிரிநாதர் இந்த தலத்தினையும் திருப் புகழினால் ''ஆயன்பட்டின மரு விய பெருமாளே'' எனப்பாடி யிருக்கும் பாடல் இந்த திருக் கோயிலையே குறிக்கின்றது என் பது ஆராய்ச்சியாளர்களின் கருத் தாகும். தென்பகுதியில் கதிர்காம முருகன் ஒரு இயந்திர பெட்டி யிலே இருந்து அருள்புரிகின்ற அந்த வேளையில் தென்புலோலி உபயகதிர்காமத்திலும் சக்கர இயந்திர வடிவிலே திரு அருள் புரிகிறார். இந்த ஆலயத்தில் இந்தச் சனசமூக நிலையம் இருப்பது மிகப் பொருத்தமானது.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து தேசிய எழுச்சி, சமுதாய மறு மலர்ச்சி போன்றவை பற்றிய எண்ணக் கருத்துக்கள் இலங்கை மக்களிடையே தோன்றலாயின. சமூகமறுமலர்ச்சியின் ஓர் அம்ச மாக கிராமிய மலர்ச்சி பற்றிய சிந் தனை ஓட்டம் படித்தவர்கள் மத்தியிலே உருவாகியது. முன்பு கிராமங்களில் வயது வந்தவர்கள் மத்தியில் வாசிப்பு என்ற போது அது புராணங்களை வாசிப்பது என்ற அளவில் பொருள் தந்தது. எனவே வாசிப்பு என்பதை சமகால நிகழ்வுகள், உலக அறிவு ஆகியன பற்றி அறிவதற் குரிய பயன்படும் ஒன்றாக விருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கம் கிராமத்தின் படித்தோர் மத்தியிலே பலமடைந்தது. இவ்வாறானவர்களில் அமரர்கள் க.பொன்னையா, பொன்.சின்னத்துரை ஆகியோர் சனசமூக நிலையம் ஒன்றை அமைப்பதில் முன் னோடியாக விளங்கினார்கள். பெரிய தேவனத்தாய் பிள்ளையார் கோயிலுக்குரிய காணியில் ஒரு கட்ட டத்தை அவர்கள் அமைத்தனர். ஆசிரியத் தொழிலை அந்த நேரத்தில் புரிந்து வந்த அமரர்கள் இருவரும் பெரிய தேவனத்தாய்ப் பகுதி இளைஞர்கள், சிறு வர்களின் உதவிகளைப் பெற்று சிரமதான அடிப் படையில் சனசமூக நிலையத்திற்கான கட்டடத்தைக் கட்டி எழுப்பினர். கட்டடத்திற்குத் தேவையான கல், மண் முதலியவற்றை இளைஞர்கள், சிறுவர்களுடன் சேர்ந்து ஒரு தள்ளுவண்டியிலே தாமே ஏற்றி இறக்கி சனசமூக நிலையம் உருவாக சரீரத் தொண்டு புரிந்தனர். இந்தக் காலத்தில் பெருந்தொகைப் பணத்தையும், நேரகாலத்தையும செலவு செய்தே கட்டடம் கட்டுவதற்கான கல், மண் போன்ற வற்றைப் பெறவேண்டிய நிலை இருக்கின்றது. அந்தக் காலத்தில் இவற்றிற்கு எந்தவிதமான பணமுமின்றி இலவசமாக இவற்றைத் தாராளமாக எடுக்கக்கூடியிருந்தது. என்பதை நாம் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அமரர்கள் இருவரும் சிரமதானத்துடன் மட்டும் நின்று விடாமல் தமது சொந்தப் பணத்தையும் செலவு செய்து சனசமூக நிலையத்திற்கான கட்டடத்தை உருவாக்கினார்கள். பெரிய தேவனத்தாய் பிள்ளையார் கோயில் காணியில் கோயிலின் தெற்கு வீதிக்குள் சனசமூக நிலையக் கட்டடம் அடங்கியமையால் இந்தச் சனசமூக நிலையத்திற்கு பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையம் எனப் பெயர் இடப் பட்டது. இந்தக் கட்டடம் பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையம் என 1951 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இன்னமும் மூன்று தினங்களில் இந்த சன சமூக நிலையம் 61 ஆவது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்கின்றதென்பது இந்தக் கிராம பிரதேச மக்களுக்கு மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

இந்தச் சனசமூக நிலையத் தின் பெயரும், புகழும் பழம் பெருமை வாய்ந்தது. பெரிய தோட்டம் என்பதும் பெரியன் என்ற சோழத் தளபதியின் பெய ரினால் ஏற்பட்டது என்பார்கள். அடுத்ததாக பெரிய தேவனத்தாய் என்ற இடத்தில் பெரிய தேவன் என்ற சோழத் தளபதியின் தாய் வாழ்ந்தமையால் அந்தப் பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஆதாரம்:இலங்கையின் இடப் பெயர்வு ஆய்வு வடமராட்சி, தென்மராட்சி தகவல் ஆ.தேவ ராசா பருத்தித்துறை)

பெரிய தேவனத்தாய் சன சமூக. நிலையத்தின் அருகே பிள்ளையார் ஆலயம் அமைந் துள்ளது. இந்த ஆலய மூலஸ்தான விக்கிரகம் மேற்கு வீதியின் அருகில் உள்ள கிணற்றை வெட்டும் போது 200 வருடத்திற்கு முன்பு கண்டெடுக்கப்பட்டது. இந்த இடங்கள் பூர்வீககால புதைபொருள் இடமாக இருந்துள்ளது என நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

ஆரம்பத்தில் இந்தச் சனசமூக நிலையம் ஏனைய எல்லா சனசமூக நிலையங்கள் போல ஒருவாசி கசாலையாகவே விளங்கியது. ஆரம்பகாலத்தில் தேசியதினசரி ஆகிய வீரகேசரியும் ''இந்துசாதனம்'' என்னும் சைவசஞ்சிகையும் வாசிகசாலையில் போடப்பட்டன. 1960 ஆம் ஆண்டளவில். தமிழகத்துத் தினசரியான தினத்தந்தி, மாலைமணி போன்ற பத்திரிகைகளும் வாசகர்களுக்காகப் போடப்பட்டன. (தொடரும்)

ஆரம்பத்தில் இந்தச் சனசமூக நிலையம் மற்ற எல்லா சனசமூக நிலையங்களையும் போல ஒரு வாசிகசாலையாகவே விளங்கியது. ஆரம்ப காலத்தில் வீரகேசரியும் ''இந்துசாதனம்'' என்னும் சைவசஞ்சிகையும் வாசிகசாலையில் போடப்பட்டன. 1960 ஆம் ஆண்டளவில். தமிழகத்துத் தினசரியான தினத்தந்தி, மாலைமணி போன்ற பத்திரிகைகளும் வாசகர்களுக்காகப் போடப்பட்டன.

**கர்ணன்**

# எம்மை நாமே ஆழ்வதற்கு இணைந்து வாக்களிப்போம்

## சுயாட்சியைப் பெற இதுவே சந்தர்ப்பம் என்கிறார் கூட்டமைப்பு வேட்பாளர்

எமது இன விடுதலைப் போராட்டம் இன்று எம்மால் மட்டுமல்ல, புலம்பெயர் தமிழர்களாலும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

எருவில்,ஓக.22

வடக்கு, கிழக்கு இணைந்த எங்களை நாங்களே ஆளக் கூடிய சுயாட்சிகிடைக்கவேண்டும். அந்தச் சுயாட்சியை அடையவேண்டுமானால் தமிழர்கள் அனைவரும் ஒன்று பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மண்டூர், 14ஆம் கொலனியில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது இன விடுதலைப் போராட்டம் இன்று எம்மால் மட்டுமல்ல, புலம்பெயர் தமிழர்களாலும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. அமெரிக்கா போன்ற வல்லரசுகளால் - ஐரோப்பிய நாடுகளால் - ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களால் பிரயோகிக் கப்படும் அழுத்தத்தின் மத்தியில் கிழக்கு மாகாண சபையின் காலம் கனியுமுன் ஒரு வருடத்திற்கு முன்னரே அவசர அவசரமாகக் கலைக் கப்பட்டுள்ளது.

உலகப் போராட்ட வரலாறுகளையும், அதற்கான தீர்வுகளையும் தெரிந்தும் புரிந்தும் வைத்திருந்தால் மஹிந்த இப்படி செயற்பட மாட்டார்.

ஆயுதப்போராட்டம் நிறைவடைந்த பின்னர் தமிழ்த் தரப்பு, தீர்வு தரவேண்டிய அரச தரப்பு ஆகிய இருதரப்புகளும் பேசி தீர்வு காணாமல் எமக்கு எதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு?

வாய் திறந்தாலே துவேஷம் கக்கும் பேரினவாத அமைச்சர்களை பக்கத்தில் வைத்துக்கொண்டு எமது பிரச்சினைக்கு - எமது உரிமைப் போராட்டத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ஒரு தீர்வுத் திட்டத்தை எப்படி முன்வைக்கப் போகின்றார்? தீர்வுத் திட்டத்தை மஹிந்த முன்வைப்பார் என நாங்கள் நம்பினால் அது நாங்கள் காணும் பகல் கனவாகத்தான் அமையும்.

வடக்கு,கிழக்கு இணைந்த, எங்களை நாங்களே ஆளக் கூடிய, காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட வடக்கு, கிழக்கில் ஒரு சுயாட்சியே ஆகும். அந்தச் சுயாட்சியை நாம் அடையவேண்டுமானால் கூட்டமைப்புக்கு வாக்களித்து சர்வதேசம் தற்போது இலங்கை அரசு மீது பிரயோகித்துக்கொண்டிருக்கும் அழுத்தத்தை மேலும் பலப் படுத்தவேண்டும்.

எமது மக்கள் இவ்வளவு காலமும் இழந்த சொத்துகளுக்கும், உயிர்களுக்கும் ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் தமிழ்த் தேசியத்திற்கே வாக்களிக்க வேண்டும் - என்றார். (ச-31)

# தேர்தல் முடிவுகள் மூலம் மு.காவை பலப்படுத்தவும்

## கல்முனை மாநகரசபை முதல்வர் கோருகிறார்

அம்பாறை,ஓக.22

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மூலம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேரம்பேசும் சக்தியாகப் பலம் பெறவேண்டும். எனவே முஸ்லிம் மக்கள் பேதங்களின்றி முஸ்லிம் காங்கிரஸின் பின்னால் அணிதிரள வேண்டும் என்று கல்முனை மாநகரசபை முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப் தெரிவித்தார்.

கல்முனை-சாய்ந்தமருது பிரதேச மகளிர் சங்கங்களின் ஒன்றுகூடல் நிகழ்வு சாய்ந்தமருது இல்ஜனால் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் மக்களுக்கான ஒரே ஒரு கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் திகழ்கின்றது. எமக்கென்றிருக்கும் ஒரே ஒரு குரலும் முஸ்லிம் காங்கிரஸே தான்.

பல்வேறு நெருக்கடிகள், சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் முடிவை நம் கட்சி எடுத்துக் களமிறங்கியுள்ளது.

இன்று முஸ்லிம் காங்கிரஸை அழித்தொழிக்க வும், பலவீனப்படுத்தவும் பல சக்திகள் முயற்சிக்கும் நிலையில், எதற்கும் அஞ்சாமல் ரவூப் ஹக்கீம் கட்சியை வழி நடத்தி வருகின்றார்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் நம் கட்சியை வலுப்படுத்த வேண்டும். இதற்குக் கிடைத்துள்ள முக்கிய சந்தர்ப்பமாக கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும்.

**பத்து மாதங்களில்**

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் எனக்கு ஆதரவளித்து முதல்வராக்கினர் மக்கள். நான் முதல்வராகப் பதவியேற்று பத்து மாதங்களாகின்ற நிலையில் என் தேர்தல் கால வாக்குறுதிகளின் படி கல்முனை மாநகர சபையில் பல மாற்றங்களைச் செய்துள்ளேன்.

முதல்வருக்காகவோ, உறுப்பினர்களுக்காகவோ அல்லாமல் மக்கள் சேவைக் காவே மாநகரசபை நிர்வாகமென்ற நிலையை அங்கு உருவாக்கியுள்ளதுடன், லஞ்சம் ஊழலுக்கு சிறிதும் இடமில்லாத நிலைமையையும் அங்கு உருவாக்கியுள்ளேன்.

**பெண்களின் குரல்**

வறுமைக் கோட்டில் வாழும் நம் மகளிருக்கான பலசேவைகளை ஆற்றிவருவதுடன், எதிர்காலத்தில் மகளிரின் வறுமை ஒழிப்புக்கான தொழில் வாய்ப்புகள், சமூக மேம்பாட்டுத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற் கொள்ளவுள்ளேன். இந்த மகளிர் அமைப்புகள் மூலம் 50 குடும்பங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்த வுள்ளேன்- என்றார். (ச-30)

# மஹாவலி கங்கையில் நீராடிய இளைஞன் சாவு

நுவரெலியா,ஓக.22

மஹாவலி கங்கையில் நீராடிய இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். அக்குறணை, குருகொடைப் பகுதியைச் சேர்ந்த எம்.எம்.எம்.ரியாஸ் (வயது 23) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டுகஸ்தோட்டை கொஹாகொடை பகுதி மஹாவலி கங்கையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நீராடியபோதே, குறித்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

குறித்த இளைஞன் நண்பர்களுடன் மஹாவலி கங்கையில் நீராடியதாகவும் இவர் நீரில் மூழ்கியபோது நண்பர்களினால் காப்பாற்ற முடியாமல் போனதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# போக்குவரத்து விதிகளைமீறிய 51 பேர் கைது

தம்புள்ள நகரில் மேற் கொள்ளப்பட்ட விசேட தேடுதலின் போது பல்வேறு போக்குவரத்துச் சட்ட விதிகளை மீறிய 51 சாரதிகளை தம்புள்ள தலைமையகப் பொலிஸார் கைதுசெய்தனர்.

178 வாகனங்கள் பரிசோதனைக்குட்படுத் தப்பட்டதுடன் 77 பொலிஸ் அதிகாரிகள் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபடுத் தப்பட்டனர். சாரதி அனுமதிப் பத்திரமின்மை, பாதை விதி களை மீறிய சாரதிகள் மற்றும் போலியான பயண ஆவணங்கள் வைத்திருந்த குற்றங்களுக் காகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ச)

வவுணதீவுப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பின்சேனையில் மீள் எழுச்சித் திட்டத்தினூடாக மறுசீரமைக்கப்பட்ட செய்யப்பட்ட கிராமிய வைத்தியசாலையை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ திறந்துவைத்தார்.

# பாலத்துக்கு அடிக்கல்

மட்டக்களப்பு, படுவான்கரை கம்பியாற்றுக்குக் குறுக்காக பாலம் கட்டுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தநிகழ்வில், பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.(ச)



இறக்காமம் அல்-ஹஸனா வீதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சென்று கொண்டிருந்த கார் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீட்டு மதில் மீது மோதி சேதத்துக்குள்ளாகியுள்ளது.

# பிள்ளையான் ஆட்சியில் வாகரை பகுதி ஜனாதிபதியிடம் அடகு வைக்கப்பட்டது

## கூட்டமைப்பு எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஓக.22

கிழக்கு மாகாணத்தில் பிள்ளையானின் ஆட்சிக் காலத்தில் வாகரைப் பிரதேசம் ஜனாதிபதியின் கையிலே அடகு வைக்கப்பட்டது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து வாகரைப் பிரதேசத்திலுள்ள கதிரவெளியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு சிற்றூழியரைக் கூட நியமிக்கும் அதிகாரம் எனக் கில்லை. கிழக்கு மாகாண சபையிலே ஆளுநரின் அதிகாரம்தான் அதிகமாகவுள்ளது என அடிக்கடி கூறிக்கொண்டு திரியும் பிள்ளையான், ஏன் இந்தத் தேர்தலில் போட்டியிட வேண்டும்? பிள்ளையானின் ஆட்சிக்காலத்தில் வாகரைப் பிரதேசம் ஜனாதிபதியின் கையிலே அடகு வைக்கப்பட்டது.

உலகத்திலே ஆதிவாசி மக்கள் அழிக்கப்படுகின்றார்கள். இவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் எடுத்தது. அதற்காக நிதிகளை வழங்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாக நாட்டின் ஜனாதிபதி அறிந்து ஆதிவாசி மக்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை யோசித்தனர்.

எமக்குத் தெரிந்தவரை மஹியங்கனையில்தான் வசிக்கிறார்கள். ஆனால், இங்கிருந்த முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் திரவியம் ஆகிய இருவரும் சேர்ந்து வாகரைப் பிரதேச மக்கள் தாம் ஆதிவாசிகள் என்று ஜனாதிபதிக்குக் கூறியதன் நிமித்தம் சென்றவருடம் சல்லித்தீவிலே ஆதிவாசிகள் நிகழ்வு நடைபெற்றது.

ஆதிவாசிகள் என்று வாகரைப் பிரதேச மக்களைப் பிரகடனப்படுத்துகின்ற அந்த நிகழ்வுக்கு முன்னாடி ஜனாதிபதி செயலகத்தால் வந்து பிரதேச செயலகத்திலே எங்களது பதிவுகளை மாற்றும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

இந்தப் பதிவுகளிலே இலங்கைத் தமிழர் என்றுதான் எங்களுக்கு இருக்கின்றது. ஆனால், அந்தப் பதிவுகளை எவ்வாறு மாற்றச் செய்தார்கள் என்றால் இந்த ஆதிவாசி மக்களுக்கு நாங்கள் வீடு கட்டிக் கொடுப்போம், கிணறுகள் கட்டிக் கொடுப்போம், மல சலகூடங்கள் கட்டிக் கொடுப்போம் இவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்பதை வெட்டிவிட்டு வேடர்கள் என்று குறிக்க வேண்டும் என்றார்கள்.

இதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். நாற்பத்தி ஏழு பேர் வாகரைப் பிரதேசத்திலே தாங்கள் இலங்கைத் தமிழர் என்பதை வெட்டி நாங்கள் வேடர் என்று குறித்தார்கள். இதை அறிந்த நான் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு உடனடியாக நிறுத்தினேன்.- என்றார். (ச-சி)

திருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய அறிமுகங்களால் ஆதாயங்கள் கிடைக்கப் பெறுவீர்கள். நேற்று விடுபட்ட பணி ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள். குழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்றும் பொருட்டு, செலவுகள் மேற்கொள்வீர்கள். உடன்பிறப்புகளின் முன்னேற்றத்துக்காக சில முயற்சிகளைப் பெற்றோருடன் கலந்துரையாடுவீர்கள்.

**இடபம்:** உடல்நிலையில் திருப்தியற்ற போக்கு என்றபோதும், வேலைகளை பிற்போடாமல் செய்து முடிப்பீர்கள். பொருளாதாரத்தை கணக்கில் கொண்டு, சில வகையில் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் விரிவடையும்.

**மிதுனம்:** உங்களின் எண்ணங்கள் நிறைவேறும். கோபதாபங்களை வெளிப்படுத்தாமல் குடும்பத்திலும் வெளியிடங்களிலும் செயற்படுவீர்கள். சில காரியங்களுக்கு பணம் தேவைப்பட்ட போதும், அது இல்லாமல் காரியங்களைச் செய்து முடிக்க எண்ணுவீர்கள். ஓரளவுக்கு நிறைவேறவும் செய்யும்.

**கடகம்:** அமைதியான செயற்பாடுகள் கொண்ட நாளாக இருக்கும். கடந்த நாள்களில், உங்களை குறை சொன்ன நபர்கள் மத்தியில் பாராட்டும்படியான ஒரு காரியத்தை மேற் கொள்வீர்கள். எதிர்பார்த்த பணம் சற்றுதாமதத்துக்குப் பின் கைக்கு வந்து சேரும். தொழில் சார்ந்த நடவடிக்கைகளில், உங்களின் முடிவுகளை மறுபரிசீலனை செய்து கொள்ள வேண்டியிருக்கும்.

**சிங்கம்:** உற்சாகத்தோடு பணிகளை மேற் கொள்வீர்கள். உடல்நிலையில் சிறு தொந்தரவுகளுக்காக அதிகம் யோசிப்பீர்கள். உடன் பிறப்பு கொடுத்த வாக்கைக் காப்பாற்றாததால், எதிர் பாராதவிதமான சிக்கலில் சிக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். திடீர் பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**கன்னி:** பிரியமானவர்களின் சந்திப்பு இருக்கும். எதிர்பார்த்த ஒரு விடயம், எதிர் பாராமல் கைகூடும். தாய்வழியில் ஏற்பட்ட மனச்சங்கடம் நீங்கும். பணியில் பொறுப்புகள் அதிகரிக்கும். தொழில் வகையில் சில மாற்றங்களை மனதில் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்வீர்கள்.

ஆவணி- 07 வியாழக்கிழமை 23.08.2012
திதி: ஷஷ்டி பி.ப. 12.20 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.ப. 03.31 வரை
சுபநேரம்: 07.35- 09.05 வரை
ராகு காலம்: 01.35- 03.05 வரை



**துலாம்:** மனம் தெளிவுபெறும். இல்லறத் துணையின் கருத்துக்களில் உங்களுக்கு உடன் பாடு இல்லை என்றபோதும், ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலையே நிலவும். அலுவலகப் பணிகளில் வேலைச் சுமை கூடும். எதிர்பார்த்த வரவுகள் தாமதமாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் சிரமம் உண்டு.

**விருச்சிகம்:** உற்சாகம் அதிகரிக்கும். மனதில் நிலவும் குழப்பங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். உங்களை விமர்சனம் செய்தவர்களே பாராட்டும்படியான செயல்களை மேற்கொள்வீர்கள். பூர்வீகச் சொத்து தொடர்பான பிரச்சினைகளில் நல்ல முடிவை எட்டுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பண வரவுகள் வரும். குழந்தைகளுக்காகச் செலவுகள் இருக்கும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் மாறும். அலுவலகப் பணிகளில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**மகரம்:** நீங்கள் இன்று, எதிலும் கொஞ்சம் எச்சரிக்கையாகச் செயற்பட்டால் சாதனை படைக்கலாம். நெருங்கிப் பழகியவர்களிடம் வாக்குவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உறவினர் ஒருவரிடம் வாக்கு கொடுத்ததற்காக, சிரமத்தோடு பணச் செலவுகளையும் மேற்கொள்ள வேண்டி இருக்கும்.

**கும்பம்:** நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் தடுமாற்றங்கள் கூடினாலும், வரவுகளால் அதைச் சமாளிப்பீர்கள். தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் தீவிரம் காட்டுவீர்கள். குடும்ப காரியம் ஒன்றைச் செய்ய மறந்து, இல்லறத் துணையின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். சிறு பயணங்கள் ஏற்படும்.

**மீனம்:** எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான திட்டங்களைப் பற்றிய சிந்தனை அதிகமாக இருக்கும். பிறர் யோசனை கேட்டு நடப்பதால் வீண் அலைச்சலைச் சந்திக்க நேரிடும். ஆடை, அலங்காரப் பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். தொழில் ரீதியான பயணம் மேற்கொள்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | 3 | | 9 | | |
| | 7 | | | 4 | 1 | | 6 | 3 |
| 4 | 3 | 5 | | | | | 8 | |
| | | | 9 | 8 | 3 | | | 7 |
| | 2 | | 4 | | 5 | | 9 | |
| 9 | | | 7 | 1 | 2 | | | |
| | 9 | | | | | 8 | 7 | 5 |
| 7 | 6 | | 3 | 5 | | | 4 | |
| | | 2 | | 7 | | | | 9 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 1 | 9 | 3 | 6 | 5 | 4 | 2 |
| 9 | 5 | 6 | 2 | 7 | 4 | 3 | 8 | 1 |
| 3 | 2 | 4 | 5 | 1 | 8 | 9 | 6 | 7 |
| 5 | 1 | 9 | 3 | 6 | 7 | 8 | 2 | 4 |
| 7 | 4 | 2 | 8 | 9 | 5 | 6 | 1 | 3 |
| 6 | 3 | 8 | 4 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 1 | 8 | 3 | 6 | 5 | 2 | 4 | 7 | 9 |
| 2 | 6 | 5 | 7 | 4 | 9 | 1 | 3 | 8 |
| 4 | 9 | 7 | 1 | 8 | 3 | 2 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


31 ஆம் நாள் இதய நினைவு

திருமதி
E.S.P பேரம்பலம் மாணிக்கம்

மாந்தருள் நீர் ஓர் மாணிக்கம் அம்மா!
மாதா வர்க்கத்தினருக்கு நீர் ஓர் மாணிக்கம் அம்மா!
மாதா பிதா மதித்தே பெற்றெடுத்த மாணிக்கமும் நீ தான் அம்மா!
மாணிக்கமாகவே வாழ்ந்து காட்டிய மாதரசியும் நீ தான் அம்மா!

ஈகைக்கு நீர் ஓர் அன்னை தான் என்பதனை
உன் அமுதமுண்ட மைந்தனில் கண்டேன் அம்மா!
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பசுவொன்றை
வாரி வழங்கியே பாருக்குப் பரிந்திட்ட – நீர் மாணிக்கமே தானம்மா!

நாகத்தின் இரத்தினம் என்றே நாமமும் நீர் இட்டீர்!
நானிலம் போற்றவே நயந்து உன் பணியும் தொடர்ந்திட்டான்
நற்றவப்பேறினால் நீர் பெற்ற பேராளன் – மாணிக்கம் பெற்றெடுத்த
நாகரத்தினமே தானம்மா!

பேரம்பலத்தினைப் பெயர் ஏற்றி வைத்தீர்!
பெருகிடும் செல்வமெல்லாம் அம்பலத்தானுக்கென்றீர்!
பேரிலாத் தொண்டுதனைத் தொடர்ந்திட வழிவகுத்தே,
ஈழத்து சிதம்பரத்தான் தாழ்சேர்ந்தீர் – பேரம்பலத்தினோடு சேர்ந்திடவே....

மானிப்பாய் "மருதடி விநாயகர் சமூகம்"
தர்மகர்த்தா சபையினர், வழிபடுவோர் சங்க நிர்வாக சபை
உறுப்பினர்கள்.

(21996)(2-6-7)

சீஷெல்ஸ் நாட்டின் ஜனாதிபதி ஜேம்ஸ் அலிக்ஸ் மிச்சேல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சர்வதேச கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். விருந்தினர் வரவேற்புப் புத்தகத்தில் கையொப்பமிடுகிறார். அருகில் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், ராஜித சேனாரட்ன ஆகியோர் காணப்படுகின்றனர்.

# இலங்கையில் எமக்கு எதிர்காலம் இல்லை

## ஆஸியில் கைதானவர்கள் கண்ணீர்

கொழும்பு,ஓக.22

''இலங்கையில் எங்கள் எதிர்காலம் மிகவும் இருண்டுள்ளது. எமக்கு அங்கு எதிர்காலம் இல்லை. எமது வறுமை ஒழிய வேண்டும் என்றே ஆஸ்திரேலியா வந்தோம்'' என்று புகலிடம் கோரி ஆஸி. சென்ற இலங்கைச் சகோதரர்கள் இருவர் தெரிவித்தனர்.

ஆஸ்திரேலியக் கடற்பரப்பில் வைத்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை சிறையிலடைத்து வழக்குப் பதிவு செய்ய ஆஸ்திரேலியா தீர்மானித்துள்ள நிலையில் தாம் விரைவில் நாடு திரும்புவ தற்கு முயற்சி செய்கின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இராமலிங்கம் கந்தசாமி (வயது - 35) மற்றும் மகாதேவன்(31) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள், இதற்கு முன்னர் ஆஸ்திரேலியா நோக்கி 50 பேருடன் இலங்கையிலிருந்து பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது இலங்கைக் கடற்படை இவர்களைக் கைது செய்திருந்தது. பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில், தாம் மீண்டும் ஆஸ்திரேலியா நோக்கிப் பயணிக்கத் தயாரானதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# பொலிஸாருக்கு அழுத்தங்களை கொடுக்கும் ஆளுங்கட்சியினர்

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.22

அடுத்தமாதம் நடைபெறவுள்ள மூன்று மாகாணசபை தேர்தல்களுக்கான பிரசார நடவடிக்கைகளில் ஆளும் கட்சி அரசியல்வாதிகளினால் பொலிஸ் அதிகாரிகள் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்று சுதந்திரமான தும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (பவ்ரல்) குற்றஞ்சாட்டியுள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் கடமையில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், அரசியல் தலையீடின்றி தமது கடமையைச் செய்ய அனுமதிக்கப்படுவதை உறுதி செய்யுமாறும் அந்த அமைப்பு, பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கோனிடம் கோரியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஆளுங்கட்சியான ஐ.ம.சு. கூட்டமைப்பின் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்றிலிருந்து தேர்தல் பிரசார ஸ்டிக்கர் ஒன்றை அகற்றிய இரத்தினபுரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை ஆளும் கட்சி சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் அச்சுறுத்தினார் என்று குறிப்பிட்டுள்ள 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் றோஹன ஹெட்டியாராச்சி, குறித்த இந்தச் சம்பவத்தை பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

அதேவேளை, பொலிஸார் சரியான முறையில் செயற்படாமை குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆயினும் தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயாராக உள்ள சில பொலிஸ் அதிகாரிகளும் உள்ளனர். இவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# 16 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பொருளாதார அமைச்சில் நியமனம்

## அடுத்த மாதம் என்கிறார் பஸில்

கொழும்பு,ஓக.22

16,478 பட்டதாரிகளுக்கு புதிதாக நியமனங்களை வழங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டத்தின் பேரில், பயிற்சியைப் பெற்ற பட்டதாரிகள், இதற்காகத் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து தமது அமைச்சினால் நியமனம் வழங்கப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

உல்லாச பிரயாண ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்களுக்கான தெளிவூட்டும் செயலமர்வு நடைபெற்றது. இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு சேர்க்கப்படும் பட்டதாரிகளின் செயற்பாடுகள் பற்றி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்களுக்கும் உதவிப் பணிப்பாளர்களுக்கும் அறிவூட்டப் பட்டுள்ளது.

சேர்க்கப்படும் பட்டதாரிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கும், அபிவிருத்திப் பயணத்துக்கும் பங்குதாரர்களாக இருப்பர். இதுவே பிரதான எதிர்பார்ப்பு.

கிராம மக்களின் கருத்துக்களை அரசுக்கு எடுத்து வரும் இலகுவான மார்க்கமாக இந்தப் பட்டதாரிகள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

அதிகாரிகள் மக்களில் இருந்து இன்று தூரமாகி உள்ளனர். அவர்களின் செயற்பாடுகள் சுற்றறிக்கைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் உட்பட்டு உள்ளன. மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசுவதாகத் தெரியவில்லை. எனவே புதிதாகச் சேர்க்கப்படும் பட்டதாரிகள் மக்களுடன் சேர்ந்திருப்பர்.

> பட்டதாரிகளின் செயற்பாடுகள் பற்றி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்களுக்கும் உதவிப் பணிப்பாளர்களுக்கும் அறிவூட்டப் பட்டு உள்ளது.

மக்களின் உணர்வுகளை நம்மிடம் கொண்டு வரும் நபர்களாக அவர்கள் செயற்பட வேண்டும். பொருளாதாரத்தைப் பலப்படுத்தவே ஜனாதிபதி இந்த அமைச்சை உருவாக்கினார். அவரின் உயரிய லட்சியங்களை நிறைவேற்றுவதே இந்த அமைப்பின் பொறுப்பாகும்.

கிராம மட்டத்தில் எமக்கு ஓர் அதிகாரி உள்ளார். அவரே சமுர்த்தி அதிகாரி. அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் எமது அமைச்சின் அதிகாரி ஒருவர் அந்த வலையமைப்பிலேயே இருப்பார்.- என்றார். (ச)

# பிச்சைக்காரரைக் குறைக்க சட்டத்தில் திருத்தம் தேவை

## மூத்த சட்டத்தரணி கவலை

கொழும்பு,ஓக.22

இந்த ஆண்டு 1841 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டம் திருத்தப்படாத காரணத்தினால் பொலிஸாரினால் பிச்சைக்காரர்கள் பொதுமக்களைத் துன்புறுத்துவதை தடுத்துநிறுத்துவதற்கு போதிய அதிகாரம் இன்றி இருக்கிறார்கள் என்று மூத்த சட்டத்தரணி ஒருவர் வேதனை தெரிவித்தார்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர் காலத்தில் வீதிகளில் திரியும் பிச்சைக்காரர்களை தண்டிக்க 10 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இன்று அந்தப் பெறுமதி பத்தாயிரம் ரூபாவை விட கூடுதலான மதிப்பைக் கொண்டிருக்கிறது.

ஆனால் இன்றும் இதே சட்டம் திருத்தப்படாமல் நடைமுறையில் இருக்கின்றது. அண்மையில் ஒரு வெளிநாட்டு விலைமாது வீதியில் அலைந்து திரிந்துகொண்டிருந்த போது, பொலிஸார் அந்தப்பெண்ணைக் கைது செய்து மறுநாள் காலையில் நீதிமன்றத்தில்முன்னிலை செய்தனர். இந்தப் பெண் என்ன குற்றமிழைத்தார் என்று நீதிவான் கேட்டபோது, வீதியில் அலைந்துகொண்டு இருந்தார் என்று அந்தப் பெண்ணை நீதிமன்றத்துக்கு கொண்டு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் பதிலளித்தார்.

இனிமேல் வீதியில் அலைந்து திரிய வேண்டாம் என்று அப்பெண்ணை எச்சரித்த நீதிவான், அவருக்கு 10 ரூபாவை அபராதமாக விதித்தார். ஏன் நீதிவான் இவ்வளவு குறைந்த அபராதத்தை விதிக்கிறார் என்று எல்லோரும் வியப்பில் ஆழ்ந்திருந்த போது, இந்தக் குற்றத்துக்கு சட்டப்புத்தகத்தில் 10 ரூபாவை மாத்திரமே ஆகக்கூடிய அபராதமாக விதிக்க முடியும் என்று எழுதப்பட்டதனால் தான் நீதிவான் வேறுவழியின்றி இந்தத் தண்டனையை வழங்கினார் என்று சட்டத்தரணி ஒருவர் விளக்கமளித்தார். (ச)

வைத்தியர் லாலந்த ரணசிங்கவின் வீட்டின் மீதான கைக்குண்டுத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர்கள் அநுராதபுர போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# நூதனசாலையில் திருட்டு; இரண்டு பெண்கள் கைது

கொழும்பு,ஓக.22

கொழும்பு தேசிய நூதனசாலை திருட்டுச் சம்பவம் தொடர்பில் பெண்கள் இருவர் பிலியந்தலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச் சாளர் அஜித் ரோஹண தெரி வித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு இவர்கள் ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த வேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன், குறித்த ஓட் டோவைச் செலுத்திச் சென்ற சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்த மார்ச் மாதம் தேசிய நூதனசாலையில் புராதன பொருள்கள் பல திருடப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ச)

## வான் விற்பனைக்கு

WP JC xxxx தொடரிலக்க ஹயஸ் வான்252 -xxxx ISUZU FARGO இன ரூட் வான் ஆகியன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 262 2988 (21994)(5-6-7)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. French மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்குச் செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093

E-mail: alliance jaffna@yahoo. com

(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(21993) (2-6-7)

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 712 0238 (21997)(5-6-7)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Yamaha நியூஸ் மேற்-50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 893 5489 (22011)(5-6-7)

## தேவை காஞ்சிர வித்து

காஞ்சிர வித்து (எட்டிக்கொட்டை) காய்ந்து மண்ணில் வீழ்ந்து வீணாகும் காஞ்சிர வித்துக்களை சேகரித்து பயனும், பணமும் பெறலாம்.

மேலும் விவரத்துக்கு:

E.K & Co ஸ்ரீ மகிந்த தர்ம மாவத்தை, கொழும்பு-09, Tel: 011-2677077

(C/2233) (6.7.5)

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayam.com

0215671111

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத் தெருவில் 10 அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் வாகனத் தரிப்பிடம் கொண்ட விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.

அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (21999)(5-6-7)

தொடர்பு: 077 966 4239, 077 125 9813


# மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

**தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரச அதிபர்/ மாவட்ட செயலரால் கீழ்க்குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகைமை உடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன**

01. விலைக் கேள்வியானது தேசியப்போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
02. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
03. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் மாவட்ட பொறியியலாளர்கள் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 021 3211657) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் என்பதுடன், பொறியியற் பிரிவு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 22.08.2012 தொடக்கம் 30.08.2012 ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்வதுடன், ஆர்வமுள்ள விலைக் கேள்வியாளர்களினால் விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பொறியியலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
04. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 03.09.2012 திகதியன்று 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி தாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வியிலக்கத்தை தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
05. கேள்விகளை ஏற்றுக்கொள்ளுவதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.
06. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் இருத்தல் வேண்டும்.
07. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கேள்விப்பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும். பிணைப் பொறுப்புக்காலம் கேள்வி முடிவு திகதியிலிருந்து 90 நாள்கள் இருத்தல்வேண்டும்.

| கேள்வி இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை(ரூ) | மீளளிக்கப்படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JK/ ADM/ 05/24 (I) | யாழ். பிரதேச செயலக நிர்மாண வேலை கட்டம் - II | 10.0 | 04 மாதம் | C 6 | 100,000.00 | 1,000.00 |
| JK/ ADM/ 05/24 (II) | சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்மாண வேலை கட்டம் - VI | 10.0 | 04 மாதம் | C 6 | 100,000.00 | 1,000.00 |
| JK/ ADM/ 05/24 (III) | 04 மாடிக்கட்டட நிர்மாண வேலை யாழ். மாவட்ட செயலகம் கட்டம் - II | 5.0 | 03 மாதம் | C 7 | 50,000.00 | 500.00 |

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரச அதிபர்/ மாவட்ட செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி/2558) (2.6.7)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மகாலிங்கம்

(பூங்குடுதீவு 10ஆம் வட்டாரம்)



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாலிங்கம் 18.08.2012 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா-பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், தவநிதியின் அன்புக் கணவரும், சசிதரன்(ஜேர்மனி),சசிகுமார்(சுவிஸ்), சசிநாதன் & சசிகலா(ஜேர்மனி),சசிகீதா(லண்டன்),சசிந்திரன்(இலங்கை) ஆகியோரின் அன்புத்தந்தையும், சுமலதா, கலா, மகாலக்ஸ்மி, வசந்தா,உதயகுமார், ஜெயசீலன், லங்கேஸ்வரி(யமுனா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ்வரி, நாகேஸ்வரி, வேதநாயகி,காலஞ்சென்ற பரநிருபசிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி, துரைசிங்கம், மகேஸ்வரன், கமலாசினி,கலா, மணி, காலஞ்சென்ற குலசிங்கம், சரவணபவன் மற்றும் செல்வராணி ஆகியோரின் மைத்துனரும், மஞ்சுலாதேவி, சொர்ணலிங்கம் ஆகியோரின் சகலனும், ஸ்ரீபன், நர்மதா,டினோயன்,சபிதன், அனீசன், அனுயன், சுஜிதரன், சுயன்,சாரா,வசீன், தரணியா, மறிதா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2012) புதன் கிழமை அவரது இல்லத்தில் காலை 9 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் பி.ப. ஒருமணியளவில் சுருவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (22013)(5-6-7)

தகவல்: குடும்பத்தினர்.

### ஐயம்பிள்ளை துரைராசா

(முன்னாள் மரக்கறி வியாபாரி- சுன்னாகம் A.T.R)



பருத்திக்கலட்டி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை துரைராசா நேற்று (21.08.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் கிஸ்ணலீலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முருகண்டி, சரஸ்வதி மற்றும் பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும். பக்தவக்சலன் (ஜேர்மனி), நந்தபாலன்,தரனிராம், ஜீவதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கீதாஞ்சலி மற்றும் வரதலட்சுமி, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிஸ்ணகோபாலன், கீதன், சகிசன் றேணுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2012) புதன் கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

பருத்திக்கலட்டி,சுன்னாகம். (22012)(5-6-7)

5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## சைக்கிள் யாருடையது?

நவாலி,ஓக. 22

மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளை முன்பாக கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் பூட்டிய நிலையில் விடப்பட்டிருந்த பெண்களுக்கான சைக்கிள் ஒன்று மாலை வேளை வங்கி பூட்டும் நேரம் அநாதரவான நிலையில் நின்றதனால் வங்கி ஊழியர்கள் அதனை எடுத்து பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன்வந்து வங்கி முகாமையாளர் ஸ்ரீ.சகாதேவனுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3-100)

## விழாக்கால விற்பனை நிலையம்

நவாலி,ஓக. 22

நவாலி அந்திரான் முருக மூர்த்தி ஆலயவருடாந்தபெருந் திருவிழாவை முன்னிட்டு நவாலி கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் விழாக்கால விற்பனை நிலையமொன்று இன்று புதன்கிழமை அபிவிருத்திச் சங்கத் தலைவி இராசரத்தினம் சறோசாதேவி தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரனினால்காலை9மணிக்குதிறந்து வைக்கப்படும். (3-100)

# தியாகங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் தவறின் எல்லோரும் குற்றவாளிகள்தான்

தமிழின உணர்வாளர் சத்தியராஜ்



ஈழப்போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது லண்டனில் இரண்டரை லட்சம் பேர் ஊர்வலம் போனார்கள். பல லட்சம் பேர் உள்ள இடத்தில் அப்படி நடத்த முடிந்தால் 6 கோடி பேர் உள்ள தமிழகத்தில் அதுபோல் ஏன் நடத்தமுடியவில்லை? முத்துக்குமார், செங்கொடி தியாகத்துக்காகவாவது பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரது தண்டனையை ரத்துச் செய்யவேண்டும். என்னுடைய வாழ்க்கையில் மிகப் பெரிய மகிழ்ச்சியான நாள் எதுவென்றால் அந்த மூன்று பேரும் விடுதலை ஆன நாளாகத்தான் இருக்கும் என சத்தியராஜ் தெரிவித்துள்ளார்.

தூக்குத் தண்டனைக்கு எதிரான இப்படிக்கு தோழர் செங்கொடி ஆவணப் படத்தின் வெளியீட்டு விழா சென்னையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குத் தமிழ்த் தேசிய பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் பெ.மணியரசன் தலைமை தாங்கினார். ஆவணப்படத்தின் இறுவட்டை திரைப்பட நடிகர் சத்தியராஜ் வெளியிட, பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் அதனைப் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே சத்தியராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் படத்தை பார்க்கும்போது, செங்கொடியின் தியாகம் மட்டும்தான் தெரிகிறது.உங்களுடையஉழைப்பு எதுவும் என் கண்ணுக்கு தெரியவில்லை.

களத்தில் இறங்கி போராடுகிற ஒரு களப்போராளியாக இருக்க வேண்டும். அப்படி இல்லை. எனக்கு அப்படி ஒரு தைரியம் உண்மையிலேயே இல்லை. சிறைக்குப் போகத் தயார்தான். சினிமா படிப்பிடிப்பு இருக்கு, நான் போகவில்லையென்றால் அங்கு படம் எடுக்கிற 10 பேருக்கு பிழைப்பு கெட்டுப் போயிடும் என்று சொல்லுவதெல்லாம் சும்மா. ஏன் 4 படம் வேண்டாம் என்று விட்டு விட்டு போராட வேண்டியதுதானே! என்ன கெட்டுப்போய்விட்டது?

களப் போராளிகளின் பின்னாடியாவது வந்து நிற்க வேண்டும். அதுவும் செய்ய வில்லை என்றால், தமிழனாக இருப்பதற்குத் தகுதியில்லை.

முத்துக்குமார், செங்கொடி தியாகத்திற்கு நாம் எல்லோரும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் குற்றவாளிகள்தான். தீக்குளிக்க ஏன். அவர்கள் ஆளானார்கள் என்றால் மிகப்பெரிய எழுச்சி தமிழகத்தில்உருவாகவில்லை என்பதால்தான். அதுவே உண்மை.

இருப்பினும், செங்கொடி என்ற அடையாளத்தை வைத்துக்கொண்டு இருளர் சமுதாயத்தின் அவலம், ஈழவிடுதலைக்கு ஆதரவு, பேரறிவாளன், சாந்தன், முருகன்ஆகிய மூன்று பேரின் தூக்கு தண்டனையை ரத்துச் செய்ய வேண்டும் என்பதையும் இந்தப் படம் ஆழமாகச் சொல்லியிருக்கிறது. இதற்கு எனது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (3)

## கெயர் நிறுவன உதவி

சாவகச்சேரி,ஓக. 22

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வரணி-நாவற்காடு இளங்கோ சனசமூக நிலையத்துக்கென கணினிப் பயிற்சி நிலையமும் நூல் நிலையமும் அமைக்கப்படவுள்ளதாக இளங்கோ சனசமூக நிலைய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கட்டடத்துக்கான நிதியை கெயர் நிறுவனம் வழங்கவுள்ளது. இந்தத் திட்டத்துக்காக 4 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்தப் பணிகள் நிறைவடைந்ததும் கலாசார மண்டபம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (3-131)

## ரூ. 30 லட்சம் லஞ்சம் பெற்ற பிரதேசத் தலைவருக்கு மறியல்

கொழும்பு, ஓக.22

சுமார் 30 லட்சம் ரூபா லஞ்சம் பெற்ற பிரதேச சபைத் தலைவரை செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

களுத்துறைப் பிரதேச சபையின் தலைவருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்று இப்படி உத்தரவிட்டது.

காணி ஒன்றுக்கு நுழைவு வழி அமைத்துக் கொடுப்பதற்காக களுத்தறைப் பிரதேச சபைத் தலைவர் 30 லட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## கதிரேசன் ஆலயத்துக்கு வேல் கையளிப்பு

அனுராதபுரம் கதிரேசன் ஆலயத்துக்கு சென்ற ஜனாதிபதி ஆலய மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக பஞ்சலோகத்திலான வேலினை அனுராதபுரம் கதிரேசன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா.ஞானச்சந்திரக் குருக்களிடம் கையளித்துள்ளார்.

கடந்த முறை ஜனாதிபதி இந்த ஆலயத்துக்கு பயணம் செய்தபோது அவரிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்த வைபவம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த இருபத்தைந்து சிவாச்சாரியர்களுக்கு மேல் ஆசீர்வாதம் வழங்க பூஜைகளை நல்லூர் அரசடிப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவகுருக்களும் குரும்பசிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு கணேசானந்தக் குருக்களும் நடத்தினர்.

இந்த ஆலயம் 1985 ஆம் ஆண்டு வன் செயலில் சேதமாக்கப்பட்டபோது எல்லா விக்கிரங்களும் அழிக்கப்பட்டதுடன் இந்துமக்கள் இடம்பெயர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. பின்னர் 2000 ஆம்ஆண்டுஆலயத்தலைவர் அமரர் செந்தில்நாதனின் முயற்சியால் பஞ்சலோக வேல் ஒன்று மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜைகள் ஆரம்பமாகி நடைபெற்றன. பிரதிஷ்டை செய்யப்பட்ட வேல் காலம் செல்லச் செல்ல தண்டில் ஏற்பட்ட வெடிப்பையடுத்து இந்த வேல் உடைந்தது. இருப்பது ஒட்டப்பட்ட வேல் என்பது உறுதிசெய்யப்பட்ட பின்னரே இந்தப் புதியவேலும் அதற்குரிய திருவாசியும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (3)

## சந்நிதி ஆலய நிகழ்வுகள்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆறாம் திருவிழாவான இன்று புதன்கிழமை ஆலய முன்றிலில் மாலை 4 மணிக்கு சுப.ஜெயகோபால சாமி "ஞானக்கனி" எனும்கருப் பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (3-8-253)

* * *

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று முற்பகல் 10 மணிக்கு ''ஒரு திருமுருகன் வந்தான்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும். இந்தச் சொற்பொழிவை கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் க.லலீசன் நிகழ்த்துவார். (3-8)

## செயற்கை முறை சினைப்படுத்தல் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்.மாவட்டத்தில் பற்றாக்குறையாகக் காணப்படும் கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் சினைப்படுத்தும் உத்தியோகத்தர்கள் பதவிகளுக்குக் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் பயிற்சிகளை வழங்கி நியமிக்கப்படவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் தமது பிரிவில் உள்ள கால்நடை வைத்தியர் அலுவலகங்களில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிக்கப்பட்டுள்ளது. (3-9)

## மலசலகூடம் அமைக்க யுனிசெவ் உதவி

சாவகச்சேரி,ஓக. 22

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட நாவற்குழி, கைதடி, சரசாலை, வரணி, மிருசுவில், கச்சாய் ஆகிய ஆறு உப அலுவலகங்களின் எல்லைக்குள் வசிக்கும் மலசலகூடங்கள் இல்லாத வறுமைக்கோட்டுக்குட்பட்ட இருபத்தைந்து குடும்பங்களுக்கு மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்கப் படவுள்ளது.

இந்த மலசலகூடங்களை அமைக்க யுனிசெவ் நிறுவனத்தினால் ஒவ்வொருவருக்கும் எண்பதினாயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இந்த உதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை பொது மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. (3-131)

## நாடு திரும்பியதும் துமிந்த சரணடைவார்

கொலன்னாவை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின்போது காயமடைந்த நிலையில் வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா குணமடைந்து நாடு திரும்பியதும் சரணடைவார் எனக் கொழும்பு நீதிவானிடம் வழக்குரைஞர்கள் நேற்று தெரிவித்துள்ளனர்.

**துமிந்த சில்வாவைக் கைதுசெய்வதற்கான சர்வதேச பிடியாணை உத்தரவு தேவை இல்லை.**

படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் குடும்பத்தினர், துமிந்த சில்வாவைக் கைது செய்வதற்கு சர்வதேச பிடியாணை உத்தரவு வேண்டும் என்பதற்கு துமிந்த சில்வாவின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வாவைக் கைதுசெய்வதற்கான பிடியாணை உத்தரவு தேவை இல்லை எனவும் தனது கட்சிக்காரரான துமிந்த சில்வா இலங்கையை வந்தடைந்ததும் நீதிமன்றத்தில் சரணடைவார் எனவும் துமிந்த சில்வாவின் வழக்குரைஞர் ஹேமந்த வர்ணகுலசூரிய நீதிவானிடம் தெரிவித்துள்ளார். (3)

## சமய சந்நிதிகளில்

நவாலி,ஓக. 22

ஆனைக்கோட்டை வரத விக்கின விநாயக சம்மந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10தினங்கள் இடம்பெறும் இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை சப்பரத் திருவிழாவும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3-100)

* * *

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 28 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும் 29 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3-100)

## குழந்தைகளுக்கான போசாக்குக் கருத்தரங்கு

தென்மராட்சி,ஓக 22

சாவகச்சேரி நகராட்சி மன்றமும் நுணாவில் பொது நூலக அபிவிருத்திச் சபையினரும் இணைந்து கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கான போசாக்குத் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தியுள்ளனர்.

நூலக மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் நகராட்சி மன்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் போசாக்கு தொடர்பாக கருத்துரைகளை வழங்கினார். (3-9)

# இந்திய – இலங்கை முறுகுநிலை மோசமடைவதற்கான அறிகுறி

## இந்தியா வாங்கவிருந்த காணி சீனாவுக்கு விற்கப்பட்டதின் எதிரொலி

சண்டே ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருந்த செய்தி விமரிசனத்திலிருந்து ஒரு பகுதி

**கொழும்பு கொள்ளுப்பிட்டியில் காணித்துண்டு ஒன்றை வாங்குவதற்கு இந்தியா பேரம் பேசி முடித்திருந்த நிலையில் அது சீன இராணுவ நிறுவனத்துக்கு விற்கப்பட்டதால் இந்தியா பெரும் கடுப்படைந்துள்ளது. புதுடில்லியில் இலங்கை உயர் ஸ்தானிகர் வெளிநாட்டமைச்சுக்கு அழைக்கப்பட்டு ஆட்சேபம்.**

தொகுப்பு: கோகுலன்

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஏற்பட்டுள்ள ஒரு முறுகல் விடயம் தொடர்பாக இந்திய உயர் ஸ்தானிகர் அஷோக் கே காந்தா கொழும்பு இந்திய தூதரகத்தில் இடம்பெற்ற இந்தியாவின் 65 ஆவது சுதந்திர தினவிழாவின் போது உரை நிகழ்த்துகையில் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் கருத்து வெளியிட்டார்.

இலங்கை அரசுடன் எமக்கு பிரச்சினைகள் உண்டு. நாங்கள் நட்புரிமை கொண்ட அண்டை நாடுகள் என்ற முறையில் தீர்த்துக் கொள்ள முயன்று வருகிறோம் என்று உயர் ஸ்தானிகர் கூறினார். இந்திய சமூகத்தவர்கள், ராஜதந்திரிகள் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், இந்திய பாதுகாப்புப் படை உறுப்பினர்கள், இலங்கை பிரஜைகளான இந்திய வம்சாவளியினர் மற்றும் அந்நாட்டு ஊடகத்துறையினர் என்று பலரும் கூடியிருந்த நிகழ்வில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

முன்னரும் இப்படியான நிகழ்வுகளில் முன்னாள் இந்திய ஸ்தானிகர்கள் உரைகள் நிகழ்த்தியிருக்கிறார்கள். அவை கடுமையானவையாகவும் சில சமயம் கருத்துச் செறிவுடையவையாகவும் இருந்ததுண்டு. ஆனால் காந்தா நாட்டின் சுதந்திர தினவிழாவில் இந்தக் கருத்தை ராஜதந்திரமான முறையில் வெளியிட்டிருப்பதானது முன்னொரு போதும் நடைபெறாதது- கவனத்துக்குரியதுமாகும்.

இந்திய ஸ்தானிகர் காந்தாவின் இந்தச் செய்தியானது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசுக்கு மிகத் தெளிவாகவே உறைத்துள்ளது. அரசின் உயர்மட்ட அளவுக்கு அதன் பிரதிபலிப்புகள் சென்றுள்ளன. அதன் மீது ஆழமான பகுப்பாய்வு விவாதங்களும் நடைபெற்றுள்ளன.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் பற்றி என்னதான் வெளியில் நல்லவைகள் கூறப்பட்டாலும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் புதிய மட்டத்திலான கீழ் நிலைக்குச் சரிந்துவிட்டன.

கடைசியாக ஏற்றப்பட்ட வைக்கோல் துண்டுதான் ஒட்டகத்தின் முதுகை முறித்தது என்று கூறப்படும் பழமொழிக்கு ஒப்பாகக் கொழும்பில் இந்தியாவுக்கு வழங்கப்படுவதற்காக இருந்த காணித்துண்டு ஒன்று இப்பொழுது சீனாவுக்கு வழங்கப்பட்டிருப்பதே முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது. இது தொடர்பான இந்தியாவின் கடுமையான எதிர்ப்பு புதுடில்லியிலுள்ள எமது ஸ்தானிகர் பணிமனையில் மட்டுமன்றி கொழும்பிலும் வெளிநாட்டமைச்சிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பெயர் குறிப்பிட விரும்பாத இலங்கை வெளிநாட்டு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

287 பேர்ச் காணித்துண்டு இப்பொழுது ஷோவாலங் அன்ட் ஹெட்ஜஸ் - பிஎல்சி நிறுவனத்துக்குரியது. இது சொத்து அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனமாகும்.

இது 162 வருடங்கள் பழமையான இந்த நிறுவனம் லீ ஹெட்ஜஸ் அன்ட் கொம்பனி லிமிட் நிறுவனத்தின் இணை நிறுவனமாக இருந்து வருகின்றது.

புதுடில்லியிலுள்ள இந்திய வெளியுறவு அமைச்சுக்குப் புதுடில்லியிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் பிரசாத் காரியவாசம் அழைக்கப்பட்டு இது பற்றிய எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் ஷோவாலங் அன்ட் ஹெட்ஜஸ் பிஎல்சி நிறுவனத்துக்குரிய காணியில் ஒரு துண்டைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அனுமதி வழங்குவதில் இலங்கை வெளியுறவு அமைச்சு கால தாமதம் காட்டி வருவது தொடர்பாக இந்தியாவின் கடும் அதிருப்தி அவருக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை இந்தியா எவ்வளவு பாரதூரமாக எடுத்துக் கொண்டுள்ளது என்பது புதுடில்லியிலும் கொழும்பிலும் அந்த நாடு ஆட்சேபனைகளை வெளிப்படுத்தியிருப்பதில் இருந்து புரிந்துகொள்ளலாம்.

பல வாரங்களாக ஷோவாலங் அன்ட் ஹெட்ஜஸ் பிஎல்சி நிறுவனத்தின் நிர்வாக சபை அதிபர் எஸ்.றிச்சார்ட் வாமதேவனுடன் ஸ்தானிகர் காந்தா குறித்த காணி குறித்து பேச்சு நடத்தி வந்துள்ளார். டுப்ளிகேஷன் வீதி முன்பக்கமாக இந்திய கலாசார மண்டபம் ஒன்று கட்டுவதற்காக ஒரு துண்டு காணியைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தப் பேச்சுகள் இடம்பெற்று வந்துள்ளன. இந்த நோக்கத்தில் இந்தக் காணியை ஒரு பேர்ச் ஏழு மில்லியன் ரூபா வீதம் பெற்றுக் கொள்வதற்குப் பேச்சு வார்த்தைகள் முடிக்கப்பட்டிருந்ததாக இந்தியாவின் வாதமாகும். இவ்வாறு இலங்கையில் வெளிநாட்டு தூதரகம் ஒன்று காணி வாங்குவதானால் வெளியுறவு அமைச்சின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். இதனால் இந்திய ஸ்தானிகரம் வெளியுறவு அமைச்சின் அனுமதிக்கு விண்ணப்பம் செய்திருந்தது. நடைமுறையிலுள்ள வழக்கமான செயற்பாடுதான் இது என்று ராஜதந்திரிகள் தெரிவிக்கிறார்கள். ஒன்றரை மாதங்களுக்கும் மேலாக வெளியுறவு அமைச்சு மௌனமாக இருந்து வந்துள்ளது என்று இந்தியா கூறுகிறது. எதுவித பதிலும் கிடைக்கவில்லை. அதேசமயம் சீன நிறுவனமான சைனா நேஷனல் ஏரோ ரெக்னொலொஜி இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் கேப்பரஷேன் என்ற நிறுவனம் அதன் பிரதான பணிமனையை இந்தக் காணியில் கட்டிக் கொள்வதற்கு வெளியுறவு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. டுப்ளிகேஷன் வீதியை நோக்கியுள்ள காணியில் 60 பேர்ச்சஸ் வழங்குவதற்கான ஏற்பாடாகும். இது சீனா அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் ஒன்றாகும் இது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட போரின்போது இராணுவ மற்றும் தொடர்புடைய உதவிகளை இந்த நிறுவனம் வழங்கியிருந்தது.

ஆனால் இதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுவித்தியாசமான விளக்கதைக் கொடுத்துள்ளது. ஷோவாலங் அன்ட் ஹெட்ஜஸ் நிறுவனத்துக்குரிய காணியில் ஒரு பகுதியை விற்பதற்கு எடுக்கப்பட்ட முடிவானது முழுக்கவும். அந்த நிறுவனத்தின் தனிப்பட்ட உரிமையாளர்களின் தீர்மானம் என்று பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அதில் எந்த வகையிலும் அரசு பங்களிப்பு வகிக்கவில்லை. தனிப்பட்ட உரிமையாளர்களிடம் சீன நிறுவனம் அந்தக் காணியை வாங்கியிருப்பதால் அவர்கள் அதற்கு உரிமையாளராகிறார்கள். அந்த வகையில் அவர்களுக்கு அதிகாரபூர்வ அனுமதி கிடைத்துள்ளது என்று அந்த அதிகாரி கூறினார். ஆனால் இந்த விளக்கம் எதுவும் இந்திய கவலையைப் போக்கியிருப்பதாகத் தெரியவில்லை. இந்தியா இன்னமும் கவலையிலேயே இருக்கிறது என்பதையே காந்தாவின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்தியா கொழும்பிலும் புதுடில்லியிலுமாக ராஜதந்திர முறையில் இரு ஆட்சேபனைகளைச் சமர்ப்பித்திருப்பதன் பின் விளைவுகள் குறித்து அரசின் தலைவர்கள் கடந்த வாரம் முழுவதும் ஆலோசனைகள் நடத்தியிருந்தார்கள். அந்த வகையில் எடுக்கப்பட்ட ஒரு முடிவுதான் இந்தியாவுடனான இருதரப்பு உறவுகளைக் கையாளும் மூவர் குழு அங்கு செல்வதை தாமதப்படுத்துவதாகும்.

இந்தக் குழுவில் இருப்பவர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியவர்களாவர். இவர்கள் மூவரும் அடுத்த மாதம் புதுடில்லிக்குச் செல்வதாக முடிவெடுக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் மூன்று மாகாண சபைகளின் தேர்தல்கள் நடைபெறவிருப்பதால் அவர்களின் பயணம் தாமதப்படுத்தப்பட்டிருப்பதாகப் புதுடில்லியிலுள்ள இலங்கை ஸ்தானிகர், இந்திய வெளியுறவு அமைச்சுக்கு அறிவித்துள்ளார். நவம்பர் முதலாம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டம் நடைபெறவிருப்பதையொட்டி இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவுகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக இவர்களின் பயணம் ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது உலக நாடுகள் தொடர்பான பருவகால ஆய்வுகள் நடைபெறவிருக்கின்றன.

இந்த ஆய்வுக் குழுவுக்கான உறுப்பு நாடுகளைச் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையே தன் விருப்பப்படி தெரிவு செய்து இருந்தார் என்பது தவறாகும்.

ஆய்வுக் குழுவுக்கான மூன்று உறுப்பு நாடுகளும் சீட்டிழுப்பின் மூலமே தெரிவு செய்யப்படுகின்றன. சபை இலங்கை தொடர்பாக நடத்தும் விவாதங்களை அவதானித்து அவர்கள் சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அவ்வாறு சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடுகள் இந்தியா, ஸ்பெயின் மற்றும் பெனின் என்பனவாகும். சபையில் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது இந்த அறிக்கை ஒரு வழிகாட்டியாக அமையும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகள் முறுகுநிலை அடைவதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியன் ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கியிருந்த ஒரு பேட்டியையும் காரணமாக சுட்டிக்காட்டப்படுகின்றது. கடந்த மார்ச் மாதம் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னர் முதல் தடவையாக இந்தியா பற்றி ராஜபக்ஷ வாய்திறந்து குறை கூறியிருந்தார். அது இந்திய மத்திய அரசுக்கு ஒரு இறுக்கமான செய்தியை வழங்குவதாக இருந்தது.

இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்கி வந்திருக்குமானால் மனித உரிமைகள் சபையில் ஒரு தீர்மானம் இலங்கைக்கு எதிராக வந்திருக்கமாட்டாது என்று அவர் கூறியிருந்தார். தீர்மான வாசகத்தை தணியச் செய்வதற்கு இந்தியா உதவி புரிந்துள்ளது என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந்தியா அமெரிக்க தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்தது தொடர்பான ரைம்ஸ் ஒப் இந்தியா கேள்விக்கு ஜனாதிபதி அளித்திருந்த பதில் வருமாறு:-

அந்தத் தீர்மானத்திலிருந்து நாம் விலகிச் செல்வதுதான் இனி நல்லது. நல்லெண்ணங்களும் நடவடிக்கைகளும் வரவேற்கத்தக்கவையே.

ஆனால், இந்தியா எம்முடன் இருந்திருக்குமானால் கால அவகாசம் வேண்டும் என்ற எமது கோரிக்கையை இந்தியா ஆதரித்திருக்குமானால் யாருக்குத் தெரியும் அப்படி ஒரு தீர்மானமே வந்திருக்காது. இந்தப் பிரதேசம் இந்தியாவை எதிர்நோக்கி நிற்கின்றது. அண்டை நாடுகளுடன்தான் நடந்து கொள்ளும் முறை சரியா? இல்லையா? என்பதை இந்தியா நினைத்துப் பார்க்க வேண்டும் என்றார்.

# அடிப்படை வசதியின்றி மீளக்குடியமர்ந்த மக்கள்

*புதுக்குடியிருப்பு,ஓக.22*

***புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த சிவநகர் கிராம சேவகர் பிரிவில் மீள்குடியமர்த்தப்பட்ட சுமார் 250 குடும்பங்கள் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி மரநிழல்களிலும், சிறுசிறு குடிசைகள் அமைத்தும் வாழ்ந்து வருகின்றார்கள். நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில்தங்கியிருந்த பின்னர் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களே இவ்வாறு அவதிப்படுகின்றனர்.***

வாழ்விடமின்றித் தவிக்கும் இவர்கள், மழை காலம் நெருங்குவதால் தற்காலிக குடிசைகளை அமைப்பதற்கு உதவுமாறு பொது நிறுவனங்களின் உதவியை நாடியுள்ளனர்.

செட்டிகுளம் முகாமில் தங்கியிருந்த சிவநகர் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 141 குடும்பங்கள் அரசால் அழைத்துச்செல்லப்பட்டு சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா உடன் வழங்கப்பட்ட துடன் தற்காலிக குடிசைகள் அமைப்பதற்கான உதவிகளும் வழங்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இதே கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களைச் சொந்த இடங்களில் மீள்குடியமருமாறு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 250 குடும்பங்கள் வரை சிவநகர் கிராமத்தில் மீள்குடியமர்ந்துள்ளனர்.

மீள்குடியமர்த்தப்பட்ட இவர்களுக்கு அடிப்படை வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை. மர நிழல்களிலும் சிறுசிறு குடிசைகள் அமைத்தும் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

எனவே மழைகாலம் நெருங்குவதால் தற்காலிக குடிசைகளை அமைப்பதற்கான உதவிகளை வழங்குமாறு பொது நிறுவனங்களைப் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுள்ளனர்.

(ம-115)

*கிளிநொச்சி ஊற்றுப்புலம் பழைய கொலணிக்குச் செல்லும் பாலம் சைக்கிள் கூட செல்லமுடியாதுள்ளது.* (எ-6)

## கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் திருவிழா இன்று ஆரம்பம்

கிளிநொச்சி, ஓக.22

வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் வருடாந்தமகோற்சவ திருவிழா இன்று ஆரம்பம்.

நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 29 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 30 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 31 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ-6)

## மீள்குடியமர்வுக்கான பதிவுகள் கைவேலியில் இன்றும் நாளையும்

**இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களில் மெனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த குடும்பங்கள் கடந்த வாரம் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டனர்**

வவுனியா,ஓக.22

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மக்களையும், மல்லிகைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த மக்களையும் மீள்குடியமர்த்துவதற்கான பதிவுகள் இன்றும் நாளையும் கைவேலி கணேசா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

புதுக்குடியிருப்பு கிழக்கு மற்றும் மல்லிகைத்தீவு கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களில் மெனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த குடும்பங்கள் கடந்த வாரம் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கியுள்ள இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இதுவரை மீள்குடியமர்த்தப்படவில்லை. இவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவதற்கான பதிவுகளே இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன.

இந்த அடிப்படையில் புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கான பதிவுகள் இன்று புதன்கிழமையும், மல்லிகைத்தீவு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கான பதிவுகள், நாளை வியாழக்கிழமையும் கைவேலி கணேசா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் குறித்த தினங்களில் அவர்களது மீள்குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறும். பதிவு நடவடிக்கைகள் நிறைவடைந்ததும் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படுவர் என்றும் முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மந்துவில், ஆனந்தபுரம் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் இந்த வருடம் மீள்குடியமர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதும், அதற்கான கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் சிபார்சு நேற்று வரை அவர்களுக்கு கிடைக்கவில்லை என செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-400)

## திருக்கேதீஸ்வர மறுசீரமைப்புப் பணியை ஆரம்பித்து வைத்தார் இந்திய அமைச்சர்

மன்னார், ஓக.22

திருக்கேதீஸ்வரம் சிவன் கோயிலின் மகா மண்டபத்தை கருங்கல்லினால் அமைப்பதற்கான திருப்பணிக்கு 365 மில்லியன் இந்திய ரூபாவைவழங்கியுள்ள இந்திய அரசு அதன் முதற்கட்ட வேலைகளை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தது.

புத்த பெருமானின் புனித சின்னங்களை இலங்கைக்கு எடுத்து வந்துள்ள இந்திய கலாசார அமைச்சர் குமாரி செல்ஜா உத்தியோகபூர்வமாக ஆலயத்தின் மகா மண்டப திருப்பணி வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த ஆலயத்தின் கருவறையும் ஏனைய முக்கிய இடங்களும் கருங்கல்லினால் அமைக்கப்பட்டிருக்கின்றன. அடுத்ததாக மகா மண்டபமும் கருங்கல்லினால் அமைய வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(10)

# மீளக்குடியமர்ந்த 50 குடும்பங்களுக்கு வீடமைக்க காணிகள் வழங்கப்பட்டன

முல்லைத்தீவு, ஓக.22

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியமரச் சென்ற 50 குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்காகக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் புதுக்குடியிரப்பு பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந்த் மேற்கொண்டுள்ளதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட மக்கள் தங்கள் காணிகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து செட்டிகுளம் அகதி முகாம்களில்தங்கியிருந்த புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்கள் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு அழைத்து வரப்பட்டுசொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

மீள்குடியமர்த்தப்பட்ட இவர்களில் புதுக்குடியிருப்பு மேற்கைச் சேர்ந்த 36 குடும்பங்கள், புதுக்குடியிருப்பு கிழக்கைச் சேர்ந்த 14 குடும்பங்கள் சொந்தக் காணி இல்லாமல் வாழ்விடங்களை அமைக்க முடியாமல்திண்டாடி வந்தனர்.

இவர்களின் நிலைப்பாடு குறித்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலருக்கு அறியப்படுத்தியதைத் தொடர்ந்து அவர் எடுத்துக் கொண்ட உடனடி நடவடிக்கையால் கோம்பாவில் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள திம்பிலிக் கிராமத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 1/4 ஏக்கர் வீதம் வீடு கட்டுவதற்குக் காணி வழங்கப்பட்டுள்ளது. (எ)

## உதயன் தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாள் - II இன் விடைகள்

### வினாத்தாள் 2 இல் வெளியான வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. 2 | 02. 2 | 03. 4 | 04. 3 | 05. 2 | 06. 1 | 07. 3 | 08. 1 | 09. 2 | 10. 3 |
| 11. 3 | 12. 2 | 13. 4 | 14. 4 | 15. 2 | 16. 2 | 17. 1 | 18. 4 | 19. 1 | 20. 2 |
| 21.2 | 22. 3 | 23. 1 | 24. 1 | 25. 2 | 26. 2 | 27. 3 | 28. 4 | 29. 2 | 30. 3 |
| 31. 4 | 32. 3 | 33. 3 | 34. 3 | 35. 3 | 36. 1 | 37. 2 | 38. 3 | 39. 1 | |

40. இலக்கம் 21 சுற்றி வட்டமிடுக.

### வினாத்தாள் 02 இல் வெளியான II இற்கான விடைகள்

01. 1) பத்திரிகை 2) பார் 3) நித்திரை / உறக்கம் 4) கெட்ட 5) வீழ்ச்சி 6) கதிர் + ஒளி 7) ஊர்களை 8) பிறந்த 9) ஒன்றன்பால் 10) நீ 02. 1) ஒருவரின் ஒரு நல்ல பண்பைக் கொண்டு அவரை மட்டிடலாம். 2) குழந்தையைப் பிரிந்த தாய் கண்ணீரும் கம்பலையுமாகக் கிடந்தாள் 03. 1) திறமை சாலி எதைக் கொண்டு சாதிப்பான் 2) அனுபவமற்ற கல்வி அறிவு பயன்தராது 04. 1) பழையவை 2) நிலத்தில் 3) அண்ணாந்து 05. 1) Chair 2) Bicycle 3) Hen 06. 1) எனக்கு உங்களால் உதவ முடியுமா? 2) வரிசையாக நில்லுங்கள் 3) நீங்கள் எங்கே வசிக்கின்றீர்கள் 07. 1) உங்களது பெயர் என்ன? 2) எனது பெயர் பிரியந்த 08. 2 09. 3 10. 1 11. 3 12. 2 13. 1 14. 2 15. 4 16. 2 17. 1 18. 4 19. 1 20. 3 21. 4 22. 3 23. 2 24. 2 25. 4 26. 4 27. 2 28. 1 29. 2 30. கண்டங்கத்தரி 31. ஆடாதோடை 32. அகத்தி 33. எருக்கலை 34. 05 35. 11 36. 07 37. 06 38. 3.5cm 39. 8 நாள் 40. 44 cm 41. 58 $cm^2$ 42. 16 போத்தல்கள் 43. ஏதாவது ஒரு பகுதியை நிழற்றி இருத்தல் 44. 12 km 45. 4.45 குறித்து காட்டுதல் 46. ரூபா 157.50 47. 128 km 48. 1) 110 2) 15 3) ரூபா 1407.00 4) 11 5) பொருத்தமாக நிழற்றுதல் 49. பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக.

தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்ற உள்ள வடமாகாணத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளுக்கான வதிவிட பயிற்சி முகாமில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இரண்டாம் நாள் பயிற்சி நிகழ்வில் தேசிய மெய்வன்மைப் பயிற்றுநரும், கியூபா நாட்டில் இருந்து வந்துள்ள மெய்வன்மைப் பயிற்சியாளரும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் சிறப்புப் பயிற்சிகளையும், போட்டி நுணுக்கங்களையும் பயிற்று வித்தனர்.

### வவுனியா பிறிமியர் லீக்

# குட் ஸ்ரார், கலைமகள் வெற்றி

வவுனியா பிறிமியர் லீக் தொடரில்கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற போட்டி களில் குட் ஸ்ரார் விளையாட் டுக் கழகமும், கலைமகள் விளையாட்டுக்கழகமும் வெற்றியீட்டியுள்ளன.

முதலில் நடைபெற்ற போட்டியில் வானவில் விளை யாட்டுக்கழகமும், குட் ஸ்ரார் விளையாட்டுக்கழக மும் மோதிக்கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வானவில் அணி முத லில் துடுப்பெடுத்தாடியது. 17.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் வானவில் அணி சகல இலக்குகளையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் தரு 31 பந்து களில் 28 ஓட்டங்களையும், வினோத் 17 பந்துகளில் 21 ஓட்டங்களையும், கஜா 11 பந்துகளில் 14 ஓட்டங் களையும் தமது அணி சார்பா கப் பெற்றனர்.

பந்து வீச்சில் குட் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பாக அம்பி 32 ஓட்டங் களைக் கொடுத்து 3 இலக்கு களையும் யோன்சன் 4 ஓட் டங்களைக் கொடுத்து 2 இலக் குகளையும் வீழ்த்தினர்.

114 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குட் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் 17 பந்துப் பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.

அந்த அணி சார்பாக தயா 34 பந்துகளில் 54 ஓட்டங் களையும் ,ரேகன் 16 பந்து களில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் வானவில் விளையாட்டுக்கழக அணி சார்பாக மாறன் 16 ஓட்டங் களைக் கொடுத்து 2 இலக்குக ளையும் புரட்சி 16ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாய கனாக குட் ஸ்ரார் விளை யாட்டுக்கழக அணி சார்பாக அதிரடியாக ஆடி அரைச் சதத்தைப் பெற்ற தயா தெரி வானார்.

இன்னொரு ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழகமும் ப்ரட்ண்ஸ் விளை யாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ப்ரட்ண்ஸ் விளையாட்டுக்கழகம் முத லில் துடுப்பெடுத்தாட தீர்மா னித்தது. கலைமகள் அணி யின் பந்து வீச்சில் ஓட்டங் களை எடுக்கத் திணறிய ப்ரட்ண்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 108 ஓட் டங்களையே பெறமுடிந்தது.

இதில் தினேஸ் 20 பந்து களில் 24 ஓட்டங்களையும் , சுபாஸ் 14 பந்துகளில் 15 ஓட் டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கலைமகள் விளையாட்டுக்கழக அணி சார்பாக வினோத் 16 ஓட்டங் களை கொடுத்து 3 இலக்கு களையும், ரவி ,இருதயராஜ் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் வீழ்த்தி னர்.

109 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடியது கலைமகள் விளையாட்டுக்கழக அணி. எனினும் இந்த எளிதான இலக்கை அடைய ப்ரட்ண்ஸ் அணியின் பந்து வீச்சாளர்கள் தடையாக இருந்தார்கள். இலக்குகள் சீராக வீழ்ந்த வண்ணம் இருந்தன. ஓட்டங் களை எடுப்பதற்கும் கலை மகள் வீரர்கள் சிரமப் பட்டார் கள். எனினும் 19.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து கலை மகள் அணி வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் வினோ 33 பந்துக ளில் 32 ஓட்டங்களையும் , நிஷாந்தன் 12 பந்துகளில் 21 ஓட்டங்களையும், இருத யராஜ் 27 பந்துகளில் 19 ஓட் டங்களையும் தமது அணி சார் பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் ப்ரட்ண்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக சன்ஜீ 25 ஓட்டங் களுக்கு 3 இலக்குகளையும், சுபாஸ் 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக கலைமகள் விளை யாட்டுக்கழக அணியைச் சேர்ந்த வினோத் தெரிவா னார். (ங-400)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட் டித் தொடரை நடத்தி வருகிறது. இன்று புதன்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

பொம்மர்ஸ் வி.க. எதிர் திக்கம் வி.க.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடனும் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடனும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன் கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபெறும் அணியின் விவரம் வருமாறு -

*உடுப்பிட்டி யுத் வி.க. எதிர் மணற்காடு சென். அன்ரனிஸ் வி.க.

*கலைமதி வி.க. "ஏ" அணி எதிர் கருணாகரன் வி.க. "ஏ" அணி. (ங-23)

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால், விளையாட்டு உத்தியோகத்தர்கள், மாவட்ட பயிற்றுநர்கள், மாவட்ட விளை யாட் டுத்துறை அதிகாரிகள் என்போருக்கான காலணிகள், அலு வலக பைகள் போன்றன யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அரு மைநாயகம் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் இடம்பெற்றநிகழ்வின்போது வழங்கப்பட்டன. (ங-23)

### ஆவரங்கால் மத்திய வி.க.வின் கரப்பந்து; இறுதியாட்டம் இன்று

# சம்பியன் வேட்டை தொடருமா, முற்றுப்புள்ளி விழுமா?

ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க

உடுப்பிட்டி நவஜீவன் வி.க

யாழ்ப்பாணம், ஒக. 22

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வட மாகாண ரீதியில் நடத்தும் மின்னொளியிலான கரப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை ஆவ ரங்கால் மத்திய விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த இறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன் விளை யாட்டுக்கழக அணியும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி யும் மோதவுள்ளன. அண் மைக் காலமாக கரப்பந் தாட்டப் போட்டிகளில் தொடர்ச்சியாக சம்பியனாகி சாதனை படைத்துவரும் ஆவரங்கால் இந்து இளை ஞர் அணி இந்தப் போட்டியி லும் தன்னுடைய சம்பியன் வேட்டையைத் தொடருமா அல்லது அந்த அணியின் தொடர் வெற்றிக்கு நவஜீவன் அணி முற்றுப் புள்ளி வைக் குமா என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகவே இருக் கிறது.

இறுதியாட்ட நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண விளையாட்டுத்து றை பணிப்பாளர் எஸ். அண் ணாத்துரை , சிறப்பு விருந் தினர்களாக அச்சுவேலி இலங்கை வங்கி முகாமை யாளர் குகனேந்திரன், யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் ஈ.ஈஸ்வரராஜா, கௌரவ விருந்தினர்களாக அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஸ்ரீ நிசங்க, கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தி யோகத்தர் ஆர். அகலியா, ஆவரங்கால் மேற்கு கிராம சேவையாளர் ரி.சியமளா, கோப்பாய் பிரதேசெயலக இளைஞர் தேசிய மன்ற அதிகாரி சண்முகவேல், ஆவரங்கால் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க தலைவர் எஸ்.தங்கராஜா, கனடா மத் திய விளையாட்டுக்கழக உறுப்பினர் செல்வச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ங-23)

# நஹநஹிர நாஹாஸ் முதல் தோல்வி

எஸ்.எல்.பி.எல். தொடரில் வயம்பவுடனான ஆட்டத்தில் கிழக்கு மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் அணி யான நஹநஹிர நாஹாஸ் அணி தோல்வியடைந்தது. அந்த அணி விளையாடிய மூன்று ஆட் டங்களில் வெற்றி பெற்றிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் தனது முதலாவது தோல்வி யைச் சந்தித்தது. வயம்ப அணி நேற்றுமுன்தினம் பெற்றுக் கொண்ட வெற்றியுடன் தான் விளையாடிய 4 ஆட்டங்களி லும் வெற்றியைப் பெற்றுள் ளது.

எஸ்.எல்.பி.எல். தொடர் இலங்கையில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் மத்தியூஸ் தலைமை யிலான நஹநஹிர நாஹாஸ் அணியும் மஹேல ஜெயவர் தன தலைமையிலான வயம்ப அணியும் பள்ளேகலவில் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வயம்ப அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தமிம் இக்பால், கம்ரான் அக்மல் களமிறங்கினர். இருவருமே அதிரடியாக ஆடினர். கடந்த ஆட்டத்தில் அரைச் சதம் அடித்து அசத்திய அக்மல் இந்த முறை 11 ஓட்டங்களுடன் ஏமாற்றி னார். தொடர்ச்சியாக சொதப்பி வரும் அணித்தலைவர் மஹேல களமிறங்கினார். வந்தவர் நஹநஹிர அணியின் பந்து வீச்சை தொடர்ந்து போட்டுத் தாக்கினார். மஹேலவின் அதிரடி முழக்கத்தால் அரங்கு அதிர்ந்தது. இரண்டாவது இலக்குக்கு தமிம் இக்பாலுடன் 48 பந்துகளில் 66 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகி ரப்பட்ட நிலையில் இக்பால் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார்.

இருப்பினும் மஹேல ஆட் டமிழப்பை பொருட்படுத்தாது தொடர்ந்தும் தனது அதிரடி வேட்டையத் தொடர்ந்தார். மஹேலவுக்கு இணையாக வீரவர்த்தனவும் இணைந்து அதிரடியில் போட்டுத் தாக்கி னார். இவர்களது அதிரடியால் அணி வேகமாக ஓட்டங்க ளைக் குவித்தது. வீரவர்தன 24 பந்துகளில் 36 ஓட்டங்களை விளாசிய நிலையில் வெளி யேறினார். தொடர்ந்து நுழைந்த அஷார் மஹமூட் 4 ஓட்டங் களுடன் வெளியேறினார். இறுதி வரையில் அதிரடியாக ஆடிய மஹேல ஆட்டமிழக் காமல் 50 பந்துகளில் 5 சிக் ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங் கலாக 96 ஓட்டங்களை விளா சினார்.

பந்து வீச்சில் அஜந்த மென் டிஸ் 2 இலக்குகளைக் கைப்பற் றினார்.

பதிலுக்கு பிரமாண்ட இலக்கை விரட்ட அஹமட் செஹாட், பிரிட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் கள மிறங்கினர். இருந்தும் செஹாட் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து சொதப் பினார். இருந்தும் அதிரடியாக ஆடிய பிரிட் 19 பந்துகளில் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார். ஜெயசுந்தர 13 ஓட்டங்க ளுடன் ஆட்டமிழந்த பின்னர் அணி தொடர்ச்சியாக இலக்கு களை இழந்தது. அணித் தலை வர் மத்தியூஸும் ஏமாற்றி னார். இருந்தும் தனித்து நின் றாடிய அஞ்சலோ பெரேரா 39 பந்துகளில் 48 ஓட்டங்களை ஆட் டமிழக்காது பெற்றுக் கொடுத்தார்.

இறுதியில் 19.5 பந்துப் பரிமாற்றங்களில் 134 ஓட்டங் களுக்குள் சகல இலக்குகளை யும் இழந்து 56 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் தஸாநாயக்க 3 இலக்கு களைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக மஹேல தெரிவா னார். (5)



# கந்துரட்ட அணி சாதித்தது

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கந்து ரட்ட வொரியர்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது. றுகுண ரோயல்ஸ் அணிக்கெதிராக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கந்துரட்ட வொரியர்ஸ் அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற் றது.

கண்டி புள்ளேகல மைதா னத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சி யில் வெற்றிபெற்ற கந்துரட்ட வொரியர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித் தது.

இதன்படி துடுப்பெடுத்தா டக் களமிறங்கிய கந்துரட்ட வொரியர்ஸ் அணி 19.2 பந் துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ச்சியான இடைவெளி களில் இலக்குகளை இழந்த கந்துரட்ட வொரியர்ஸ் அணி ஒரு கட்டத்தில் 9 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதிலும், 10 ஆவது இலக்குக்காக 19 ஓட் டங்கள் பகிரப்பட்டு ஓரளவு போட்டித் தன்மையான ஓட்ட எண்ணிக்கை பெறப்பட்டது.

துடுப்பாட்டத்தில் கந்து ரட்ட வொரியர்ஸ் அணி சார் பாக ஜீவன்த குலதுங்க 31 ஓட் டங்களையும், கித்துருவன் விதானகே 31 ஓட்டங்களை யும், திஸ்ஸர பெரேரா 17 ஓட் டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில்றுகுண ரோயல்ஸ் அணி சார்பாக டில்ருவான் பெரேரா 21 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், இம்ரான் கான் 33 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், லசித் மலிங்க, ஜெரோம் ரெய்லர், சயிட் அப்ரிடி ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

143 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய றுகுண ரோயல்ஸ் அணி ஆரம்பம் முதல் இலக்கு களை இழந்து 17.2 பந்துப் பரி மாற்றங்களில் சகல இலக்குக ளையும் இழந்து 100 ஓட்டங் களைப் பெற்று 42 ஓட்டங்க ளால் தோல்வியடைந்தது.

அந்த அணி இணைப்பாட் டங்களைப் பகிரத் தவறியிருந் தது.

துடுப்பாட்டத்தில் றுகுண ரோயல்ஸ் அணி சார்பாக சயிட் அப்ரிடி 36 (16 பந்துகள்) ஓட் டங்களையும், லஹிரு திரிமன்ன 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கந்துரட்ட வொரியர்ஸ் அணி சார்பாக சொஹைல் தன்வீர் 3.2 பந்துப் பரிமாற்றங்களில் 4 ஓட்டங்க ளுக்கு 3 இலக்குகளையும், சயிட் அஜ்மல் 23 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றி னர்.

ஆட்டநாயகனாக 31 ஓட்டங்களைத் துடுப்பாட்டத்தி லும், இலக்குக் காப்பில் 3 பிடி களையும் பிடித்த கந்துரட்ட வொரியர்ஸ் அணியின் கித்து ருவன் விதானகே தெரிவானார். (5)



# சறுக்கியது மான்செஸ்டர்

பிறீமியர் லீக் உதை பந்துப் போட்டியில் நேற்று முன்தினம் இரவு பலத்த எதிர்பார்ப்புக்கிடையே மான் செஸ்டர் யுனைடெட், எவர்ட்டன் அணிகள் மோதின. லிவர்பூலில் உள்ள கூடிசன் பார்க் மைதானத்தில் நடந்த இந்த போட்டியை காண அரங்கம் நிரம்பி வழிந் தது. ஏனென்றால் மான் செஸ்டர் யுனைடெட் அணிக் காக ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ள ஆர்சனல் முன் னாள் தலைவர் ராபின் வான் பார்சி களம் இறங்கப் போகும் முதல் ஆட்டம் இது.

மான்செஸ்டர் யுனை டெட் அணியின் முதல் 11 பேர் அணியில் ராபின் வான் பார்சி களம் இறங்கவில்லை. முதல்பாதியில் இரு அணிக ளும் கோல் அடிக்கவில்லை. எனவே பிற்பாதி ஆட்டத் தில் அனல்பறந்தது. பிற் பாதியில் 57 ஆவது நிமி டத்தில் எவர்ட்டன் முதல் கோல் அடித்தது. இந்த கோலை மாரொன்ஸ் பெல்லானி அடித்தார். பதிலடி கொடுக்க மான்செஸ்டர் யுனைடெட் போராடியது. பிற்பாதியில் தான் மாற்று ஆட்டக்கார ராக பலத்த கரகோஷத்திற் கிடையே ராபின் வான் பார்சி களம் இறங்கினார். ஆயி னும் எவர்ட்டனின் தடுப் பாட்டத்தை உடைத்து மான் செஸ்டர் யுனைடெட் அணி யால் கடைசி வரை கோல் அடிக்க முடியவில்லை. இத னால் 90 நிமிட ஆட்ட முடி வில் எவர்ட்டன் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது. மான்செஸ்டர் யுனை டெட் அணிக்கு முதல் மோதல் சறுக்கலில் முடிந்தது. (5)

# காலிறுதியில் அடிவாங்கியது பாகிஸ்தான்

இளையோர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதிக்கு இந்திய அணி முன்னேறியது. நேற்றுமுன் தினம் நடந்த பரபரப்பான காலிறுதியில் பாகிஸ்தானை, ஒரு இலக்கு வித்தியாசத்தில் வீழ்த்தியது.

ஆஸ்திரேலியாவில், 19 வயதுக்குட்பட்டோருக்கான 8 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் காலிறுதியில் இந்திய அணி, பாகிஸ்தானை சந்தித் தது. நாணயச் சுழற்சி யில் வென்ற பாகிஸ்தான், துடுப்பாட் டத்தை தேர்வு செய்தது.

பாகிஸ்தான் அணிக்கு தொடக்கத்தில் அதிர்ச்சி காத் திருந்தது. ஆட்டத்தின் முதல் பந்துப் பரிமாற்றத்தை வீசிய சந்தீப், முதல் பந்தில் சமியை 'டக் அவுட்' செய்தார். ஐந்தா வது பந்தில் இமாம் உல்-ஹக்கையும், 'டக் அவுட்டாக் கினார்'. வகீத், 27 ஓட்டங்கள் எடுத்தார்.

மத்திய வரிசையில் சாத் அலி (1), ஜாபர் (8) சொதப் பினர். சல்மான், முகமது நவாஸ் இருவரும் அடுத்தடுத்து 'டக் அவுட்டாகினர்'. மந்த மாக ஆடிய அணித்தலைவர் பாபர், அரைச் சதம் (50 ஓட்டங்கள், 109 பந்துகள்) அடித்தார். கடைசி நேரத்தில் ஈசான் அடில், அதிரடியாக 35 ஓட்டங் கள் எடுத்தார். பாகிஸ் தான் அணி 45.1 பந்துப் பரி மாற் றங்களில் 136 ஓட்டங் களுக்கு சகல இலக்குக ளையும் இழந்தது. இந்தியா சார்பில் சந்தீப் சர்மா, ரவி கன்ட் சிங், தலா 3 இலக்கு கள் வீழ்த்தினர்.

போகிற போக்கில் எட்டி விடும் இலக்கை துரத்திய இந்திய அணிக்கு அணித் தலைவர் உன்முக்த் சந்த், 'டக் அவுட்டாகி' ஷொக் கொடுத் தார். சோப்ரா (4), விகாரி (0) அடுத்தடுத்து ஆட்டமிழக்க 8 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களை இழந்து தடுமாறியது.

விஜய் ஜோல் (36) ஓர ளவு கைகொடுத்தார். அபராஜித் (51), அரைசதம் அடித்து வெளி யேறினார். சிறிது நேரத்தில் ஸ்மிட் படேலும் (14) கிளம்ப, இந்திய அணிக்கு சிக்கல் ஏற்பட்டது. கமல் பாசி, ரவிகன்ட் சிங் இருவரும் 'டக்' ஆக, நெருக்கடி அதிகரித்தது.

ஒரு கட்டத்தில் 120 ஓட்டங்களுக்கு 5 இலக்கு கள் என்று வலுவான நிலை யில் இருந்த இந்திய அணி, அடுத்து 7 ஓட்டங்கள் எடுப்பதற்கும் மேலும் 4 இலக்களை இழக்க, வெற்றி மதில் மேல் பூனை யானது.

கடைசி நேரத்தில் 'டெபி லெண்டர்களான' ஹர்மீத் சிங், சந்தீப் சர்மா கைகொடுத் தனர். பொறுப்பை உணர்ந்து, ஒவ் வொரு ஓட்டங்களாக சேர்க்க, இந்திய அணி 48 பந்துப் பரி மாற்றங்களில், 9 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்கள் எடுத்து 'திரில்' வெற்றி பெற்று, அரை யிறுதிக்கு முன்னேறியது. ஹர்மீத் சிங் (13), சந்தீப் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்டநாயகன் விருதை அபரா ஜித், தட்டிச் சென்றார். (5)



# மீண்டும் அசத்துவேன்

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, மீண்டு வர முயற்சிப்பேன், என்று இஷாந்த்சர்மாதெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அடிலெய்டு டெஸ்டில் பங்கேற்றார் இந்திய அணியின்வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா. பின்னர் கணுக்கால் காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்த இவர், ஐந்தாவது ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின்னர், நியூசிலாந்து அணிக்கு எதிரான 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் இடம் பெற்றார்.

இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் நாளை, ஹைத ராபாத்தில் தொடங்குகின்றது. இதுகுறித்து இஷாந்த் சர்மா கூறியது:

பொதுவாக கிரிக்கெட் தொடர்களில் பங்கேற்கும் போது, பயிற்சியில் ஈடுபட சோம்பேறித்தனமாக இருக்கும். போட்டிக்குத் தயாராக தேவையான நேரம் கூட கிடைக்காது. எனது, சத்திரசிகிச்சைக்குப் பின்னர் கிடைத்த ஓய்வு, பலவிதத்திலும் உதவியாக இருந்தது.

உடற்தகுதியைமீண்டும்கொண்டுவரகடினமாக முயற்சித்தேன். இதற்காக பெங்களூர் தேசிய கிரிக்கெட் அகடமியில், அதிக நேரம் செலவிட்டேன். இப்போது தினமும் 10 முதல் 12 பந்துப் பரிமாற்றங்கள் வீச தயாராகி விட்டேன். இலக்கு வீழ்த்தும் திறமை வந்துவிட்டதாக உணர்கிறேன். இந்த கடின முயற்சிக்கு எதிர்வரும் தொடரில் பலன் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

டெஸ்ட் போட்டியில் மட்டும் பங்கேற்பது மகிழ்ச்சி என்று கூறினால், நான் பொய் சொல்கிறேன் என்று அர்த்தம். அனைத்து வித போட்டியிலும் இந்தியாவுக்காக பங்கேற்கவே விரும்புகிறேன். எதிர்வரும் நியூசிலாந்து தொடர், மிகவும் முக்கியமானது. இதில் சிறப்பாக செயல்பட்டு மீண்டு வர முயற்சிப்பேன். கண்டிப்பாக சாதிப்பேன்.

அதேநேரம், மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக டெஸ்ட்தொடரை இழந்துள்ளதால், நியூசிலாந்து அணியை எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. திடீரென எழுச்சிபெறுவதே இவர்களது வழக்கம். இந்த முறை கடும்போட்டியை தருவர் என்று எதிர்பார்க்கிறேன் - என்றார்.

# இலங்கைக்காக அர்ப்பணிப்புடனே விளையாடுகின்றேன்

இலங்கை சார்பாகப் போட்டியில் பங்குபற்றத் தான் எப்போதும் தயாராக இருப்பதாகவும், இலங்கை சார்பாகப் போட்டியில் பங்குபற்றும் போது 100 சதவீத அர்ப்பணிப்புடனேயே பங்குபற்றுவதாகவும் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்தார். தன்னுடைய அர்ப்பணிப்புப் பற்றிக் கேள்வியெழுப்புபவர்கள் தான் நாட்டிற்காகச் செய்தவற்றைப் பார்வையிடவில்லை எனத் தான் எண்ணுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் மாத்திரம் தான் இலக்குகளைக் கைப்பற்றுகிறேன், இலங்கை சார்பாகப் போட்டியில் பங்குபற்றும் போது இலக்குகளைக் கைப்பற்றுவதில்லை எனப் பலர் தன் மீது குற்றஞ்சுமத்துவதாகத் தெரிவித்த லசித் மலிங்க, கடந்த 2 வருடங்களில் உலகில் அதிக இலக்குகளைத் தானே கைப்பற்றியுள்ளதாகவும், அவ்வாறிருந்தும் தன் மீது இவ்வாறு குற்றஞ்சுமத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஒரு வீரராகத் தன்னால் முடிந்தளவு இலங்கைக்கான கடமைகளைத் தான் ஆற்றியுள்ளதாகத் தெரிவித்த லசித் மலிங்க, தான் இதுவரை செய்தவற்றைப் பற்றிக் கதைக்க விரும்பவில்லை எனவும் தெரிவித்தார். ஆனால் ஒரு ஆட்டத்தில் தான் இலக்குகளைக் கைப்பற்றாவிடில் பலர் பல்வேறுவிதமான விடயங்களைத் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டியிலிருந்து முழங்கால் உபாதை காரணமாகவே தான் ஓய்வுபெற்றதாகத் தெரிவித்த லசித் மலிங்க, அந்த உபாதையின் பின்னர் தனக்கு தேசிய ஒப்பந்தம் வழங்கப்படவில்லை எனவும், அது தன்னை அதிகமாகப் பாதித்தது எனவும் லசித் மலிங்க தெரிவித்தார். நாட்டுக்காகப் போட்டியில் பங்குபற்றும்போது தான் உபாதைக்குள்ளானதாகவும், எனினும் தான் மோசமான விதத்தில் நடத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இரண்டரை வருடங்களாகத் தான் டெஸ்ட் போட்டியில் பங்குபற்றவில்லை எனத் தெரிவித்த லசித் மலிங்க, அதன் பின்னர் முரளி தனது இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்ற வருமாறு அழைத்ததன் காரணமாகவே காலி டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்றச் சம்மதித்ததாகவும் லசித் மலிங்க தெரிவித்தார்.

அந்த ஆட்டத்தில் 7 இலக்குகளைக் கைப்பற்றி, 67 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்ட பின்னரே அனைவரும் தன்னைப் பற்றி மீண்டும் அறியத் தொடங்கினர், அதுவரை தன்னைப் பற்றி யாரும் கணக்கெடுத்திருக்கவில்லை எனவும் லசித் மலிங்க தெரிவித்தார்.

(5)


கடை வாடகைக்கு

யாழ். கன்னாதிட்டி வீதியில் இரண்டு மாடியுடன் கூடிய கடை உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
0775269182,
0774079078 (21975)(3.14)

விற்பனைக்கு

தரமான கருஞ் சல்லிகள் (½", ¾", 1", 1½", 4", 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
226- தொடர் இலக்க ½ வொடி லேடன் லொறி விற்பனைக்குண்டு.

(சி/2566)(9.14) தொடர்புகளுக்கு- 0775890730.

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா (PR சட்டரீதியாக பெறக்கூடியது)
நியூசிலாந்து குடும்பவிசா
(பட்டதாரிகள் டிப்புளோமாதாரிகள்)

சட்டரீதியான படிமுறையான ஆலோசனைகளுக்கு

புதன்கிழமைகளில் விடுமுறை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
(PV82703)

(21995) (15-14)

37, சிவகுருநாதர் ஒழுங்கை பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016

காணியும் வீடும் விற்பனைக்கு

குமரக்கோட்டம் அதிகாரி லேன், கோப்பாய் தெற்கில் 7½ பரப்பு காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை

தொடர்புகளுக்கு: 0778876105
(சி/2586)(3.14)

பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* Intructor (MSO, DTP) Full Time
* Intructor (Web designing) Part Time
* Intructor (Mobile Phone Rep) Part Time
* Accounts Clark

T.P:- 0770676871
No.09, Arasady Road, Jaffna. (22017)(3.14)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

Batch - 1: 25.08.2012 9.00 - 12.00
Batch - 2: 26.08.2012 3.00 - 5.00
Batch - 3: 27.08.2012 9.00 - 12.00

வெள்ளி முதல் ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

தேவை



வலிகாமத்தில்சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை, மாதகல், அராலி ஆகிய பகுதிகளில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளுக்கு பகுதிநேர விரிவுரையாளர்கள் தேவை.

தகுதியும் அனுபவமும் உடைய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஓய்வுபெற்றவர்களுக்கும் முன்னுரிமை உண்டு.

விண்ணப்ப முடிவுத் திகதி- (26.08.2012)
விண்ணப்பிக்க வேண்டிய முகவரிமுகாமையாளர்
கேற்வே ஆங்கில வள நிலையம்
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைநகல் 021222424 5
தொலைபேசி 0215675555

(சி/2571)15-14)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு
கணினி கற்கைகளுக்கு 100% Scholarship

பதிவுகளுக்கு இன்றே உங்கள் Name & index no என்பவற்றை 775520940 க்கு SMS அனுப்புங்கள்

கணினி மையம் கல்வியங்காட்டில்
243,Adiyapatham Road
Facebook : MCAI CAMPUS
Qualified Lectures panel, 12 Years Experience
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.